
# ஞானசம்பந்தம்

மலர் 14 ]  மன்மத ஆண்டு சித்திரைத்திங்கள் 10—5—55 [ இதழ்

திருக்கடவூரில் திருமுறை ஊர்வலம்



திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் இளவரசு, வித்துவான்.
ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்களும். அடியார்களும், பிறரும்

( வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான்

# உட்பொருள்


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | உலகானுபவம் ... | i-iii |
| 2. | தருமபுர ஆதீனம் குருபூஜை நிகழ்ச்சி ... | iv |
| 3. | திருவருட்பயன் ஆராய்ச்சி ... | 1 |
| 4. | தவம் ... | 9 |
| 5. | திருக்கேதார யாத்திரை ... | 16 |
| 6. | பூலோக விமர்சனம் ... | 40 |
| 7. | பூனையும் குரங்கும் ... | 43 |
| 8. | இலக்கியம் துலக்கும் எழிற்காஞ்சி ... | 49 |
| 9. | தமிழ்ச் செய்யுட்களில் எழுத்திலக்கணம் ... | 57 |
| 10. | திருக்களிற்றுப் படியார் ... | 60 |
| 11. | கலையுலகம் ... | 63 |
| 12. | அயல்நாட்டு மகளிர் விரும்பும் நமது ஆடை ... | 65 |
| 13. | மாசில் வீணை .... | 69 |
| 14. | ஆதீனத்திலும் ஆதீனதேவஸ்தானங்களிலும் | 76 |
| 15. | வருங்காலம் ... | 88 |


## கட்டுரை எழுதுபவர்க்கு

"ஞானசம்பந்தம்" திங்கள் வெளியீட்டிற்குச் சமயச்சார்புள்ள கட்டுரைகள் எழுதுவோர் நல்ல தாளில் இடையீடுதந்து ஒரு பக்கத்திலேயே எழுதுதல் வேண்டும் கட்டுரை நான்கு பக்கங்களில் முடிவதாக இருத்தல் நல்லது தொடர் கட்டுரை எழுதுவோர் இரண்டு இதழிற்குரிய முறையில் எழுதலாம். வெளியிடப் பெறுதவற்றை மீண்டும் பெற விரும்புவோர் போதிய அஞ்சற் பில்லைகள் அனுப்புக.

ஆசிரியர்,
"ஞானசம்பந்தம்"
தருமபுரம், மாயூரம் P. O.

399.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 14 } மன்மத ஆண்டு சித்திரைமீ 10—5—55 { இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## உலகானுபவம்

வைதிகம் என்றுல் இலௌகிகத்தின் முதிர்ச்சி என்பர் அறிஞர். அது போல யாத்திரை என்பது உலகானுபவம் - உலகப்படிப்பு எனலாம். இதன் மூலம் கல்வி கேள்வி காட்சி என்ற பல படியாலும் உணர்ந்து தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. உலகமே ஒரு சர்வ கலாசாலை போன்றது. கலாசாலைகளில் ஒரு சமயத்தில் ஒரு விஷயம் தான் கற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கும். யாத்திரையின் மூலமோ பல விஷயங்களை ஏக காலத்தில் அறிந்துகொள்ள வாய்ப்புண்டு. சர்வகலாசாலையில் படித்த பெரிய அறிவாளிகள் - பண்டிதர்கள் - இருந்து போதிப்பார்கள். ஆனுல் யாத்திரையிலோ படிப்பறிவே யில்லாத பாமரரிலிருந்து பெரிய படித்த மேதாவிகள் பலரும் நமக்கு அறிவு கொளுத்திகளாக அமைந்து விளங்குகிருர்கள். ஒவ்வொருவரும் மற்ற

வரிடம் காண முடியாத அனுபவ அறிவுவிளக்கம் தெரிய வரும். இவ்விதமாகப் பலரிடமிருந்தும் அரிதில் கிடைக்கக் கூடிய அறிவு நலத்தை நாம் அடையமுடியும். அதுவும் நம் இந்திய தேசத்தில் இதற்கு வாய்ப்பு அதிகம். இமயத்தி லிருந்து கன்னிவரை பல்வேறுபட்ட சமயாசாரங்கள், நாகரி கங்கள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், குண நல வேறு பாடுகள் உள்ளவர்களைப் பார்க்கிறோம். பழகுகிறோம். அத னால் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் அறிவின் தேட்டத்தில் ஆர்வம் உடையவர்களுக்கு விஷயம் ஏதாவது கிடைத்துக்கொண்டே இருக்கும்; ஊற்றுக் கண்ணிலிருந்து தண்ணீர் வந்துகொண்டே இருப்பது போல. ஆகவே யாத்திரையில் பலரையும் பார்க்கிறோம், பழகுகிறோம், கருத் துக்களைப் பரிமாரிக்கொள்ளுகிறோம். இதுவும் ஒரு கொள் வனை கொடுப்பனை தான். இதிலிருந்து படித்த விஷயங்களை அனுபவத்தில் வைத்துப் பார்க்கவும் வாய்ப்பேற்படுகிறது. ஆகவே மக்கள் ஒவ்வொருவரும் ஆயுளில் ஒரு தடவையே னும் நீண்ட யாத்திரை செய்துவரவேண்டும். மேலும் பல தட்ப வெப்ப நிலைகளில் சென்று வருவதாலும், பல தீர்த்தங் களில் நீராடுவதாலும் நம்முடைய ஆரோக்கியம் வளரும். அதனால் ஆயுள் வளர்கிறது. எந்த நிலையிலும் எதையும் தாங்கக்கூடிய உடல் வலிவையும் மன வலிவையும் கொடுக் கிறது. உணர்ச்சி வேகம் பண்பாடெய்துகிறது. எதையும் ஆய்ந்து அமர்ந்து தெரிந்துகொள்ளும் பொறுமை ஏற்படு கிறது. யாத்திரையினால் மனச்சாந்தி, சாந்தம், பொறுமை இவை உண்டாகின்றன. இவ்விதமாக நம்மை உருவாக்கிக் கொள்ள யாத்திரை அவசியம். குண நலமும், உண்மையும் தெய்வ நம்பிக்கையும், மக்களுக்குத் தொண்டு செய்வதில் ஆர்வமும், ஏனைய பிறவும் கிடைக்கின்றன. பெரியோர்கள் தரிசனம் கிடைக்க வழி ஏற்படலாம். அவர்கள் உபதேசம் கிடைக்கவும் வழி ஏற்படும்,எல்லாம் செம்மையாகப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழலாம். பொதுவாக யாத்திரை யினால் நமக்குத் தெய்வத் திருவருள் பூரணமாகக்கிடைக்கும். பேரின்பமும் கிடைக்கும் என்று தவஞானிகள் கண்டுசொல்லி வைத்திருக்கிறார்கள். மூர்த்தி, தலம் தீர்த்தம் முறையாகத்

தொடங்கினோருக்குச் சற்குருவும் வாய்க்கும் என்று தாயுமான அடிகள் சொல்லியிருப்பதையும் இங்கு நினைவில் கொண்டு வருதல் நலம்.

யாத்திரை இருவகையாலும் மேற்கொள்ளுதல் உண்டு. வேடிக்கையாகவும் பொழுதுபோக்காகவும் கருதிப்போதல் ஒருவகை. க்ஷேத்திரயாத்திரை, தீர்த்தயாத்திரை, மூர்த்திதரிசனம் கருதிச்சேறல் மற்றொருவகை, இரண்டிலும்நமக்கு அனுபவ அறிவு பெறவாய்ப்புண்டு. ஒருகுறிப்பிட்டபலனை இச்சித்து யாத்திரை செய்வதைவிட நிஷ்காம்யமாகச் செய்வது மிக மேலானது. ஏன் என்றால் இறைவன் நம்முடைய செயல் ஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறான். அவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவன் செய்விக்க நாம்செய்கிறோம். இங்கு காம்யத்திற்கு இடமில்லை. காம்யம் எழுவது மலச் சேட்டையினால். காமியத்தழுந்தியவர்கள் அதனால்வரும் சிறு நன்மைகளையும் பெருந்தீமைகளையும் அனுபவிக்கவேண்டும். ஆகவே இச்சை கூடாதென்பதென்க. இதனை மணிவாசகர். "வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்டமுழுதும் தருவோய்நீ... வேண்டும்பரிசு ஒன்றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே" என்ற திருவாசகத்தில் குறித்துள்ளது ஊன்றி நோக்குதற்குரியது. வள்ளுவரும் "பற்றுகபற்றற்றான்பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என அறிவிக்கிறார். 'நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்பதாகத்தன் செயலற்றுத் திருவருள் உணர்வோடு யாத்திரையில் ஈடுபடுவோமானால் அவனருளால் அனைத்துங் கைகூடும். இன்பம் செல்வம் எல்லாமும் அவனேயாகலின் நம் தகுதிக்கேற்ப ஆசைதீரக்கொடுப்பான். மூலபண்டாரம் வழங்குவான். நமையாளும் ஈசன் நினையாத முன்வந்து நிறுத்துவான். இறுதியாக அழியாத இன்பத்தை அளிப்பான்.

இவ்வளவு வளத்தையும் நல்கும் யாத்திரையை மேற்கொள்ளும்பொழுது காலத்தை வீணே கழிக்காமல் திருமுறையை ஓதலும், பிறரை ஓதச்செய்தலும், கேட்டலும், பிறரைக் கேட்பித்தலும் மிகமிக நல்லன, அப்பொழுதுதான் யாத்திரை பாரமில்லாமல் தெளிவாக எளிதாக இருப்பதைக் காணலாம். மக்கள் ஒவ்வொருவரும் தமது ஆயுட்காலத்தில் ஒருமுறையேனும் யாத்திரைசென்று திருவருள் நலம் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்களாக.

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

## ஸ்ரீ ஞானம்பிகா சமேத
## ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி கோயில்

# மஹோத்ஸவம்

நிகழும் மன்மதஸு வைகாசித்திங்கள் 19உ (2—6—55) குருவாரம் முதல் நடைபெறும். மஹோத்ஸவ நாட்களில், திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டுச் சொற்பொழிவுகளும், இன்னிசை யரங்குகளும், நாடகங்களும் நிகழும்.

11—6—55 சனிக்கிழமை

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

**குருபூஜைத் திருநாள்**

12—6—55 ஞாயிற்றுக்கிழமை

**பட்டணப்பிரவேசம்**

---

குருபூஜைத் திருவிழா விவரங்களைத் தனி நிகழ்ச்சி நிரலில் காண்க.

# திருவருட்பயன் ஆராய்ச்சி

தருமபுர ஆதீனப்புலவர், சித்தாந்தரத்நாகரம்,
திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

சைவ சந்தாநுசாரியருள் ஒருவராய ஸ்ரீமத். உமாபதி சிவாசாரியார் அருளிய திருவருட்பயனுள் 10, 13, 19, 28, 32, 38, 46, 56, 61, 84, 89, 91, ஆம் எண்ணுள்ள திருக்குறள்கட்குச் செம்பொருள் சிலருரையில் இல்லை. அவற்றுள் ஈற்றிற் குறித்த எண்ணுள்ள,

> ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்
> தூங்குவர்மற் றேதுண்டு சொல்

என்பதற்கு நிரம்ப வழகிய தேசிகர் அருளிய உரை பொருந்துகின்றது. 'சிந்தனையுரை உள்ளத்தில் இன்பு ஒடுங்க' என்பதற்கு வேறு கூறுகின்றது. 'தம்மிடத்திலே யுண்டான கெற்சிதமுங்கெட' என்ற அது பொருந்துவதன்று. ஸ்ரீ சிவஞான பாடியத்துள், (சமாஜப் பதிப்பு. பக்கம் 560. சூ. கக. அதி. க. முடிவு) "தற்போதம் முனையாதவாறு பரிகரித்துச் சிவஞானத்துள்ளடங்கிச் சிவாநுபவஞ் சுவாநுபூதிக மாம்படி ஞான நிலையிலுறைத்து நிற்றல்" என்றதை அக்குறட்குஞ் சார்த்தியுணர்த்தியதால், ஆசிரியர் ஸ்ரீ சிவஞான மாமுனிவரர் குறித்த பொருள், நிரம்ப வழகிய தேசிகர் கூறியதோ டொத்துளது. அன்றியும், சிவப்பிரகாசத்துப் பதினொன்ருவது சூத்திரத்து முதல் திரு விருத்தமான,

> "இங்குறு மாயை சேரா வகைவினை திரிவிதத்தால்
> நீங்கிட, நீங்காமூல நிறையிருள் இரிய, நேயத்
> தோங்குணர் வகத்த டங்கி உளத்துள் இன் பொடுங்க நேரே
> தூங்குவர் தாங்கி ஏகத் தொன்மையிற் றுகளி லோரே"

என்பதில், அத்திருவருட்பயனது (குறட்பாப்) பொருளை இனிது விளக்கியிருத்தல் காண்க. திருவருட்பயனுக்கு நிரம்ப வழகிய தேசிகர் அருளிய உரையே பெரிது சிறந்தது. அவருரை சில இடத்தில்தான் வழுவுற்றுளது. முதலில்,

"ஆசினவா நாப்பண் அடையா தருளினல்
வாசியிடை நிற்கை வழக்கு" (89)

என்னுந் திருவெண்பாப் பொருளை ஆராய்வாம்.

திருவைந்தெழுத்து எனப்படுவன (1) இறை (2) சத்தி (3) பாசம் (4) எழில் மாயை (5) ஆவி ஆகும். நான்காவது எண்ணு முறைமைக்கண் நின்ற மாயை நகரத்துள் நிற்ப தாதலின் அத் திரோதமும் ஆண்டையதே என்பது, "திருவெழுத்தைந்தில் ஆன்மாத் திரோதம் ஆசு அருள் சிவம் சூழ்தர நடுநின்றது" என்னுஞ் சிவப்பிரகாசத்தால் விளங்குவது உணர்க. (மாபாடியம். பக்கம். 380. சூ. 5. அதி 1.)

அவ்வைந்தனுள் ஆவி (ய) ஆன்து திரோதம் (ந) அருள் (வ) என்னும் இரண்டற்கும் இடையே அடையாமையும், அருள் (வ) சிவம் (சி) என்னும் இரண்டற்கும் இடையே அடைதலும் வேண்டும் என்பதே அத்திருக்குறளின் பொருளாகும். நவநாப் பண் அடைதற்கு ஆசு துணையாயிற்று. வசிநாப்பண் அடைதற்கு அருள் துணையாயிற்று. ஆசின் அடையாது அருளினல் நிற்கை என்பவை அதை உணர்த்துதல் அறிக. அடைதலுக்கு ஆசும் நிற்கைக்கு அருளும் துணையாதலால், உயிர்க்கு அவ் விருதுணையுள் வேண்டுவது முன்னதன்று. பின்னதே என்று பிரித் துணர்த்தும் பொருட்டும், வேதாகம வழக்கு ஆசு துணையாதலைக் குறித்திலது, அருள் துணையாதலையே வற்புறுத்திற்று என்பதை வலியுறுத்தும் பொருட்டும் 'வழக்கு' எனத் தெளிவுறுத்தி யருளினர் ஆசிரியர். அடையாது என விலக்கியும் நிற்கை என விதித்தும் இருத்தல் அறிக.

இத்திருப்பாட்டில் 'ஆசு' என்பதற்கு மலம் எனப் பொருள் கொள்ளல்வேண்டும். ஆசின்-மலத்தால், இவ்வாறு இன்னுரு பாக் கொள்ளாமல், ஆசு இல் எனப்பிரித்து, 'குற்றம் தீர்ந்த (திரோதானம்) என்று பொருளுரைத்தது சிறிதும் பொருந்தாது நிற்றற்கு 'அருளினல்' என ஏதுக் கூறினற் போன்று, அடைதற்கு 'ஆசின்' என ஏதுக் கூறினராதலாலும், ஆசிரியர் 'ஆசு' என்னும் சொல்லை மலம் என்னும் பொருளில் ஆளும் வழக்க முடையவராதலாலும் யாம் உரைத்ததே செம்பொருள் என்க.

"யானும், அருத்திமிக உரைப்பன்வளர் விருத்தம் நூறும்
ஆசில்சிவப் பிரகாசம் ஆகும் என்றே" (12) என்பதில்

ஆசின்மை (அமலம்) சிவப்பிரகாசத்திற்கு அடையாதல் உணர்க. இத்திரு விருத்தத்திலும் 'அன்றே' எனப் பிழைபடப் பாடங்கொண்டு வினைமுடிபு கெடச் செய்தனர். 'என்று உரைப்பன்' என முடிதலை அவர் அறிந்திடுவாரேல், அது செய்யார். (1) "ஆசிலா ஆன்ம லாபம்" (72) (2) முற்குறித்த "திருவெழுத்தைந்தில் ஆன்மாத் திரோதம் ஆசு அருள் சிவம் சூழ்தர நடுநின்றது" (92). (3) "ஆசுறு திரோத மேவா தகலுமா சிவமுன்னாக ஓசைகொள்" (93), (4) "ஆசுடன் அடங்கப் போக்குமவன்." திருவருட்பயன். (4), (5) "ஆசு ஆதியேல் அணுவ காரணம் என்?" (28), (6) "ஆசில் உருவம்" (88), (7) 'ஆசில் எழில் தடித்தயர' (கோயிற் புராணம், 9) என்று மலம் என்னும் பொருளில் ஆசிரியர் ஆசு என்னும் சொல்லை ஆண்டிருத்தல் காண்க.

திரோதானத்துக்கும் அருளுக்கும் நாப்பணிருத்தலாவது: நிவிர்த்தி மார்க்கத்தில் ஒழுகாது பிரவிர்த்தி மார்க்கத்திலொழுகிக்கொண்டு, பூதமும், பொறியும், கரணமும் போன போக்கில் தானுஞ்சென்று, தனக்குள் இருந்து திரோதானத்திற்சேற்ப உபகரித்து வரும் அருளை மறந்து, தான் திரோதானத்துள் அடங்கி, அது செலுத்தும் மலநடையை மேன்மேலும் விரும்பி, நிலை நிலையாமை புணர்ச்சியின்றிப் பற்றறாது துயருறல்.

அருளுக்கும் சிவத்துக்கும் இடை நிற்றலாவது: நிலை நிலையாப் பொருளுணர்ந்து, பற்றற்று, பசுகரணம் சிவகரணமாகப் பெற்று, வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து, பாசஞானம், பசுஞானம் இரண்டும் ஒழித்துச் சிவஞானத்தாலே மண்முதற் கரணமெல்லாம் அசத்தெனக் கண்டு, அவ்வோங்குணர்வினுள் அடங்கி, அடங்கிய தன்னுள் இன்பம் ஒடுங்கத் தூங்குதல்.

ஆசுறு திரோதம் மேவாது அகலும் வண்ணம் சிவமுதலாகத் திருவைந்தெழுத்தைச் சுத்தமான தத்தால் ஓசை கொண்டால், அத்திரோதம் ஆசினை ஒழித்து அருளாயோங்கி, அருணடையை

உயிர்க்கு ஆக்கும். மலநடை தவிர்ந்த உயிர் மீண்டும் அது சிவத்தை அருளும் வண்ணம் அவ்விருளைப் பற்று நின்று மற்றுப் பற்றின்றிக் கிடந்தால், இம்மையிலேயே சிவத்தினில் ஏகமாகும். இங்கு,

"மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசி மீளாவிடின்"
"விரியமந மேவியவை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரிற் பெறும்,"
"ஆராதி யாதாரம் அந்தோ அதுமீண்டு
பாராதும் மேல்ஓது பற்று"
"சிவமுதலே யாமாறு சேருமேல் தீரும்
பவம்இதுநீ ஓதும் படி"
"வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமும் ஆம் அங்கு"

என்னுந் திருவருட் பயனிலுள்ள திருப்பாடல்களை இங்கு உய்த்துணர்தல் நன்று.

"ஆசாதி யேலணைவ காரணமென் முத்திநிலை
பேசா தகவும் பிணி" 28

என்ற திருவெண்பாவுள் "அகவும் பிணி" என்னும் பாடம் பொருந்துவதாக இல்லை. அகவுதல் என்பதற்குக் கவர்ந்து கொள்ளுதல் என்ற பொருள் தமிழில் யாண்டுமில்லை. திருவருட் பயனுக்கு உரையிட்டருளிய சான்றோருள் ஒருவராய நிரம்பவழகிய தேசிகர் அகவும் பிணி எனக் கொண்டிருந்தாரெனக் கருதச் சிறிதும் இடம் இன்று. அவர் 'கவர்ந்துகொள்ளும்' என உரையிட்டருளியதால், அவர்க்கு அகவும் என்பது பாடம் அன்று. 'உரையாடாது கவர்தல்' என விசேடக் குறிப்பிற் காட்டித், 'தோன்றாது விரைவிற் கவர்தல்' என விளக்கமுஞ் செய்தார்.

சிந்தனையுரையாளர் 'மீளவும் வந்து பொருந்தும்' என்றருளினர். இவ்வுரைக்கும் அகவும் என்ற பாடம் பொருந்துகின்றிலது. சைவத் திருவாளர் சு. சிவபாத சுந்தரம் பிள்ளை அவர்கள் B. A. எழுதியவுரையில் 'அகவும் - திரும்பவும் பிடிக்கக்கூடும்' என்றுளது. இதில் பிடித்தல் என்பதற்கு

அகவல் உரித்தாகாது. பிடித்தலுக்கு ஏற்றவாறு அஃது அமைந் திருந்ததே எனினும், அகவும் எனல் பிழையுற்றதேயாகும்.

திருநெல்வேலிப்பேட்டை, திருவாளர். ஆ. ஈசுவரமூர்த்திப் பிள்ளை அவர்கள் (பதவுரை கருத்துரைகளுடன்கூடிய) பதிப்பில் அகவும் என்பதற்கு "(ஆன்மாக்களை) வந்து பந்தித்துக் கொள்ளும்" என்ற உரை காண்கின்றது. ஆண்டும் அகவும் எனல் பந்தித்துக்கொள்ளும் என்பதற்கு ஏற்றது அன்று. புகழுடலெய்திய J. M. நல்லசாமி பிள்ளை B. A., B. L., எழுதிய ஆங்கில வுரையில் "Such darkness may cover it" என்று இருக் கின்றது. இவ்வுரைகள் எல்லாவற்றையும் நோக்கினல் 'அகவும்' என்ற பாடம் பொருந்தாது என்று தெள்ளிதின் விளங்கும். விளங்கவே அதன் உண்மைப் பாடம் யாதென்று, ஆராய்தல்வேண்டும். கவர்தல், பிடித்தல், பந்தித்தல் என்ற பொருளை நோக்கின் அதன் உண்மையுருவம் புலப்படும்.

நிரம்பவழகிய தேசிகருரையே உண்மைப் பாடத்திற்கு ஏற்றது என்றும் அவர் காலத்தில் அப்பாடம் பிழைபட்டில தென்றும், பின்னோர் பலரும் உண்மைப் பாடத்தை யுணராமல் இடத்திற்கேற்பப் பொருள் கொண்டனரென்றும் பொரு ளுணர்வுதோன்ற எழுதினரல்லரென்றும் அத்திருக்குறளை அவர்காட்டிய வடிவத்தாலுணரலாம். 'அகவும்' என்ற பிழை பட்ட பாடத்தின் முன்பு, நிரம்பவழகிய தேசிகர்க்கும் அவர் முன்னோர்க்கும் 'கவ்வும்' என்ற பாடமே இருந்ததெனல் இனிது விளங்குகின்றது. அதனுற்றான் அவர்தம் உரையுள் 'கவர்ந்து கொள்ளும்' என்று பொருள் எழுதினர். அடுத்த குறளில் ஒளி கவராதேல் என்றுள்ள பொருத்தமும் காண்க. 'பேசாது கவ்வும் பிணி' என்ற பாடமே உண்மைப் பாடம் என்பதற்கு மெய்கண்ட சாத்திரங்களிலேயே மற்றோரிடம் சான்றுக நிற்கின்றது. அஃது உண்மை நெறி விளக்கத்தின் மூன்ருவது திரு விருத்தமான

"எவ்வடி வுகளுந்தானு மெழிற்பரை வடிவதாகிக்
கவ்வியமலத்தான் மாவைக் கருதியே யொடுக்கி ஆக்கிப்
பவ்வமீண்டகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவன் என்றே
செவ்வையே உயிருட்காண்டல் சிவரூபம் ஆகும் அன்றே"

H05



என்பதிற் ''கவ்வியமலம்'' என்றுளதாம். அந்நூலும் திருவருட் பயனை அருளிய ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியராலேயே செய்தருளப்பெற்றது என்பது முன்னோர் பலர் கொள்கையாதலின், ஆசிரியர் திருவாக்கு ஈரிடத்தில் ஒற்றுமைப்பட்டு நின்றன எனலாம். 'அகவும்' என்றது பிழையுடையது எனல் உறுதியாகும். தாயுமானவர் சின்மயாநந்தத்துள் ''கவ்வுமலமாகின்ற நாகபாசத்தினற் கட்டுண்ட வுயிர்கள் மூர்ச்சை கடிதகல வலியவரு ஞானசஞ்சீவி'' எனக்குருவை உணர்த்துவதறிக. மலநாகம் கவ்வுமென்ற நயத்தையறிந்தால் அப்பாடத்தின் பொருத்தம் புலப்படும். 'கவவு - அகத்திடுதல்' கவவும் - அகத்திடும். கவ்வும் என்பது அதன் மருஉ. இது தொல்காப்பியம் அறிந்தார்க்கு வெளிப்படும்.

அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல்

என்றுளது. இதனுள் முதலடி மூன்ருவது சீர் 'அகிலத்தில்' என்றிருத்தற்பாலது. சில பதிப்புகளில் மட்டும் 'அகிலத்தில்' என்றேகாணலாம். பல பதிப்புக்களுள் 'அகிலத்து' என்ற பாடத்தைக் கொண்டு பெரியது என்னும் எழுவாய்க்கு ஒரு பயனிலை காணுது, பயனிலையெனத் தடுமாறிய நிலை காணலாம். 'உலகத்தில்லை' என்ற அதனுரை (நி. அ. தே.)யை நோக்கி யுணர்க. அகிலத்து இல் - உலகத்தில் இல்லை.

பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள் 32

என்பதில், பெருக்க நுகர என்று எச்சவினையாக நிற்றலை யுணராது, பாடத்தைப் பிழைபடக்கொண்டு பல பதிப்புக்கள் நிலவுகின்றன. நிரம்ப வழகிய தேசிகர் பெருக்க—ஈட்டவும் (புண்ணிய பாவங்களை) வளர்க்கவும், நுகர — துய்க்கவும் (சுக துக்கங்களை) அருந்தவும் எனச் சூரியனுக்கும் அருளுக்கும் ஏற்பப் பொருள் கூறியது உணர்க. ''வினை—பெருக்குங்கால் புண்ணிய பாவங்கள், நுகருங்கால் சுக துக்கங்கள்'' என்றதும் அறிக. அதனல், 'நுகரவினை' என்றதே பிழையிலாதது.

ஊனறியா தொன்று முயிரறியா தொன்றுமிது
தானறியா தாரறிவார் தான் 33

என்னுந் திருவெண்பாவில் ஒன்றுதான் பிழை. அதிலுங் காலேதான். சொற்போக்கை நோக்கினும் தெளிவாகப் புலப்படும். "அசேதனங்களாகிய தத்துவங்கட்கு எஞ்ஞான்றும் அறிவுண்டாவதில்லை" என்ற (நி. அ. தே.) உரையை உற்றுணர்ந்தால் 'ஊனறியாதென்றும்' என்றே இருத்தல்வேண்டும். ஊன் என்றும் அறியாது. உயிர் ஒன்றும் அறியாது. அறிந்து அறிவித்துநிற்கும் அருளின்றேல் அறிவார் எவர்? ஊனறியாதென்றும், உயிரறியாதொன்றும், இவை தான் (அருள்) அறியாது, ஆர்தான் அறிவார்? என்ற சொற்றொடர்ப் போக்கும் பொருளுணக்கும் ஆர்தானறிவார்? எல்லாம் அத் திருவருளே அறியும்.

வெள்ளத்துள் நாவற்றி யெங்கும் விடிந்திருளாங்
கள்ளத் திறைவர் கடன் 33

என்பதில் உவமவுருபாகிய ஆங்கு என்பது, தமிழ் நூல்களுள் எங்கும் காண்கின்றதால் எங்கும் என்றுயிற்றுப்போலும். எங்கும் என்ற பாடத்தால், அத்திருப்பாட்டுரை அமைந்திருக்கும் நிலையை அறிஞர் சிறிது கடைக்கண்ணால் நோக்கினராயின், பெரிது வருந்துவர். நிரம்பவழகிய தேசிகருரை 'எவ்விடத்தும்' என்றிருத்தலால் அவர்க்கு 'எங்கும்' என்ற பாடமே இருந்தது எனல் விளங்கும். அது "பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" என்பதிற்போன்றுவந்த வினையுவமம். தலைவர் என்றதும் பாடம்.

"அன்ன ஆங்கு மான விறப்ப
வென்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தை நோக்குக.

இத் திருவருட்பயனில் வந்த அவ்வுவமம் திருவாசகத்துள் அவ்வடிவிலேயே இருந்த பெற்றியை யெண்ணி, ஆசிரியரால் அமைத்துக்கொண்டமையால் அதன் உண்மை வடிவம் வேறுபடற்கு இடனில்லை.

வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள்பெற்றுத் துன்பத்
விள்ளக்கி லேனை விடுதிகண்டாய்'' [தின்றும்

என்னும் (நீத்தல் விண்ணப்பம் - 15) மணிமொழியைக் காண்க.

வெள்ளத்துள் நின்றும் அதைப் பருகாது நாவற்றியது போல விடிந்தும் இருளாம் எனச் செம்பொருள் கொள்ளல் வேண்டும்; உயிர்க் குறையேயன்றி அருட்குறை அன்று என்று உணர்த்துங் குறளாதலின், நறுநீர் வெள்ளத்திலும் உண்டாகும் நாவறட்சியும் அருளின் தெருட்சியிலும் உண்டாகும் உயிர் மருட்சியும் ஒன்றே. வேறல்ல எனக் குறித்துக்காட்டி அறியாமையுள் இருக்குங் கள்ளத்திறைவரும் தற்கேடருமான உயிரார் குறைவையும் எங்கும் பேரொளியாய் அருக்கனென நிற்கும் அருளார் நிறைவையும் உணர்த்தும் அழகை உணர்க.

(தொடரும்)


## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

ஆண்டுக் கையொப்பம்

| | |
|---|---|
| உள்நாடு | ரூ. 1—8—0 |
| வெளிநாடு | ரூ. 2—0—0 |

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் *P. O.*

408

# தவம்

வித்துவான்

ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,

தருமபுரம் ஆதீனம்

நம்முடைய நாடு மிகப் புராதனம் வாய்ந்தது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே பல பெரியோர்கள், பல ஞானிகள் பல தவத்தோர்கள் வாழ்ந்த நாடு. இன்றும் வாழ்கின்ற நாடு. ஆத்மபலம் மிக்கவர்கள், மன ஒற்றுமை கொண்டவர்கள் அநேகம்பேர் வாழ்ந்தார்கள் அன்றைய நிலையிலே. ஆனால் இன்று நமக்கெல்லாம் மனம் ஒரு நிலையில் இருப்பதில்லை. இன்றைக்கு நாவற்பழத்தை நாடுகிறது. நாளைக்கு நாரத்தம் பழத்தை நாடுகிறது. நாடிப் பெற்ற உடனுவது நல்ல மகிழ்ச்சி இருக்கிறதா? பெறுவதற்கு முன்னிருந்த ஆர்வம் பெற்ற பிறகு இருப்பதில்லை. பெற்ற பிறகு, வெறுப்புக்கூடத் தோன்றி விடுகிறது. கைக்குக் கிடைத்த பலாப்பழம் கசக்கிறது. கிடைக்காத களாக்காய் இனிக்கிறது. இப்படியாக நம்மனம் ஒன்றைவிட்டு ஒன்றுபற்றி அலைந்துகொண்டே இருக்கிறது. இந்த நிலையை அநுபவ வாயிலாக, அறிந்த தவசிரேஷ்டர் ஒருவர்க்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. தன்மனத்தைப் பார்த்து அழைக்கின்றார். அதற்குப் பட்டம்வேறு சூட்டு கின்றார். "மனம் எனும் மூடக் குரங்குப் பயலே" என்று. இப்படி அலைகின்ற மனதிற்கு நிம்மதி உண்டா? நிம்மதி இல்லாத இடத்தில், ஆநந்தத்துக்குத்தான் எங்கே இடம் இருக்கப்போகிறது? அலைகின்ற கடல் கலங்கிக்கொண்டே இருக்கிறது. அலையாத கடலிடத்துத் தெளிவு இருக்கிறது. ஆழம் இருக்கிறது. அதுபோல, அலையாத மனத்திற்கும். உழைத்தவனுக்கு ஓய்வு, உணவு. பேசிக்கொண்டே இருப்ப வனுக்கு மௌனம் மருந்து. படித்துக் களைத்தவனுக்கு விளையாட்டு, விருந்து. பாலைவனத்தில் இருந்தவனுக்குத் தென்றல் வீசும் பசுஞ்சோலை, சொர்க்கலோகம். அதுபோல அலைகின்ற மனதிற்கு, அமைதி, தவப்பயன், ஆநந்தம்.

இந்த அமைதியைத்தான், தேடி அலைந்து திரிந்து கண்டு பிடித்த இளவரசர், கௌதமபுத்தர். உலகத்தில் கண்ட பல

வகைத் துன்பங்களையும் காணச்சகியாமல், தவவழி நின்றார். அதன் மூலம், தானும் அவ்வழியில் அமைதியின்படம் பெற்று, உலகமக்களையும் இன்புறச் செய்தார்.

அத்தகைய அலையா மனம் படைத்த தவசிரேஷ்டர்கள் அவ்வக் காலங்களில், யாராலும் அணுகமுடியாத காடுகளிலும் ஏறுதற்கரிய மலை முகடுகளிலும், நுழைதற்கரிய குகைகளிலும், வாழ்ந்து வந்ததாக நாம் படித்திருக்கின்றோம். அவர்களிற் பலர் சாவையே வென்றும் வாழ்ந்தார்கள். சாப வல்லமை பெற்றுப் பல சித்துக்களையும் கைவரப் பெற்றவர்களாய் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும், அரசுகளுக்கும் வேண்டிய அறிவுரை புகட்டி, நலங்கள் பல செய்து, பெருந் துணையாகவும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்திருக்கின்றார்கள்.

அவர்களுள், இன்றைக்குச் சுமார் 2500, ஆண்டுகளுக்கு முன், தமிழ்த்தாய் பெற்ற தவப்புதல்வராகத் தோன்றினார் திருவள்ளுவர். அவர்தம் திருக்குறளில், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்பற்றியும் கூறவந்தவர் வீட்டை வெளிப்படையாகக் கூறாது. அறத்தினுள் அடக்கி, முப்பால்களாக வகுத்தார். அறத்தினை, இல்லறம், துறவறம் என இரண்டு இயல்களாகப் பிரித்தார். இல்லறத்தைக் கூறி முடித்துத் துறவறத்தைப் பற்றிப் பேசவந்தபோது, விரதம் ஞானம் என இரண்டாகப் பிரித்து, விரதத்தைப் பத்து அதிகாரங்களிலும், ஞானத்தை நான்கு அதிகாரங்களிலும், அடக்கி விளக்கியுள்ளார். துறவறத்தில், அவர் முதலாவதாக எடுத்துக் கொண்ட விரதம் இன்னின்ன அறங்களைச் செய்யவேண்டும், இன்னின்ன பாவங்களைச் செய்யாது விடவேண்டும் என்று ஒவ்வொருவரும், தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்வனவே விரதம் என்று நமக்கு அதன் எல்லைக் கோட்டை வரைந்து காட்டுகின்றார். விரதங்கள் பலவாயினும், அவை எல்லாவற்றையும், தம்முள் அடக்கி முன் நிற்பனவாகவுள்ள, அருள் உடைமை, புலான் மறுத்தல் முதலியனவாகத் திருவள்ளுவர் எடுத்து விளக்கிய சில அறங்களுள், புலான் மறுத்தலுக்குப் பின்னாக, எடுத்துக் கூறியது தவம். இந்த வைப்புமுறையில் அமைந்தது யாதெனின், தவம்செய்ய முற்படுவோர்கள், அருள்

உள்ளம் படைத்தவர்களாகவும், புலால் உண்ணாமையை மேற்கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது ஒருவாறு வற்புறுத்தப்படுகிறது.

உலகத்தில் பிறந்த மக்கள் அனைவரையும் பெரியர் என்றும் சிறியர் என்றும் இருவகையினராகப் பிரித்துக் காட்டுகின்றார் திருவள்ளுவர். இந்த இடத்தில் பெரியர் என்பதற்குப் பொருள், நாம் இக்காலத்தில் வழங்கும் பொருளாக மாட்டாது. இக்காலத்தில், பணம் உடைய செல்வந்தர்களைப் பெரிய மனிதர் என்கின்றோம். திருவள்ளுவர் யாரைப் பெரியமனிதர் என்கிறார் என்றால், செய்வதற்கு அருமையான காரியங்களைச் செய்பவர்களையே பெரியர் என்கிறார்.

"செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

செய்வதற்கு எளிதாவன, மனம்போன போக்கிலே சென்று உலக இன்பத்தை அடைதல். செய்வதற்கு அரிதாவன. 'தவம்' செய்வது. ஆகவே, தவம் செய்வோர்களையே திருவள்ளுவர் பெரியர் என்றார். ஏனெனில், உலகத்து மக்களாகப் பிறந்த அனைவரும் செய்யவேண்டிய காரியம் இந்தத் தவம் ஒன்றேயாகும். மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கமே, இந்தத் தவமாகிய ஒரு காரியத்தைச் செய்வதற்குத்தான். இவ்வாறு தவம் செய்வதைவிட்டுத், தவம் அல்லாத மற்றக் காரியங்களிலே, ஒருவன் மனதைச் செலுத்துவது, அவனுக்குத் துன்பம் தருவதாகவே முடியும்.

தவத்திற்கு அடையாளமாக அக்காலத்தில் இருந்தவை, இக்காலத்தினும் அவ்வாறே இருத்தல் வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை. இப்போதைய நாகரீகத்துக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளலாம்.

தவம் செய்வது என்றால் தம் உயிர்க்கு வரும் துன்பத்தைத் தான் பொறுத்துக் கொள்ளுதலும், பிற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகும். இந்த இரண்டும் சேர்ந்ததே 'தவம்' என்று திருவள்ளுவர், தவத்திற்கு வடிவம் கொடுக்கின்றார். அவைகளை உடையவர்களே தவத்தோர். பிறரால், தன்

உயிர்க்குப் பலவகையினும், துன்பம் நேரிட்டபோதும், அவை களைப் பொருட்படுத்தாது, பிறவுயிர்க்கும் துன்பம் செய்யாமலே தத்தம் தவநெறியில் நின்று, தவருது வாழ்ந்து காட்டிய முகம்மதுநபி, இயேசுகிறிஸ்து, ஆகிய பெரியோர்கள், வள்ளுவர் வாழ்ந்து காட்டிய, தவ வாழ்க்கையை உலகம் உணர மெய்ப்பித்திருக்கின்ருர்கள்.

இதனைத் திருவள்ளுவர்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

என்று இரத்தினச் சுருக்கமாகவும், ஆணித்தரமாகவும், எக் காலத்திற்கும், யார்க்கும், எச்சமயத்தார்க்கும், ஏற்கும் வகை யில் கூறி இருப்பது வியக்கத்தக்கதாகும். இங்கே "அற்றே தவத்திற்கு உரு" என்று திருவள்ளுவர் கூறியதன் கருத்து, நாம் அனைவரும் சிந்திக்கவேண்டியது ஒன்ருகும். தவம்செய்வது என்பது, தனிப்பட்டவரது உரிமை அல்ல. அது பொது. இல்லறத்தாரும் தம் கடமையை, அறநூல்களில் விதித்தபடி செய்யின் அவர்களும் தவத்தோராவார். வள்ளுவர் காட்டிய தவ வாழ்க்கையைச் சாதாரண மனிதனும் மேற்கொள்ள முடியும் என்று வாழ்ந்து காட்டிய, வடலூர் வள்ளலாரை யாவரும் அறிவர். உலகப் பெரியார் உத்தமர் மகாத்மா காந்தி, இன்று உலகின் ஒப்பற்ற ஞானியாக, எல்லாராலும்போற்றப் படுவதற்கு, அவரது தவத்தின் மேன்மையே காரணமாகும்.

இதனுல், ஒவ்வொரு மனிதனும் தவத்தைத்தான் செய்ய வேண்டிய கடமையாகக் கருதுதல் வேண்டும் என்பது தெளி வாயிற்று. எல்லாவுயிர்களிடத்தும் அன்புடைமை, அருள் உடைமை, இன்ஞசெய்யாமை ஆகிய இவைபோன்ற கடமை களைச் செய்தாரே "மக்களுள் தவத்தோராவர்" மற்றவர்கள் தங்களுக்கு வேண்டாதபிற துறைகளிலே மனதைச் செலுத்தி அல்லலுக்கு ஆளாகின்ருர்கள்.

இதனை,

"தவம் செய்வார் தம்கருமம் செய்வார், மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு"

என்று தவசிரேஷ்டர் திருவள்ளுவர், எவ்வளவு தெளிவாகக் கூறுகின்றார் பாருங்கள்.

விட்டகுறை, தொட்டகுறை என்று உலகில் சொல்வோமே அதுபோல இந்தப்பிறப்பில் நாம் தவம் செய்வதற்குக்கூட, முற்பிறப்பிலே அதற்குவேண்டிய தவம் செய்திருக்கவேண்டும். ஏனென்றால், இதற்கு நிறைந்த அனுபவமும், அறிவும், ஆற்றலும், மனஉறுதியும், வினைத்திட்பமும் சாலவும் பெற்றிருக்க வேண்டும். இதற்குப் பல பிறவிகளிலே திரண்டு வருகின்ற, அனுபவமுதிர்ச்சி, ஒருவனுக்குக் கைகூடவேண்டும். அதனால் ஒரே பிறப்பில், தவத்தின் தொடக்கமும் முடிவும் இல்லை என்பதாயிற்று. பிறவிதோறும் தொடரும் தவமே, பூர்ண பலனைத்தரும். பூர்ண பலனை ஒருபிறப்பில், ஒருவன் அடைந்தால் அத்தவம் அவனுக்கு முற்பிறவியிலேயே, தொடர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பதைச் செந்நாப்போதார் திருவள்ளுவர்

"தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது"

என்று உரைக்கின்றார்.

பகைவர்களை அழிக்கவும், நண்பர்களை உயர்த்தி வாழ்விக்கவும் செய்யும் வல்லமையுடையது தவம். அதனால், பகைவரையும் நண்பரையும் வேறுபட எண்ணி, மற்றவர்களைப் போலத் தவத்தோர்களையும், வெறுப்புவிருப்பு உடையவர் என்று கருதப் படலாம். ஆனால், இவை இரண்டும் அவர்கட்குத் தேவை இல்லாதவை. இருந்தால், முற்றத்துறந்தவராகமாட்டார். வசிஷ்டர் போன்ற முனிவர்களுடைய தவத்தைப்பற்றி நாம் படித்திருக்கின்றோம். அவருடைய தவத்தின் மகிமையால், அவர் எவ்வாறு விஸ்வாமித்திரரை வென்றார் என்பதையும். அவர் வாழ்க்கை வரலாற்றிலிருந்து நாம் அறிவோம். அதே விஸ்வாமித்திரர், யாவராலும் கைவிடப்பட்ட திரிசங்குவிற்கு எவ்வாறு ஒரு தனி சுவர்க்கம் உண்டுபண்ணி, அமர வாழ்க்கை பெறச்செய்தார் என்பதையும் நாம் படிக்கின்றோம். இந்திர பதவி அடைய நின்ற நகுடன் என்பவனை, அகத்திய முனிவர் எவ்வாறு பாம்பாக சபித்தார் என்பதையும் நாம் அறிவோம், வசிஷ்டர், விஸ்வாமித்திரர், அகஸ்தியர், வான்மீகி, திருமூலர்.

போன்ற பெரியோர்கள் தங்கள் தவப்பெருமையால், உலகம் உள்ளளவும் தங்கள் புகழ் ஓங்கி நிற்கும் விதத்திலே தங்கள் தவ வலிமையை நிலைநாட்டிச் சென்றுள்ளார்கள். இவற்றை மனதில் கொண்டுதானோ என்னவோ, திருவள்ளுவர்.

''ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணில் தவத்தால் வரும்''

எனத் தவக்காட்சிகளை, நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார் அருச்சுனன் தவம் செய்து, பாசுபதம் பெற்றதையும், பகீரதன் தன் தவ வலிமையால், கங்கையைப் பெற்றதையும், மகாபலி புரத்தில் உள்ள சிற்பங்கள் இன்னும், நம் நினைவிற்குக் கொண்டு வருகின்றன. தன் தவ வலிமையால். தன் கணவன் உயிரை எமனிடமிருந்து மீட்ட, சாவித்திரியின் சரித்திரமும், தன் உயிரைக் கொண்டுபோகவந்த எமனிடமிருந்து, தவத்தால் தன் உயிரை மீட்ட, மார்க்கண்டன் வரலாறும், ஆனவற்றை

" கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு''

என்ற குறள் நமக்கு மெய்ப்பிக்கின்றது. ஆனால். இந்தத் தவத்தைப் பலரும் விரும்பாதிருப்பதன் காரணம். தவம் செய்வதில் உள்ள உடலுக்கு ஏற்படும் துன்பமேயாகும். உடலின் மேலேயே ஆசைவைத்து, உடலுக்குள் இருக்கும் உயிரை மறந்து, எளிதான வாழ்க்கையை வாழ நினைத்தால், தவம் ஒருவனுக்குக் கைகூடாது. இந்த உடல் நிலையாது என்பதை ஒருவன் உணர்ந்து, அது நாடி நிற்கும் சுகங்களை விரும்பாது, ஐம்புலன்களை அவித்துச் செய்யும், தவத்தினால் ஏற்படும் துன்பத்தை, எவனொருவன் இன்பமாகக் கருதுகின்றானோ, அவனே உண்மையான தவத்தோனாவான். அவனுக்கே ஞான ஒளி பிரகாசிக்கும். இதனைப் பொய்யாமொழிப் புலவர்,

''சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு''

என்ற குறளால் கூறுகிறார்.

இக்காலத்தில் ஒருசிலர் செல்வந்தர்களாகவும், பலர் ஏழைகளாகவும் காணப்படுகின்றனர். இதற்குக் கடவுளை நடுநிலையில்லாதவர் என்று குற்றம் கூறுவர் சிலர். ஆனால், குற்றம் மனிதனுடையதேயன்றிக் கடவுளுடையதல்ல. முற்பிறப்பில் தவம் செய்தவர்கள், இப்பிறப்பில் யாதொரு குறையும் இல்லாது நல்வாழ்க்கை வாழ்கின்றார்கள். பலரும் துன்பப்படுகின்றார்கள் என்றால், பலரும் முற்பிறப்பில் தவம் செய்யவில்லை என்பது தான் பொருள். இதனை வள்ளுவர் உள்ளம்,

"இலர்பலர் ஆகியகாரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்"

என்று எவ்வளவு எளிதாகக் காட்டுகிறது பாருங்கள். சிலர் பலர் என்றது செல்வர் ஏழைகளை மட்டும் அல்ல. அறிவுடையோரையும் அறிவில்லாதாரையும் சேர்த்துக் கூறுகின்றார். ஆகவே தவம் செய்தவனே நல்வாழ்வுபெற முடியும். பிறரையும் வாழ்விக்கச் செய்யமுடியும். நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும், சமுதாயத்திற்கும் நன்மை பல செய்து மகிழ முடியும். அந்த நிலையில், அவன் தன்னைத்தானே பெற்றவனாகின்றான், மக்கள் தலைவனாகக் கருதப்படுகின்றான். உலக மக்களால், உத்தமன் என்று போற்றப்படுகின்றான். மாநில மாந்தர்களால் தொழப்படுகின்றான். இக்கருத்தை,

"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்."

என்ற குறளில் காண்கிறோம்.

ஆகவே, வள்ளுவர் காட்டும் தவநெறிக்குத் தேவையான அருள் உடைமை, அன்புடைமை, அடக்கம் உடைமை, துன்பம் செய்யாமை, ஆசையை ஒழித்தல் ஆகிய இவைகளை மேற்கொண்டு தவத்தின் பயனாக நல்வாழ்வை நாமும் பெறுவோமாக.

வாழ்க வள்ளுவர் குறள் ! வளர்க தவம்!!

உ

# திருக்கேதார யாத்திரை.

அழைப்பு:

உலகத்தில் நினைத்து நினைத்துச் செயல் செய்வதில் உருவான திட்டம் எதுவும் பூர்த்தியாகும். நல்ல செயல் எதையும் விண்ணப்பித்து விண்ணப்பித்து செயற்படுத்த முடியும். இது ஒரு முடிபு.

சென்ற ஆண்டில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருக்கேதார யாத்திரை சென்றிருந்தார்கள். (இதற்கு முன்னும் பன்முறை சென்றிருக்கிறார்கள்.) அங்குக்கேதாரத்தில் அவர்களுக்கு என்ன திருவுளக்குறிப்புத் தோன்றியதோ; யார் அறிவார். திருப்பனந்தாளுக்குத் திரும்பியதும் அந்த மடத்து ஓதுவார் திரு. தண்டபாணி என்பவருக்கு ஒரு உத்தரவு செய்திருக்கிறார்கள். "ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தை அவர்-(ஓதுவார்) எப்பொழுது எங்கே எந்நிலையில் கண்டாலும் "தொண்டரஞ்சு களிறும் அடக்கி" என்னும் திருக்கேதாரத் திருப்பதிகம் பூராவையும் ஓதிவிடவேண்டும்" என்பதுதான் அந்த உத்தரவு. இப்படி ஓதுவாமூர்த்திகள் திருப்பதிகம் ஓதும்பொழுது திருக்கேதாரத்தைப்பற்றி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் கேட்டால் அவருக்குத் தெரிந்தவற்றைத் தெரிவிக்கவேண்டும். இதிலே கேட்டால்தான் தெரிவிக்கவேண்டியதென்ற உத்தரவின் உட்கருத்தை ஊன்றி உணர்ந்து இன்புறவேண்டும். (இந்த ஓதுவாமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகளோடு திருக்கேதாரம் செல்லும் புண்ணியவாய்ப்புப் பெற்றவர். அதனால் "கேதாரம்" என்றே ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகளவர்களால் நாமம் சூட்டப்பெற்றவர்.) அந்த ஓதுவாரும் கடமை யுணர்ந்து செயலாற்றும் திறனுடையார். எப்போது எங்கே எந்நிலையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசிக்கும் வாய்ப்புப்பெற்றாலும் முதலில் முறைப்படி வணக்கம் செலுத்திவிட்டு "தொண்டரஞ்சு களிறுமடக்கி" என்று தொடங்கி பதிகம் பூராவையும் ஓதிவிட்டுத்தான் வேறேதேனும் கேட்டாலும் சொல்லுவார்.

பெரியோர் செயல் எல்லாம் இவ்விதமேதான் இருக்கும் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும்சொல்லும் ஒவ்வொருசொல்லுக்கும் பொருளுண்டு. அதனை உற்று உணர்ந்து தெரிந்துகொள்ள வேண்டும். எல்லாம் நமக்கு வெளிப்படையாகத் தெரிந்தது போலத் தோன்றினாலும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய செய்திகள் பல அதிலே பொதிந்துகிடக்கும். இவ்விதம் சிந்தித்துப் பார்க்கப் பார்க்க உள்ளுறையாக இன்பம் பயப்பனபல அதிலே காணக் கிடைக்கின்றன. வாய்ச்சொல் கொஞ்சமாகத் தான் இருக்கும். உற்றுஉணர்ந்து தெரிந்துகொண்டால் நிலைத்த பயன் கிடைக்கும். இவ்விதமே இருந்தது ஸ்ரீ காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளவர்கள் செயலும். அநேகமாக ஒவ்வொரு தடவையும் அதே ஓதுவாரே வருவார். பாடிய பாட்டையே பாடுவார். இது எங்களுக்கு மிக வியப்பாகவே இருந்தது. ஆனாலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளமும் அறியுமே மற்றொரு திருவுளத்தின் கனிந்த குறிப்பையும். அடியேங்களிடம் உத்தரவாகும். "இது திருப்பதிகச் சிந்தனையாதலுடன் நம்மைத் திருக்கேதாரத்திற்கு ஈர்க்கும் செயலும் ஆம். எம்பெருமான் திருஞானசம்பந்தர் அக்காலத்திலிருந்தே வசதிக்குறைவினாலோ மற்றெக் காரணத்தாலோ திருக்காளத்தியிலிருந்தே திருக்கேதாரத்தை நினைத்துத் திருப்பதிகம் பாடியருளினார். இது பெரியபுராணச் செய்தியாலும் திருப்பதிகத்தில் "என்பரால்" என்று குறிக்கப் பெறுவதாலும் தெரிந்துகொள்ளலாம். திருவருள்பெற்ற அடியார் பெருமக்களுக்குத் தெரியாத செய்திகள் எதுவும் இருப்பதற்கில்லை. திருவருளுணர்த்தத் தெரிபவர்கள் அவர்கள். இது அருளுடையார் பெற்ற பேறு. நம்மவர்கள் நேரில் சென்றும் காணமுடியாத பேருண்மைகளைத் தெரிந்து சொல்லி வைத்திருக்கிறார்கள் அப்பெருமக்கள். பிரயாண வசதிகள் பல பெருகியிருக்கும் இக்காலத்தில் நேரில் வந்து தரிசித்துப் போகும்படி பணித்த எம்பெருமான் திருவுளக்குறிப்புத்தான் இது. திருவருள் கட்டளை:- அடுத்ததாக உள்ள வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு அங்குச்சென்று ஸ்ரீ கேதாரநாதரைத் தரிசித்து வழிபாடுகள் செய்துவருவோம். அதற்கு ஆவன செய்க." எனப் பணித்தார்கள்.

**முன்னேற்பாடுகள் :**

திருக்கேதாரத்திற்கு யார் எப்பொழுது நினைத்தாலும் போய்விடமுடியாது. இமயமலையிலே பனி உறைந்துள்ள பகுதி

யிலே உள்ள பெருந்தலம்இது. வெயில் அதிகமாக உறைத்த பிறகு கொஞ்சம் உருகி வழி திறக்கும். அப்பொழுது மக்கள் சென்று தரிசனம் செய்து வரமுடியும். பனிமூடிய காலத்தை தேவபூஜை என்றும் மற்றக்காலத்தை பூலோகவாசிகள் பூஜை என்றும் சொல்லுகிறுர்கள். அதுவும் மற்ற ஊர்களுக்குப் போவதுபோல அவ்வளவு எளிதானதல்ல. இமயச்சாரலில் உள்ள ஹரித்துவாரத்திலிருந்து மலைமேலே சுமார் 145 மைல் செல்லவேண்டும். இதில் சுமார் 90-மைல் பஸ் வசதி கிடைக்கும். மற்ற வழியெல்லாம் கங்கையின் உபநதியான பனியுருகிவரும் மந்தாகினி ஆற்றங்கரையை ஒட்டி மலையிலே செங்குத்தான ஏற்றமும் இறக்கமுமான வழியில் சிரமப்பட்டுப் போகவேண்டிய தாக உள்ளது. அதுவும் இமயத்தின் விளையாட்டுக்கு உட்பட்டு பனி, மழை முதலியவற்றினூடே கஷ்டப்பட்டுத்தான் போகவேண்டும். வெறும் தரையில் நடப்பதுபோன்று எளிதில் போகமுடியாது. ஒரு நாளைக்கு அதிகமாகப் போனால் 10-மைல் தூரத்திற்குமேலே போகமுடியாது. ஆகவே இக்காலத்திலும் அவ்வளவு கஷ்டமாக உள்ளது. மக்கள் பூஜை நடக்கும் காலத்தில்தான் அங்கு பூஜகர்களும் மற்றவர்களும் வந்து தங்க முடியும். வீடுகள் சில இருக்கின்றன. தேவபூஜைக் காலங்களில் அவர்கள் கூடத் தங்கமுடியாது. அவ்வளவு பனி. எங்கும் பனிமயந்தான். ஆகவே அந்தப் பூஜகர்களும் அக்காலங்களில் கீழே இறங்கி வந்துவிடுவார்கள். ஆனால் கடைசி நாளில் அவர்கள் சாத்தி வழிபட்ட பூக்களும் மற்றவையும் மறுபடியும் பூஜைக்கு வரும்பொழுது அவர்கள் வைத்தவண்ணம் மாறுமல், பக்குவம் கெடாமல் இருக்கும் என்று சொல்கிறுர்கள். இவ்விதமாகத் தெய்வீகம் மிக்க அத்தலத்திற்கு ஆங்கிலமாதங்களில் மே முதல்வாரம் தொடங்கி அக்டோபர் பாதிவரை போகவேண்டிய காலம் ஆகும். தமிழில் சித்திரைக் கடைசி தொடங்கி ஐப்பசி வரை என்று சொல்லலாம். அந்த நன்னுளை எதிர்நோக்கியிருந்தார்கள், எதிர்பார்த்த கோடைக்காலமும் வந்தது.

பெரும் நிர்வாகத்திலுள்ள பொறுப்பு ஒருபுறம். யாத்திரையில் உள்ள ஆர்வம் ஒரு புறம். இவ்விதமாகவே இந்த இரண்டும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளத்தில் மாறி மாறி வந்து நின்றன. நிர்வாகம் எப்பொழுதும் தொல்லையான ஒரு பாரந்தானே. அதில் ஒரு முடிவான ஏற்பாட்டைச்

செய்துவைத்துவிட்டுப் புறப்படுவதென்பது முடிந்தகாரியமா? இருந்தாலும் போட்டது போட்டபடியேயும் புறப்பட முடியுமோ. ஆகவே அததற்கும் தக்கதொரு ஏற்பாட்டைச் செய்து வைத்துவிட்டுப் புறப்பட வேண்டியதாயிற்று. நாளும் நெருங்கிற்று. வேலைகளும் அதிமும்முரமாக நடைபெற்று வந்தன. அன்பர்களும் கேள்விப்பட்டு வந்தவண்ணமாகவே இருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் யாத்திரைபோகும் செய்தி யாருக்கும் எந்த ஊரிலும் வெளியிடக்கூடாதென்று உத்தரவு. இருந்தாலும் போடப்பெற்றிருந்த திட்டத்தைத் தானே பலரும் தெரிந்துகொண்டு வரலானார்கள்.

## கும்பாபிஷேகங்கள்!

நல்ல செயல்கள் செய்ய திருவருள் துணை வேண்டியதே. அதுவும் திட்டமிட்டுத் திருவருள் வாய்ப்பைப் பெறுவதைவிடத் தானே வந்து அமைவதில் சிறப்பு அதிகம் என்பர் அனுபவமிக்க பெரியோர். அதில்தான் திருவருள் வலிமை அதிகமுண்டு. இவ்விதமாக இந்த யாத்திரையின் வெற்றிக்கு முன்னறிவிப்பாக இரு பெரும் கும்பாபிஷேகங்கள் நடைபெறலாயின.

ஆதீன சம்பந்தப்பட்ட சிவாலயங்கள் சிலவற்றில் அதனதன் செல்வ நிலைக்கும் தேவைக்கும் ஏற்பத் திருப்பணிகள் செய்து மருந்து சாத்தி கும்பாபிஷேகங்கள் செய்யலாம் என்ற திட்டமிருந்தது. அவ்விதம் செய்வதை இன்ன மாதத்தில் செய்வதென்று முதலில் திட்டமிடவில்லை. இக் கோடையில் செய்யலாம் என்ற நினைப்பு இருந்தது. இவ்விதம் செய்யும் எந்தப்பணிக்கும் சென்னை இராஜ்யத்திலே அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி எந்தப் பெரிய காரியமும் செய்யமுடியாது. எவ்விதம் செய்தாலும் கேள்விகள் வரும். அவ்விதம் முன் அனுமதி பெறவும் சில திட்ட முறைகளுண்டு. அதன்படி செய்வதற்கு அரசாங்கத்தில் உள்ள திட்டப்படி கொஞ்சம் அவகாசம் வேண்டியிருக்கும்.

இந்த நிலையில் வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்துவிட்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் யாத்திரை முடித்துத் திரும்புவதற்குள் அனுமதியும் வந்திருக்கும் வேலைகளையும் மெதுவாகச்செய்து கும்பாபிஷேகங்கள் செய்யலாம் என்பதாக

அடியேனைப்போன்ற நிர்வாகத் துறையினருக்கு எண்ணம். ஒருநாள் காலை பூஜையை முடித்துக்கொண்டு வந்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடியேனை அழைத்து திருநின்றியூர் ஸ்ரீலக்ஷ்மிபுரீஸ்வரராலயத்திலும் தென் திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதராலயத்திலும் திருப்பணிகள் செய்து மருந்து சாத்திக் கும்பாபிஷேகங்கள் செய்துதான் யாத்திரை செய்ய வேண்டும், ஆவன செய்க என்று பணித்தார்கள். "யாத்திரை புறப்பட இரண்டு வாரங்கள்தானே இருக்கின்றன. அதற்குள் செய்வதானல் கஷ்டமாக இருக்குமே. எல்லாம் செய்வதாக இருந்தாலும் அரசாங்க அனுமதியும் கிடைத்துச் செய்ய வேண்டியதாக இருக்கிறதே. அதற்குள் அது கிடைத்துவிடும் என்று எதிர்பார்ப்பது கடினமாயிற்றே" என்று யோசித்தோம். "நல்ல பெரிய காரியங்களை நினைத்த உடனே மேற்கொண்டு செய்துவிடவேண்டும், தூய சிந்தனையோடு தொடங்கிச் செய்தால் எல்லாம் செவ்வனே நடைபெறும். யார் யாருக்கு எழுத வேண்டுமோ அவர்களுக்கு எழுதிவிட்டுக் காரியங்களைத்தொடங்குங்கள். ஆண்டவன் துணைசெய்வான். இனி இது விஷயமாக எதுவும் சொல்லிக்கொண்டிருக்கவேண்டாம்" என்று உத்தரவாயிற்று. அவ்விதமே அதற்குஆவன செய்து காரியங்களைத் தொடங்கினேம்.

இந்த இரண்டு கோவில்களின் வருவாய் ஆள் மாகாணங்கள் முதலிய எல்லாம் குறைவானவை. ஆகவே அதற்குத்தக்க ஒரு சிறு திட்டத்தில் இன்றியமையாது செய்யவேண்டிய திருப்பணிகளைச் செய்து மருந்துசாத்தி கும்பாபிஷேகம் செய்யத் திட்டமிடப்பட்டது, அதில் அஷ்டபந்தன மருந்தின் கிரயம் போக ஓரளவு தொகைதான் மற்றக் காரியங்களுக்கு எஞ்சக் கூடியதாக இருந்தது. ஆனல் தொடங்கிய பிறகு மிகவும் விரிவாக நடைபெற்றுவிட்டது. அதற்குப் பெருந்துணையாக இருந்தவர்கள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள். இதுபோன்ற எல்லாக்காரியங்களுக்கும் வள்ளன்மையோடு வழங்கிவரும் பெருங்கொடையில் அஷ்டபந்தன மருந்து பெரும்பகுதி கொடுத்துதவியதுதான். மற்றும் சில அன்பர்கள் ஒவ்வொரு காரியத்தை ஏற்றுச்செய்ய முன்வந்தார்கள். இவ்விதமாகச் சிறு திட்டமாகப்போட்டது பெருந்திட்டத்தில் அக்கோவில்களின் பாடல் பெருமைக்கு ஒத்ததாக நடைபெற்றுவிட்டது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின்

H20

உத்தரவுப்படியே அரசாங்க உத்தரவும் உரிய காலத்தில் கிடைத்தது. எல்லாம் விரைவிலே நடைபெற்றாலும் செம்மை யுற நடைபெற்றன. இரு பெருங் கும்பாபிஷேகங்களுக்கும் நாள் பார்த்ததில் 7—4—55 அன்று அமைந்தது. அது ஒரு வியாழக்கிழமை. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மௌனநாள். இதுவும் எதிர்பாராத நிகழ்ச்சி. தவமுடை யாருக்கே தவம் சித்திக்கும் என்பார்களே அதேபோல அமையப் பெற்றது. அந்த வலிமையினால்தான் இவ்வளவு நம்பிக்கை யோடு எதையும் எதிர்பாராது தொடங்கினார்கள். அந்த மகிமையினாலே சிறியதாகச் செய்யத் திட்டமிட்டது பெரிதாக ஆயிற்று.

கும்பாபிஷேகங்கள் இரண்டும் சிறப்பாக நிறைவேறப் பெற்றாலும் திருநின்றியூர்க் கும்பாபிஷேகம் ஒரு விதத்தில் மிகச் சிறப்புற்றதாக அமைந்துவிட்டது. ஏனெனில் அதற்கும் காரணம் உண்டு. பொதுவாக வியாழக்கிழமை மௌன உபவாச நாள். ஆகவே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வெளியூர்களுக்குச் செல்வது கிடையாது. கும்பாபிஷேக தரிசனம் செய்யவேண்டுமென்று திருவுளத்தில் ஏதோ ஒன்று தூண்டியிருக்கிறது. அதுவும் திருநின்றியூருக்குச் செல்லலாம் என்று தோன்றியிருக்கிறது. அவ்விதமே எழுந் தருளினார்கள். கோவிலுக்குச் செல்லும் வழியில் அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தை வரவேற்று வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். இதனை ஏற்றுக் கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கோவிலுக்கு எழுந் தருளப் புறப்பட்ட சமயம் பின்புறம் இரு கார்கள் வந்து நின்றன. பார்த்தால் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்களும் அவர்களுடைய இளவரசு சுவாமிகள் அவர்களும் எல்லாருமாகச்சேர்ந்து கோவிலுக்கு எழுந்தருளினார்கள். அங்கும் கும்பாபிஷேகத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து யாகசாலைத் தீபாராதனை தரிசனம் செய்து கொண்டார்கள். கும்பாபிஷேகமும் நிறைவேறியது. அங்கேயும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள் கேதார யாத் திரைபற்றி விண்ணப்பித்தார்கள். மௌன முறையிலே ஏற்றுக்கொண்டார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும். காசியில் ஏஜண்டாக இருக்கும் திரு. கல்யாணசுந்தரம்பிள்ளையும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகளோடு அங்கு வந்திருந்

தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் ஸ்ரீ கேதாரயாத்திரை மேற்கொண்டு எழுந்தருளும் செய்தியைச் சொல்லி குருமூர்த்தியைக் காசியில் உரிய முறையில் வரவேற்க ஆவன செய்க, விரைக எனப் பணித்தார்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள், திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை எஜமான் குறிப்பறிந்து பணியாற்றும் திறனுடையார். உத்தரவு பெற்றுக் காசிக்குத் திரும்பினூர். இவ்விதமாக எல்லாம் திருவருள் வாய்ப்பாக எதிர்பாராத முறையிலே நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் உத்திரவானபடியே இதை எம்பெருமான் அழைப்பு என்று சொல்லாமல் வேறு எவ்விதம் சொல்லுவது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் யாத்திரை ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தின. உறுதியையும் ஊக்கத்தையும் அளித்தன. 11—4—55 அன்று யாத்திரை புறப்பட நாள் திட்டமாயிற்று.

யாத்திரை வெற்றிகரமாக நிறைவேறவேண்டுமென்று பிரார்த்தித்து சிறப்பு வழிபாடுகள் செய்விக்கத் திட்டமாயிற்று. புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்திய நாதருக்கும், தையல்நாயகிக்கும் சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குப் பன்னீர் சந்தனம் பால் முதலிய அபிஷேகங்கள் செய்வித்து ஷண்முகார்ச்சனையும் செய்விக்கப்பெற்றன. தருமையிலேயே எழுந்தருளியுள்ள ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு ஏகதின லக்ஷார்ச்சனை என்ற பெரும் திட்ட அருச்சனையும் நடத்தப்பெற்றது. மாயூரம் ஸ்ரீ மாயூரநாதருக்கும் அபயாம்பிகைக்கும் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரருக்கும் சம்ஹார மூர்த்திக்கும் ஆராதனைகளும் அபிராமி அம்மைக்கு நவசக்தி அர்ச்சனையும் செய்விக்கப்பெற்றன. தருமபுரத்திலுள்ள குருமூர்த்தங்களுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. சிறப்பாக ஸ்ரீ ஆனந்தபரவசருக்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தருக்கும் மிகவும் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இவ்விதமாக எல்லா குருமூர்த்தங்களிலும் ஆலயங்களிலும் ஆராதனைகள் செய்து ஆங்காங்கு சிறப்பு வழிபாடுகள் நிகழும்பொழுதும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆங்காங்கும் சென்று சென்று வழிபட்டார்கள், மற்றையோரையும் உடன் அழைத்துச்சென்றூர்கள்- அப்பொழுதெல்லாம் உத்தரவாகும் "தேனீ பூக்களிலிருந்து பருவத்திலே கிடைக்கக்கூடிய தேனை ஓடி ஓடிச் சேகரித்து

வைத்துக்கொள்ளுவதுபோல நாமும் பருவம் இருக்குபோதே உடலில் செய்லும் திடனும் இருக்கும்பொழுதே - ஓடி ஓடிச் சிவ புண்ணியம் தேடிவைத்துக்கொள்ளவேண்டும். வறியன் ஒருவனுக்குக் கிடைத்த பெரும்பொருளை அவன் போற்றிவைத்துக் கொள்வதுபோலப் போற்றி வைத்துக்கொள்ளவேண்டும் பருவத்தை வீணுக்கக்கூடாது. வந்து முந்துமினே வந்துமுந்துமினே என்றார்கள் நம் அடியார் பெருமக்களும். ஆகவே வாருங்கள். என் உடன் வாருங்கள். கிடைக்கும் வாய்ப்பைவிட்டு விடாதீர்கள் என்று" பெரியோர் சொல்லில்மட்டும் வீரரல்லவே; செய்யும் செயலிலும் சிறந்து நிற்பவர்களாயிற்றே. சொல்லியவண்ணம் செயல் செய்து காட்டுபவர்களல்லவா அவர்கள். இவ்விதமாக இவை நிகழ நிகழ அன்பர்கள் பலருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருக்கேதார யாத்திரை பற்றிய செய்தி அதிவிரைவிலே எங்கும் பரவலாயிற்று.

**9—4—55.** சனிக்கிழமை-ஆதீனப் பணியாட்கள் எல்லோருக்கும் எண்ணெய் முழுக்கிட்டு விருந்து வழங்கினார்கள். **11—4—55.** சோமவாரம் யாத்திரை புறப்படும் நாள். மதுரை ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானுக்கும் மீனாட்சி அம்மைக்கும் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப் பெற்றன. தில்லையிலுள்ள எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகளும் தில்லைக்காளி நடராஜா இவர்களுக்குச் சிறப்பான ஆராதனைகளும் அர்ச்சனைகளும் செய்வித்துப் புறப்படும் சமயத்தில் பிரசாதம் கிடைக்கும்படி செய்விக்கப் பெற்றது. இந்த யாத்திரையின் நினைவாகத் தில்லை ஆனந்தக்கூத்தன் திருக்கோவிலில் நிகழவிருக்கும் மகாகும்பாபிஷேகத்துக்கு ரூ. 2,000 அளித்தார்கள். ஆதீன மடாலயத்திலே ஆத்மார்த்த மூர்த்தி சொக்கலிங்கப் பெருமானுக்கு சிறப்பான அபிஷேக ஆராதனைகளும் மகேஸ்வர பூஜையும் செய்வித்தார்கள். ஏழை மக்களுக்கு ஏராளமாக அன்னமளிக்கச் செய்தார்கள்.

**யாத்திரை தொடக்கம்.**

மாலை நேரம். குடிமக்களும் மாயூரப்பெருமக்களும் வந்து கூடினர். வழியனுப்பப் புறப்படும் நேரம் நெருங்க நெருங்க. ஜனம் பெருகிவரலாயிற்று. ஸ்ரீ மகாலக்ஷ்மிதுர்க்கை தரிசனமும், குருஞானசம்பந்தர் தரிசனம் உத்திரவுபெற்றுக் கொள்ளுதல்

முதலியன திட்ட ஏற்பாடுகளில் முக்கியமானவை. சந்நிதி குறுகினார்கள். வயம்விட்டு நின்றார்கள். வணங்கிச் செலவு பெற்றார்கள். பூஜை மடம் தரிசனம் முடிந்தது. அடியார்களுக்கும் ஆதீன மடத்துச் சிப்பந்திகளுக்கும் பணியாட்களுக்கும் அவரவர் தகுதிக் கேற்பத் திருக்கை வழக்கம் வழங்கினார்கள். புறப்பாட்டு ஆயத்தங்கள் எல்லாம் உணர்ச்சி வேகத்திலே நடைபெற்றன. பிரியாவிடைபெற்றார்கள் பூஜை மடத்தில். சில அன்பர்கள் வழியனுப்பில் நகர்கடந்து சிறிது தூரம் வந்து வணங்கி விடைபெற்றுப் போயினர். மணி 7-30 காரும் கிளம்பிற்று வேகமாகச் சென்றது. மணி 10-க்குத் தென்பெண்ணையாற்றங்கரை யடைந்தோம். நல்ல நிலவு. பூரண சந்திரனின் ஒளி. சிறிது ஏதாவது உணவு உட்கொண்டு மேலே செல்லலாமே என்ற எண்ணம் உண்டாயிற்று. பெரிய மணற்பரப்பையுடைய அந்த ஆற்றிலே இறங்கினோம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் இறங்கினார்கள். மணற்பரப்பிலே வந்து அமர்ந்தருளினார்கள். நல்ல நேரம் அது. இயற்கையில் தோய்ந்தோம். உடன் வந்தவர்கள் ஒவ்வொன்றில் தோய்ந்து அனுபவித்தார்கள். ஆனால் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் அந்த இனிய இரவு நேரத்தையும் நிலவின் தன்மையையும் கண்டார்கள். அவர்களுக்குத்தோன்றியது அடியார்களின் பண்பாடு பற்றி. இது ஒரு திருமுறைப் பாடற்பகுதியை நினைப்பித்தது அவர்களுக்கு.

"மாசில் வீணையும் மாலைமதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்பதுதான் அது. சிறிதுநேரம் அங்கே இந்நிலையில் தங்கிவிட்டு மறுபடியும் புறப்பட்டோம். சென்னை ஆதீன சமயப் பிரசார நிலையத்தை அடைந்தபோது மணி இரவு 1-30. அங்கே அந்நிலையத்திலிருந்து அருந்தொண்டாற்றிவரும் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களை வரவேற்று ஆதீன சம்பிரதாயப்படி கொலுவிருத்தி பூசை செய்து திருநீறு பெற்றுக்கொண்டார்கள்.

மறுநாள் இரவு மணி 8-10க்கு ஹௌரா மெயிலில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் காசிக்குப் பயணமானார்கள்.

யாருக்கும் தெரியக்கூடாதென்றிருந்தும் எப்படியோ தெரிந்துகொண்டு ஸ்ரீ. எஸ். இராமசுவாமி நாயுடுகாரும், பேராசிரியர் திரு. அ. முத்தையா அவர்களும் இரயிலடி வந்து வணங்கி வழியனுப்பினார்கள். கூடவந்திருந்த தொண்டர்கள் முழக்கங்கள் போட்டார்கள். ரயிலும் புறப்பட்டது.

**வழியிலே சிந்தனை:-**

ஓடுகிற இரயிலிலே வருகிற வழியெல்லாம் சிவசிந்தனையாகவும் சமயச்சிந்தனையாகவும் திருமுறைச் சிந்தனையாகவும் நடைபெற்றுவந்தது. உடன் வந்த அடியேனைப் போன்றவர்களை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அன்புடன் அழைத்து வைத்துக் கொண்டு திருக்கருகாவூர்த் தொண்டர் (சிவஞானமென அழைக்கப்பெற்றவர் எங்களுடன் வந்தவர்) அவரையும் அழைத்து வைத்துக்கொண்டு ஒரு சிறு சொற்பொழிவு நடக்கட்டும், அதுவும் நாழிகைச் சொற்பொழிவாக இருக்கட்டும்" என்று உத்தரவாயிற்று. அவரும் உடனே துடங்கிவிட்டார் பெரிய சபையை நோக்கிப் பேசுவது போல. "அன்பர்களே" என்று தொடங்கியவர் பெரிய சமயப் பேரவையிலே பேசத்தக்கவொரு பொருளை எடுத்துக்கொண்டு அடியிற்கண்ட திருமுறைப் பாடல்களைச் சிந்திக்கச் செய்தார்.

"நிலைபெறுமாறெண்ணுதியேல்"
"மையலின்றி மலர் கொய்துவணங்கிட"
"வெந்த நீறு மெய்ப்பூசிய வேதியன்"
"தலையே நீ வணங்காய்"
"வாயே வாழ்த்துகண்டாய்"
"கங்கையாடிலென்
"ஒன்றியிருந்து நினைமின்
"நீ நாளும் நன்னெஞ்சே"
"நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கு"
"தொண்டரஞ்சு களிறுமடக்கி"
"மூர்த்தி தலம் தீர்த்தம்"
—தாயுமானவர்.

என்பனபோன்றவை அவை.

**புது வருஷப்பிறப்பு**

14—4—55 வியாழக்கிழமை - மன்மத (தமிழ்) வருடப்பிறப்பு - பொழுது புலர்ந்தது. காலை மணி 5-15 என்ப

தாகக் கடிகாரம் காட்டியது. அன்றும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் மௌனப் பெருநாள். திருமஞ்சனம் ஆயிற்று வழிபாடுகள் முடிந்தன. மௌனத்திலேயே திருக்குறிப்புத் தெரிந்த தொண்டர் ஒருவர் எழுதுகோலும் தாளும் எடுத்துக் கொடுத்தார். அதனை வாங்கி அடியிற்கண்டதொரு புது வருஷச் செய்தியை எழுதி அடியேனிடம் கொடுத்து அன்பர்களுக்கு அனுப்பும்படி உத்தரவிட்டாகள். அவ்விதமே அனுப்பப்பெற்றது. அது வருமாறு.

"செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் நம் எல்லோருக்கும் நின்று துணை செய்வதாக".

வருஷப்பிறப்பிலே மக்கள் தூய நன்னீராடி புத்தாடை உடுத்தி நல்ல சிந்தனையோடு ஆண்டவனை வழிபடவேண்டும். ஏன் என்றால் பரம்பொருள் நமக்குப் பொன்னும் மெய்ப் பொருளும் போகமும் தருவான். அவனே திருவும் ஆண்மையும் தருபவன். இதற்கு முன்னும் ஒவ்வொரு ஆண்டிலும் அருள் புரிந்த ஆண்டவன் இவ்வாண்டிலும் அருள் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்வோமாக. உலகம் வாழ நாம் வாழலாம். "உலகம் வாழ்க. சைவம் வாழ்க, திருநீறும் அஞ்செழுத்தும் அக்குமணியும் வாழ்க." என்று வேண்டத்தக்க தறிவோனாகிய எம்பெருமானை வேண்டிக்கொள்வோமாக.

"ஞாலம் நின் புகழே மிகவேண்டும் தென் ஆலவாய் உறையும்
எம் ஆதியே" ஞானசம்பந்தம் துணை. சொக்கலிங்கம் துணை.

காலை மணி 10-45க்கு ஹௌரா வந்தடைந்தது நாங்கள் ஏறியவண்டி. அங்கு ஸ்ரீ காசி குமாரசுவாமி மடத்திலிருந்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் உத்தரவின்படி சுப்பிரமணியம் வந்திருந்தார். ரயிலிலேயே வந்து வரவேற்றார். ஹௌராவில் தங்குமிடத்தில் பகற்பொழுதைக் கழித்தோம். எங்களுக்கு அன்று வெய்யலின் கடுமை மிகுதியாக இருந்தது. குழாய் நீரைத் தொட்டோம். நல்ல வெந்நீரைத் தொடுவது போல இருந்தது. ஆனால் நாழிகை ஆக ஆக மாலையிலே அந்த வெந்நீரும் தண்ணீராக மாறியது. இவ்விதமாக அந்தப் பெருநகரிலே தட்பவெட்ப நிலை கடுமையாக இருக்கும் போலத் தோன்றியது.

கல்கத்தா :

ஹௌரா என்பது கல்கத்தா பெருநகரில் மற்றொரு பகுதி. இது அங்கு ஓடும் ஹூக்ளி நதியின் மேல்புறம் உள்ளது. கல்கத்தாப் பகுதி அந்நதியின் கீழ்கரையில் வியாபித்திருக்கிறது. இது இந்திய தேசத்திலே மிகப் பெரிய நகரம். ஜன நெருக்கடி அதிகம். எங்கும் பெரிய இயந்திரச் சாலைகளும் கப்பல் ஏற்றுமதி இறக்குமதி கிடங்குகளுமிருக்கின்றன. கீழை நாட்டுபோக்குவரத்தில் தரை,நீர் ஆகாயம் எவ்வழியிலும்மிகவும் முக்கியம் வாய்ந்தது. உலகப் பெருவங்கிகள், வியாபாரஸ்தலங்கள், நகருக்குள் உள் நகர்வரை வந்து சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் வசதியாயுள்ளது ஹூக்ளிப் பேராறு. அதில் பெரிய கப்பல்களும் செல்லக்கூடியதாக நடுவிலே எவ்விதமான கால்களோ கட்டிடகட்டைகளோ இல்லாமல் கரையின் இரு புறமும் ஊன்றப்பெற்ற இருப்புக்கட்டையின் வலுவில் நிற்கக் கூடியதான ஒரு பெரும் இருப்புப்பாலம். அப்பாலத்தின் மேலே தரைச்சாதனங்களாகிய மோட்டார், ட்ராம், முதலிய உந்து சாதனங்களும் மற்ற எல்லாவித வண்டிகளும் வரிசையாக ஐந்தாறு ஏககாலத்தில் போய்வரக் கூடியதாகவும் கால் நடையாகப் போவோர் வருவோர்க்கு நடைவழி தனித் தனியே அமையப் பெற்றதாகவும் இருக்கிறது. இவைகளன்றியும் பாலத்தின் கீழே பல கப்பல்களும் படகுகளும் (நீராவி, சாதாரணப் படகுகள்) போய்வந்துகொண்டே இருக்கின்றன. இந்தப்பாலம் உலகிலேயே அளவில் பெரியவற்றில் இரண்டாவதாக உள்ளது. இவ்விதமாகப்பண்டங்களின்போக்குவரத்தும் மனிதப்போக்குவரத்தும் நடைபெற்றவண்ணமாகவே இருக்கின்றன. ரயிலடியிலும் ஹௌராப் பகுதியில் 11 தளங்கள் (ப்ளாட் பாரங்கள்) இருக்கின்றன. இது பெரிய ரயிலுக்கு. இதன்னியில் வேலை ஆட்கள் போக்குவரத்துக்கென சிறு வண்டியும் (Midget-railway) இருக்கிறது. இது ஹூக்ளி நதியைத்தாண்டிப் போவதில்லை. அதற்குத் தனி ரயில் வசதி இருக்கிறது. இந் நகரின் இவ்வளவு சீருக்கும் சிறப்புக்கும் காரணமாக இருந்து அருள் வழங்குகிறாள் அன்னை காளி. அவளிருப்பதாலே காளிகட்டமாக இருந்த ஒரு சிற்றூர் இப்பொழுது உலகப் பெரு நகரங்களுள் ஒன்றாக வைத்தெண்ணப் படும் நிலையில் இருக்கின்றது. அந்த அன்னையின் அருள் வெள்

ளத்திலே திளைத்து வண்மைகண்ட பெரியார் பலராவார். மதம் சாக்தேயமாக இருக்கலாம். ஆனாலும் பக்தர்கள் தன் வயம் மறந்து ஆடிப்பாடி பலியிட்டு அருள் பெறுகிறார்கள். உணர்ச்சி வேகம் மிக அதிகமாக இருக்கிறது. பக்தி எல்லை கடந்ததாக இருக்கிறது. இந்தியர்கள் நாகரிகம் மிக்கவர்கள், அறிவுமிக்கவர்கள், பண்பாட்டிலும் சிறந்தவர்கள். இந்தியர்களுக்கு மதம் என்பது ஒன்று உண்டு. அது உலகப் பெருஞ்சமயங்களிலே தலைசிறந்தது என்பதாக உலக சமய அரங்கிலே அமெரிக்காவிலே தைரியமாகப்பேசி உலக மக்களுக்கு விழிப்புண்டாக்கிய இந்தியத்தவமுதல்வர் ஸ்ரீ விவேகானந்தரின் குரு - இராமகிருஷ்ண பரமஹம்சர் காளியின் அருள் பெற்றுத்தான் பெரும் உபதேச மொழிகளை வாரி வழங்கினார். அது உலகப் பெரும் இயக்கங்களிலே ஒன்றாக இன்று ஆகிவிட்டது. இராமகிருஷ்ண மிஷன் என்பதுதான் அது. இவ்விதமாக அருள் வழங்கும் காளியையும் அவ்விதமாக அருள்பெற்ற பெரியார் இராமகிருஷ்ணர் இருந்து உபதேசம் வழங்கிய பேலூர் இராமகிருஷ்ண மடாலயத்தையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சென்று பார்வையிட்டார்கள். கல்கத்தா காளி கோவிலில் கோவில் பூசாரிகள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை உரிய முறையிலே வரவேற்று தரிசனம் செய்துவைத்தார்கள். இவ்விதமாக இவைகளை முடித்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ரயிலுக்கு வந்தார்கள். டேராடூன் எக்ஸ்பிரஸ் (Dehra-doon express) என்னும் வண்டியில் புறப்பட்டார்கள். குமாரசுவாமி மடத்து T. A. சுப்பிரமணியம் அவர்களும் உடனிருந்தார், வட இந்திய பாஷைபேச முடியாத எங்களுக்கு அவர் வந்திருந்தது மிகவும் உதவியாக இருந்தது.

**வரும் வழியில் கயை :**

மறுநாள் 15—4—55 வெள்ளிக்கிழமை சூரிய உதயத்துக்கு முன்பே திருமஞ்சன மாதி வழிபாடுகளை முடித்துக்கொண்டார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள். விடிந்ததும் உபவாசமும் மௌனமும் நிறைவெய்தியது. அந்த சமயம் கயா ஜங்ஷனும் வந்தது. இந்த ஊர் பீகார் மாகாணத்தில் ஒரு ஜில்லாவின் தலை நகரமாக உள்ளது. பல்குனி நதியின்கரையில் அமைந்தது. இங்கு பிதிர்களுக்குப் பிண்டம் போட்டுக் கடன் கழித்தால் பிள்ளையாகப் பிறந்த ஒவ்வொரு இந்துவும் தன்

மூதாதையருக்குச் செய்யவேண்டிய பெரும் கடமையைச் செய்ததாகக் கருதப்படுவான். அதற்காகவே நித்தியப்படியிலும் ஏராளமாக மக்கள் வந்தவண்ணமாகவே இருப்பர். இங்கு இதைச் செய்துவைக்கும் பிராமணர்களுக்குக் கயாவாளிகள். அதாவது கயையில் உள்ளவர்கள் என்ற பெருமையுண்டு. பல்குனி நதியில் எப்போதாவது பெருமழை பெய்தால் தண்ணீர் ஓட்டம். இல்லாவிட்டால் தண்ணீரே இருக்காது. சிறு சிறு ஊற்றுக்கள் தோண்டிக்கொள்ள வேண்டும், வேறு சாதனங்கள் ஒன்றும் கிடையாது, கருமம் செய்யும் ஊக்கத்தில் இதுவொன்றும் மக்களுக்குத் தெரியாது.

**சோணுதீரம்:**

இது தாண்டியதும் கொஞ்ச நேரத்தில் டெஹ்ரி ஆன் ஸோனி (Dehri on sone) என்ற பெரிய ஸ்டேஷன் வந்தது. இது சோணுநதியின் கரையில் அமைந்து விளங்குகிறது. சோணுநதியில் அணைகட்டித் தண்ணீரைத் தேக்கி அதனைக் கொண்டு விவசாயத் தொழில் துறைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இவற்றில் சுயம்புவாக விநாயகர் சாளக்கிராமங்கள் கிடைக்கின்றன. அவைகள் பூஜைக்கு மிக விசேஷமானவை.

இங்கு இந்தியக் கோடீஸ்வரர் இராமகிருஷ்ண டால்மியாவின் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இங்கு காகிதம், சர்க்கரை, சிமிட்டி முதலிய பலவும்செய்ய ஆலைகள் இருக்கின்றன. லக்ஷக்கணக்கில் மக்கள் இருக்கின்றனர். அங்கு நம் தமிழ் மக்களும் பெரியதும் சிறியதுமான வேலைகளில் இருந்து வருகிறார்கள். திருக்கடவூர் தேவஸ்தானத்தில் சூப்பரின்டெண்டெண்டாக வேலை பார்த்துவரும் இராமாமிருதய்யர் மகன் நடராசன் அங்கே பெரிய வேலைபார்த்து வருகிறார். அவர் எவ்விதமோ கேள்விப்பட்டு ரயிலில் வந்து ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தைத் தரிசித்து உத்தரவு பெற்றுக்கொண்டார். மறுமுறைகூட ஸ்ரீ காசியில் ஒருநாள் வந்து தரிசித்துப்போனார்.

**ஸ்ரீ காசியில் வரவேற்பு:**

இவ்விதமாக ஸ்ரீ காசிக்குவந்த வண்டி காலை 10-45-க்கு வந்து சேர்ந்தது. அங்கே ஸ்ரீ குமாரசுவாமி மடத்து ஏஜண்ட்

மானேஜர் திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை, ஸ்ரீ காசியிலே பிரபலமாகப் பல தொழில்களும் வைத்து நடத்திவரும் திரு. வீரப்பன் என்ற முத்து வீரப்ப முதலியாரவர்கள், B A. L.L.B. பிரும்ம ஸ்ரீசூரியநாராயண சாஸ்திரிகள் மற்றும்பல அன்பர்கள் வந்திருந்து மாலை மரியாதைகளோடு வரவேற்றார்கள். ரயிலடியில் சற்று தங்கியிருந்துவிட்டு குமாரசுவாமி மடாலயத்திற்கு பகல் 12 மணிக்குமேல் எழுந்தருளினார்கள். தெருக்கோடியிலேயே ஒரு பெரிய வரவேற்புக் காத்திருந்தது. எங்கும் தோரணங்கள், ஆலவட்டங்கள், வரவேற்புக் கொடிகள், மேளதாளங்கள், இவ்விதமாக மிகப் பெரிய வரவேற்பை ஏற்பாடு செய்து வைத்திருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் உத்திரவுப்படி, மடாலயத்திற்குள் உள்ளே வந்ததும் கொலு. உடன்வந்த ஆதீன அடியார் சென்னை பிரசார நிலையத் தலைவர் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆதீன முறைப்படி வழிபாடுகள் செய்ய கொலு முடிந்தது. அதன் முடிவில் ஸ்ரீ காசி மடத்தின்சார்பில் ஒரு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது. மடத்தில் வரவேற்புக்கு வந்திருந்த ஸ்ரீகாசி ஹிந்து சர்வகலாசாலை சித்தாந்தப் பேராசிரியர் ஸ்ரீ சிவர்ராமன் பொது மக்கள் சார்பில் ஒரு வரவேற்பு நிகழ்த்தினார்கள். அதில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சுமார் ஐந்து வருஷங்களுக்குமுன் இதேமுறையில் ஸ்ரீ காசிக்கு எழுந்தருளிவந்து நமக்கெல்லாம் அருளாசி வழங்கினார்கள், இப்பொழுது அதைவிடப் பெரிய யாத்திரையை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். வழியிலே இந்த க்ஷேத்திரத்திலேயும் கொஞ்சநாள் தங்கி சங்கநாதம் ஸ்ரீ கேதாரீஸ்வரர் தரிசனம் ஸ்ரீ விஸ்வநாதர் தரிசனம் செய்திருந்து நம்மவர்களுக்கு அருள் வழங்கும் பொருட்டு எழுந்தருளியுள்ளது நம்மனோர் செய்த தவப்பயனாகும். மூன்று நாட்கள் ரயில் பிரயாணத்தால் களைப்புற்றிருப்பார்கள், உத்தரவு பெற்றுக்கொள்வோம். பிறிதொரு நாள் வந்து அருளுரை கேட்டுப் பயன் பெறுவோமாக. அவர்கள் மேற்கொண்டு வந்திருக்கும் யாத்திரை வெற்றிகரமாக நிறைவுறும் வண்ணம் பிரார்த்திப்போமாக.'' என்பது சுருக்கம். இத்துடன் வரவேற்புவிழா முடிவுற்றது. எல்லாரும் பிரசாதம் பெற்றுப் போயினர். இவ் விழாவுக்குக் காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமத் சங்கராச்சாரிய மடத்துப் பிரதிநிதி, காசியிலேயே மிகப் பிரபல

மாக உள்ள நகரச் சத்திரம் ஏஜண்டுச் செட்டியார் முதலிய பலரும் வந்திருந்தார்கள். வந்திருந்தோருக்கு அன்று பெரிய மகேஸ்வரபூஜை நடைபெற்றது.

**கங்கா ஸ்நாநம் :**

மறுநாள் அதிகாலையிலே கங்கைக்குச் சென்று நீராடி ஸ்ரீ கேதாரேஸ்வரரை வழிபட்டுத் திரும்பினுர்கள். கங்கையிலிருந்து அவர்களே கங்கை எடுத்து ஆதீன அடியார் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருமுறை ஓத வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன. அடியார்களுக்கு அன்னம் பாலிப்பு நடைபெற்றது

**ஸ்ரீ காசி மடத்தின் திருப்பணிகள்:**

குமாரசுவாமி மடாலயத்தின் சில பகுதிகளிலும் அதனைச் சேர்ந்த பல கட்டிடங்களிலும் திருப்பணிகள் பல செய்விக்கப் பெற்றிருப்பதை ஸ்ரீ கல்யாணசுந்தரம் பிள்ளையவர்கள் மாலையில் காற்று வாங்குதற்காக மேல் தளத்திற்குச் சென்ற ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்குக் காட்டினுர். சென்ற தடவை வந்திருந்த பொழுது பார்த்த பல பழங்கட்டிடங்கள் புதுப்பிக்கப் பெற்றிருக்கின்றன. சில இடித்தெடுத்துப் புதிதாகவே கட்டப் பெற்றிருக்கின்றன. இவ்விதமாகத் திருப்பணிகள் செய்து வெளிக்கட்டிடங்கள் பல வாடகைக்கு விடப்பட்டு மடத்திற்கு நல்ல வருமானம் வர ஏற்பாடாகி யிருக்கிறது. மடாலயத்திலும் காலை 10-30க்கு அன்னம் பாலிப்பு நடைபெற்று விடுகிறது. அப்பொழுதே இரவு ஆகாரத்துக்கும் பூரிசெய்து கொடுத்து விடுகிறுர்கள். இவ்விதமாக அததும் உரியமுறையில் காலத்தில் நடத்தப்பெறுவதறிந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெருமிதம் கொண்டார்கள். கேதாரேஸ்வரர் சந்நிதியில் 'தொண்டரஞ்சுகளிறுமடக்கி' என்ற திருப்பதிகம் பூராவும் சலவைக் கல்லில் செதுக்கி வைத்திருக்கப் பெற்றிருக்கிறது. ஒலிபெருக்கிவைத்து நித்தியப்படியிலும் அதிகாலையில் திருமுறைப்பாடல்கள் கொண்ட (வெளியீடு இசைத்தட்டுகள்) ஆதீன பிளேட்டுகள் வைக்கப்பெறுகின்றன. அது அங்கே கேதார கட்டத்தில் திருமுறைப்பாடல்கள் கேட்டுக்கொண்டே அவர்கள் கேதாரேஸ்வரரை வழிபடுகிறுர்கள். வடநாட்டுப்

பாஷையிலேயே பாடல்கள் கேட்கக்கூடிய அந்த இடத்தில் அங்குவதியும் தமிழர்களுக்குச் செய்திருக்கும் உதவிகள் பல வற்றில் இதுவும் ஒன்று. இவ்விதமாகவே பல பெரியகாரியங்கள் ஆரவாரமின்றிச் செய்விக்கப்பெற்றன. குறிப்பிட்ட நாட்களில் அன்னம் பாலிப்புக்கு என்று பல நிதித் திட்டங்கள் அமைத்து நடைபெற்று வருகின்றன.

**செய்திகள்:**

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இந்த யாத்திரை தொடங்கி ஸ்ரீ காசி வந்துசேர்ந்த செய்தியறிந்த திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அடியிற்கண்ட செய்தியை அனுப்பியுள்ளார்கள்.

',Rejoice safe arrival Banaras by the grace of Lord Nataraj and Chockalinga may the pilgrimage be a splendid success with spiritual bliss.

இவ்விதமே அன்பர்கள் பலரும் செய்திகள் அனுப்பி வருகிறார்கள்.

**பிரசாதம்:**

முன்னொரு இடத்தில் சொல்லியிருக்கிறபடி "தான் பெறும் இன்பம் மற்றையோரும் அடைய வேண்டு"மென்ற பெரும் நினைவால் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் உத்திரவுபடி ஸ்ரீ காசிப் பிரசாதம் பல அன்பர்களுக்கும் பல மடாலயங்களுக்கும் அனுப்பப்பெற்றது. உலகம் வாழ்ந்தால் நாம் வாழலாம் என்பதான ஒரு பெருங் கொள்கையை உடையவர்களல்லவா. கங்கையில் நீராடச் செல்லும்பொழுது "மற்ற அன்பர்களையும் இங்கு வந்து நீராடச் செய்யவேண்டும். ஊர் போனதும் அவர்களை வரச் செய்யவேண்டும்." என்று உத்தரவாகி வருகிறது. இவ்விதமே முன் தடவையும் திருவுளத்தில் தோன்றிய குறிப்பின் காரணமாகத் தமிழ்நாட்டிலிருந்து பலரும் வந்து கங்கையில் மூழ்கிச் சிவபுண்ணியம் பெற்றார்கள். பெற்று

வருகிறார்கள். அவர்களுக்கு விருப்பமிருந்தாலும் இவ்வளவு தொலைதூரம் வரவேண்டுமே, அதுவும் பாஷைத் தொல்லை வேறு என்று நினைத்துத் தள்ளிப் போட்டுக்கொண்டே வருபவர்களுக்கு ஸ்ரீ குமாரசுவாமி மடாலயம் இருக்கிறதை நினைவூட்டிப் பலரையும் ஸ்ரீ காசி முதலிய வடநாட்டு "தலம் தீர்த்தங்களுக்கு வந்து போகும்படி செய்து வருகிறார்கள். அநேகமாக ஆதீன மடாலயத்தில் உள்ள அடியார்கள் முதல் பணியாட்கள் ஈறாகப் பலரும் வந்து கங்கையில் நீராடி வந்திருக்கிறார்கள். அடிக்கடி பலபல கோஷ்டிகளாகச் சேர்த்து இவ்விதம் அனுப்பப் பெறுகிறார்கள்.

## ஸ்ரீ காசி விஸ்வநாதரை வழிபடல்:

*17—4—55* ஞாயிறன்று ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர் தரிசனத்திற்கு இரவு 7 மணிக்கு எழுந்தருளினார்கள். அந்த நேரத்தில் அங்கு நித்திய பூஜையில் சிறப்பானதாக உள்ள சப்தரிஷி பூஜை நடைபெற்று வந்தது. கோவில் பூஜகரான பண்டாக்கள் எழுவர் இருந்து செய்யும் பூஜை. ஒருவர் பெரிய உடுக்கை ஒன்றை வைத்து அடிக்கிறார். சுற்றிலும் பலர் உட்கார்ந்து மந்திரம் சொல்லுகிறார்கள். பெருமானுக்கு ஐந்து தலைகளையுடைய நாகாபரணம் சாத்தி அலங்கரித்துப் பூஜை தொடங்குகிறார்கள். அன்பர்கள் ஏராளமாகப் பூக்கொண்டுவந்து கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அவற்றை வாங்கிப் பெருமானிடம் காட்டிவிட்டுத் திரும்பக் கொடுத்துவிடுகிறார்கள். அதைக் கழுத்தில் மகாப் பிரசாதமாகப் போட்டுக்கொண்டு பெரும் மகிழ்ச்சியோடு செல்கிறார்கள் பக்தர்கள். இந்தப் பூஜை அலங்காரம் மிக அழகாக அமைந்து விளங்குகிறது. உணர்ச்சி ஊட்டக்கூடிய பூஜைதான். பூஜகர்களும் உணர்ச்சி வசத்தர்களாகவே பூஜையைச் செய்கிறார்கள். விருதுகள் எடுக்கப் பெறுகின்றன. தாளபாவத்தோடு அந்த ஏழு பூஜகரும்சேர்ந்து வழிபாடுகள் நடத்துகிறார்கள். அவர்கள் கையில் ஏழு முகமுள்ள தீபங்கள் வைத்திருக்கிறார்கள். இது நீண்டநேரம் சுமார் இரண்டு நாழிகை அளவாவது ஆகக்கூடிய பெரும்பூஜை. தில்லையைப்பற்றிப்பேச்சு வரும்பொழுதெல்லாம் உத்தரவாகும். "அங்குள்ள இளவயதினரான தீக்ஷதர்கள் நடராஜப் பெருமானுக்கு அழகு பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்வார்கள்

அவ்விதம் செய்வது நல்லதாக அழகாக அமையப்பெற்றிருப்பதைப் பார்த்துப் பார்த்து ஆனந்த மேலீட்டால் குதிப்பார்கள். அதேபோல இங்குள்ள பண்டாக்கள் பூஜை தொடங்கும் பொழுதே உணர்ச்சி உச்ச நிலையில் உடையவர்களாகத் தொடங்குகிறார்கள். இது தரிசனம் செய்யும் அன்பர்களையும் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்துவதாக அமைந்துவிடுகிறது." உடுக்கை அடிப்பவர் அதனை இராக தாள பாவத்தோடு ஆடிக்கொண்டு அடிக்கிறார். இதனால் வயதான கிழவர்களாகவுள்ள பண்டாக்களும் உணர்ச்சியில் ஆழ்கிறார்கள். சுற்றிலும் உட்கார்ந்து மந்திரம் சொல்லும் பெரியவர்களும் அவ்விதமே ஆகிறார்கள். இங்கு நடைபெறும் வழிபாட்டில் இராவணன் செய்த "சிவதாண்டவ ஸ்தோத்திரம்" (வேதம்) சாகை சொல்வதுபோல அந்த ராகத்தில் சொல்லப்படுகிறது. அதுதான் இவ்வளவு உணர்ச்சி யூட்டக் கூடியதாக அமைகிறது.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தரிசனத்துக்கு எழுந்தருளியது தெரிந்ததும் அந்தப் பண்டாக்கள் தர்ப்பாசனம் கொடுத்து முன்னிடத்தில் எழுந்தருளச் செய்தார்கள்: இது அக்கோவிலில் கொடுக்கப்பெறும் பெரிய மரியாதையாகக் கருதப்படுகிறது. வழிபாட்டு முடிவில் பிரசாதங்களை வழங்கினார்கள். இவ்விதமாக அங்குத் தரிசனம் முடித்துக்கொண்டு அன்னபூரணி அம்மையின் ஆலய வழிபாட்டுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். வழிபாடு முடித்து திரும்ப குமாரசுவாமி மடாலயம் வந்துசேர மணி 9-30-க்குமேல் ஆகிவிட்டது.

## ஸ்ரீ காசியில் திருமணம்:

அன்னபூரணி ஆலய வழிபாடுகளை முடித்துக்கொண்டு நாங்கள் திரும்பும்பொழுது ஒரு கல்யாண ஊர்வலம் எங்கள் எதிரேவந்தது. இந்த ஊர் கல்யாணங்கள் நடக்கும் முறை பற்றி விசாரித்தேன். இங்குத் திருமாங்கல்யதாரணம் என்பது கிடையாது. பண்டிட், வேதசாஸ்திரி வந்து அக்னிகாரியங்கள் சில செய்து மாப்பிள்ளை பெண் இருவரையும் ஒருவர் கையை மற்றவர் பற்றும்படி செய்து பெண் நெற்றியில் மணமகன் திலகம் இடுவது. இதற்குத் 'திலக்' என்று பெயர். இது முடிந்தால் திருமணம் முடிவடைந்ததாக ஆகிறது. திருமணங்கள் இரவில்தான் செய்யப்படுகின்றன. மேளதாளங்கள்

434

போன்ற சிறப்புக்கள் எல்லாம் நம்நாட்டில் உள்ளதுபோல அவரவர் சக்திக்குப் ஏற்ப இங்கேயும் உண்டு. ஆபரணங்களில் அநாவசியமாகப் பணம்போட்டு வீணாக்குவது கிடையாது. அந்தஸ்துக்கேற்ற நல்ல ஆடைகள் உண்டு. சாதரா என்று நம் பக்கத்தில் வழங்கும் பொன்னாடையை ஆண் பெண் இருவரும் மேலே போர்த்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஊர்வலங்கள் இருவர் குதிரைகள்மேல் முன்செல்ல வாத்தியங்கள் முழங்க சிறு கைப்பல்லக்கில் செல்கின்றன. இந்தத் திருமணம் பாணிக்கிரகணம் என்று சொல்லப்படுவது. அதாவது கரம்பற்றல் என்பது. வரவேற்பு வைக்க விரும்புபவர்கள் கங்கையிலே இதுபோன்ற காரியங்களுக்காக உள்ள பெரும் படகுகளை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதை அலங்காரம் செய்து மேல் தளத்தில் கூடாரம் இட்டு அதிலே மணமக்களை இருத்தி நாட்டியங்கள் நடனங்கள் முதலிய கேளிக்கைகள் நிகழ்த்துவதுமுண்டு. இது மிகவும் வேடிக்கையாகவும் அழகாகவும் இருக்கும். இது முடிந்ததும் மணமக்கள் அன்னபூரணா சந்நிதிசென்று அங்குள்ள ஊர்த்துவ மேருவுக்கு சாஸ்திரி மந்திரம் (லலிதா திரிசதி) சொல்ல இருவரும் சேர்ந்து குங்குமம் எடுத்து அர்ச்சனை செய்கிறார்கள். குடும்பத் தொடக்கத்தில் அருள்பெற்றுத் தொடங்குகிறார்கள். பக்தி அவ்விதம் அளவுகடந்து இருக்கிறது.

**பக்தியும் உடற்பயிற்சியும்:**

வேடிக்கையாகவேனும் இங்குக் கடவுள் இல்லை யென்ற பேச்சுப் பேசமுடியாது. அப்படி ஏதாவது சொன்னால், என்ன நடக்குமோ தெரியாது. யார் எந்தத்தொழில் செய்பவராக இருந்தாலும் காலையில் கங்கைக் கரை வந்து உடம்பிலே எண்ணெய்தடவி தேய்த்து முருக்கேற்றிக்கொண்டு தண்டால் பஸ்கி போன்ற ஏதாவது செய்துவிட்டுக் கங்கையில் விழுந்து நீந்தி நீராடி ஏதாவது ஒரு ஆலயத்திற்குச் சென்று வணங்கிவிட்டுத்தான் மற்ற காரியங்கள் பார்ப்பார்களாம். அவ்விதமே காணப்படுகிறது. எப்பொழுது பார்த்தாலும் கங்கைக்கரையிலே கூட்டம் அதிகம். மேலே சொன்ன காட்சிகளைக் காணலாம், சிறுவர்கள் கூட மேலே சொன்னபடி உடற்பயிற்சி செய்துவிட்டு, குஸ்தி போட்டுப் பழகிவிட்டுத் தண்ணீரில் பொத்தென்று விழுந்து இளைத்து வீடு செல்கிறார்கள். வெறும்

சோனியாக இல்லை அவர்கள். நல்ல வலுவேற்றப் பெற்றவர்களாவே இருக்கிறார்கள். இவ்விதமாகக் கண்ணால் கண்டவற்றைச் சிந்தனை செய்துக்கொண்டே வந்தோம் நாங்கள்.

மறுநாள் 18-4-55 அன்று பிரயாகை என்னும் அலகாபாத் செல்வதாகத் திட்டம்.

•

**ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆட்சியின் 10-வது ஆண்டு நிறைவுநாள் விழா ;**

சாதாரணமாக பஞ்சாங்கத்தைப் புரட்டினேம். அதிலே 18—4—55 அன்று சித்திரை சதயம் என்று போட்டிருந்தது. அந்த நாள்தான் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்கு அபிஷேகம் ஆகி பீடாதிபத்தியம் ஏற்றநாள். தருமையில் இருந்தால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவேண்டிய திருநாள். ஆனல் ஆண்டவன் திருவருள் நல்ல மிகப் பெரிய சிவராஜதானியாகிய ஸ்ரீ காசிமாநகரத்தில் வைதிகமாக நடத்தப்பட வேண்டுமென்று. ஆகவே அன்று அலகாபாத் போவதை நிறுத்திக் கொண்டு (18—4—55ல்) மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றாலும் சிறப்புமிக்க ஸ்ரீ காசியிலேயே சிறப்பு வழிபாடுகளும் அன்னம் பாலிப்பும் நடத்துவதென்று திட்டமாயிற்று. இது இரவு 10 மணிக்குத் திட்டமாயிற்று. இவ்விதமாக ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்துக்குப் பெரு விழா அங்குத் திருவருள் வாய்ப்பாக நிகழப்போகிறதென்று அறிந்த திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கள் எல்லா ஏற்பாடுகளுக்கும் நியமனம் செய்தார். மறுநாள் (18—4—55) காலை 9 மணிக்குள் அபிஷேக ஆராதனைகள் நடைபெறத்தக்கதான ஒரு பெரிய ஏற்பாட்டைச் செய்து முடித்துவிட்டார்.

அதிகாலையில் வழக்கம்போல் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் கங்கையில் நீராடிக் கேதாரேஸ்வரரை வழிபட்டு மடாலயத்தில் எழுந்தருளினார்கள். திருமஞ்சனத்திற்குப் புறப்படும் சமயம் திருப்பனந்தாள் காசிமடத்து ஓதுவார் திரு. கேதாரம் எனச் சிறப்புத் திருநாமம் இடப்பட்டவர் வந்து சேர்ந்தார். இதுவும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகளவர்கள் ஏற்பாடுகளில் ஒன்று. விரைவிலே அவர்களும் வந்து சேரக்கூடும் என்பதற்கு

முன்னறிவிப்பாக இருக்கக்கூடுமோ என்று நாங்கள் எண்ணினோம். அவரைக்கேட்டால் அது பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஸ்ரீகாசிக்கு எழுந்தருளியுள்ளார்கள். செல்க. சென்றதும் வழக்கம்போல அவர்களைக் கண்டவுடனே கேதாரப் பதிகத்தினைப் பாடிக்கொண்டிருக்க வேண்டியதென உத்தரவு. வந்திருக்கிறேன்'' என்றார். அவர் வந்தது திருமுறைப்பாராயணம் முறைப்படி செய்ய ஒருவர் வந்ததாயிற்று. அன்று காலை மணி 10. கேதாரேஸ்வரர் ஆலய தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கு அபிஷேகத்திற்கு ஏராளமாகப் பால் வந்திருந்தது. பால் என்றால் வெண்ணெ திரளும் பால். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தன் திருக்கரத்தாலேயே பால் தயிர் முதலிய எல்லாவற்றையும் அபிஷேகித்து நிவேதனம் செய்து வழிபட்டார்கள். ஓதுவார் திருமுறைப்பாராயணம் செய்தார். இதனை முடித்துக்கொண்டு ஸ்ரீ காசி விஸ்வநாதராலய வழிபாட்டுக்கு எழுந்தருளினார்கள். அங்கும் இதை விட மிக அதிகமாகப் பால் வந்திருந்தது. இவ்வளவு பெரிய பாலபிஷேகத்தைத் தரிசிக்க அன்பர்கள் பெருங்கூட்டமாக வந்திருந்தார்கள்.

இங்குச் சொல்லவேண்டிய செய்தி ஒன்றுள்ளது. மூன் வருஷத்தில் ஒருமுறை ஸ்ரீ காசி யாத்திரைசென்று வரவேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் உத்தரவாகி ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. அப்பொழுது ஒருநாட் செய்தியில் உத்தரப் பிரதேசத்தில் ஆலயப் பிரவேச சட்டம் அமுலுக்கு வந்திருப்பதாகவும், அதனைக் காசிப் பண்டாக்கள் எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கிட்டிருப்பதாகவும், இதனால் சாதாரணமாக ஜாதி இந்துக்கள் சென்று திருமேனி தொட்டு வழிபட்டு வந்ததையும் தடைசெய்து தரிசனம் செய்ய மாத்திரம் அனுமதிக்கிறார்கள் என்றும், பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் ஏதேனும் செய்வதாக இருந்தால் அதை அங்குள்ள பண்டாக்கள் மூலம்தான் செய்யமுடியும் என்பதாகவும் போட்டிருந்தது. இதனைக் கண்டதும் "பெருமான் உத்தரவாகவில்லை. எல்லா ஏற்பாடுகளையும் நிறுத்திவிடுங்கள் என்று'' உத்தரவாகிவிட்டது. பெருமானைத் தொட்டு வழிபட வசதி ஏற்பட்டால்தான் அங்குப் போகவேண்டும். அதுவரை காத்திருப்போம். பெருமானுடைய அருள் கிடைக்கும்பொழுது போகலாம் என்று

மனம் கனிந்து உத்தரவாயிற்று. இத்தடவையில் இவ்விதமான அபிஷேக ஆராதனை வேண்டாம். சாதாரணமாக கங்கையில் நீராடியிருந்து காசி விஸ்வநாதர் தரிசனம் மாத்திரம் வைத்துக் கொண்டு கேதாரத்துக்கு எவ்வளவு விரைவில் புறப்பட முடியுமோ அவ்வளவு விரைவில் புறப்பட வேண்டியதென்று திட்டம். ஆனாலும் எதிர்பாராது இந்தப் பெருநாள் வந்து விடவே" எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்கள். வேண்டிய வேண்டியாங்கு வழங்கும் பெருமானுக்குத் தெரியும் எவ்விதம் நடத்திக்கொள்வதென்று. நமக்குத் திருவருள் துணை இருக்கிறது. எல்லாம் சரியாகவே நம் நினைப்புப்படியே நடக்கும்" என்று திருவுளம் பற்றினார்கள். அதன் விளைவாக மறுநாள் இந்த ஆராதனைக்கென்று, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளியானதும் அங்குள்ள பண்டாக்கள் அவர்களாகவே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திலேயே எல்லாவற்றையும் நியமமாக நேரே அபிஷேக ஆராதனைகள் செய்துகொள்ளட்டும். ஆனால் ஒன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தவிர உடன் வந்திருப்பவர்களாயினும் எவ்வளவு முக்கியமானவர்களாக இருந்தாலும் மற்றவர்கள் செய்யக்கூடாது. இந்த நிபந்தனையின் பேரில் செய்யலாம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்கு அடுத்துக் கைப் பணிவிடைகள் யாரும் செய்யலாம். அதனையும் அனுமதிக்கிறோம்" என்றார்கள், எங்களுக்கெல்லாம் இது பெரு வியப்பாகவே ஆகிவிட்டது. இவ்விதம் திருவருள் துணை இருக்கிறது என்று காட்டிவருகிறது. இது பேரூக்கத்தைத் தருவதாகவே அமைகின்றது.

இந்த மகாபிஷேகத்தை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் செய்து அடியார்கள் வேண்டியதை வேண்டியபடி அருள்வழங்கும் வண்மையை நினைந்து பக்திபரவசத்தோடு வழிபாடுகளைச் செய்து முடித்தார்கள். ஸ்ரீ விஸ்வநாதஸ்தாநம் நிறைந்து வழிந்தோடும்படியாக அவ்வளவு மிகுதியாக இருந்தது பாலும். அப்பொழுது ' ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளத்திலே பாலுக்குப்பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்தருளியபெருமானைப்பாற்கடலில்திளைக்கச்செய்யும்வாய்ப்புக் கிடைத்த பெருமிதம் காணப்பட்டது. இவ்விதமாக ஆராதனைகளை முடித்துக்கொண்டு திருமடத்திற்குப் பகல் 1-30 மணி அளவில் திரும்ப வந்து சேர்ந்தோம். அடியார் கூட்டம் அதிக

மாகவே இருந்தது. அவ்வளவு பேருக்கும் அன்னம் பாலிப்பு நடைபெற்றது. அவர்களுக்குக் காசும் வழங்கப்பெற்றது. ஏழை களுக்கு உணவு அளித்ததோடன்றிப் பூரியும் கிழங்கும் வழங்கப் பெற்றன.

**சமயப்பிரசாரம்:**

இவ்விழாவில் வேறொரு திருநாளும் சேர்ந்துகொண்டது. அது அப்பரடிகள் குருபூஜை. இரண்டையும் உத்தேசித்து ஸ்ரீ கேதாரேஸ்வரர் ஆலயத்தில் மாலை நேரத்தில் சமயச் சொற் பொழிவுக்குத் திட்டமாயிருந்தது. தமிழன்பர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளும் தொண்டர் சிவஞானமும் பேசினார்கள்.

**கங்கா தீர்த்தக்கட்டங்கள்:**

மாலையில் படகுஒன்றைத் திட்டம்செய்து அதில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் அடியேனைப்போன்றவர்களும் ஏறிக் கங்கை யில் உள்ள எல்லாக் கட்டங்களையும் தரிசிக்கச் சென்றோம். ஓது வார் உடன்வந்தார். கேதாரபதிகம் பாடினார். அதில் சிறப்பாக உள்ள "கொட்டமே கமழும்" என்ற பதிகம், திருவகவல், கந்தர் கலிவெண்பா என்பவற்றையும் பாடினார். இவ்வித மாகச் சென்று பல கட்டங்களையும் தரிசித்துத் திரும்ப மணி 9 ஆகிவிட்டது. இடைவழியிலே பல நற்சிந்தனைகள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுள்ளத்தில் தோன்றின. அவை விரிக் கிற் பெருகும். இதுபற்றிப் பின்வரும் கட்டுரையில் காணலாம். இவ்விதமாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் 10ஆவது ஆண்டு ஆட்சிப் பூர்த்திவிழா ஸ்ரீகாசியில் வைதிகம் சிறக்க ஆன்மார்த்த மாக நடைபெற்றது.

# பூலோக விமர்சனம்

## (பதினேழாம் நூற்றாண்டு வேங்கடாத்வரீ)

தமிழில் ஆக்கியவர்

பிர்மஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

விச்வாவசு ஸமுத்ரதீரத்தில் உள்ள ஜகந்நாத க்ஷேத்ரத்தைப் பார்த்தான். "பகவான் நாராயணனுடைய ஸான்னித்தியமுடையது இந்த மஹாக்ஷேத்ரம். இங்கு மரிப்பவர்கள் முக்தியடைகிறார்கள். மரித்த தேகமும் கட்டைபோல் விகாரமடையாமல் இருக்கிறது என்பது ஆச்சரியம். இங்கு பகவத் ஸந்நிதியில் பக்தர்கள் கீழ்ப்பட்ட ஜாதி மேல்பட்ட ஜாதி என்ற வித்யாசமில்லாமல் பகவந் நிவேதனத்தை வாங்கிப் புசிக்கிறார்கள். இந்த க்ஷேத்திரத்தில் பகவான் மரக்கட்டையில் ஆவாகனம் செய்யப்பட்டிருக்கிறார்." என்றவாறு விசேஷங்களைக் குறிப்பிட்டுவிட்டு ஜகந்நாதனுக்கு வந்தனம் செய்தான்.

பிறகு வெகு தூரத்திற்கு அப்பால் விமானத்தைக் கடத்திச் சென்றுவிட்டு குர்ஜா தேசத்தை நோக்கிப் பின்வருமாறு புகழ்ந்து பேசினான். "ஸர்வ சம்பத்துக்களும் நிறைந்த இந்தத் தேசம் ஸ்வர்க்கலோகத்திற்கு நிகரானது. இதைக் கண்குளிரப் பார்க்கலாம். இங்குக் கர்ப்பூரம் கலந்த தாம்பூலம் அருந்தும் ஆடவர்கள் திவ்யமான வஸ்திராலங்காரங்களுடனும், வாசனைப் பூச்சுக்களுடனும் உல்லாசமாய் அதேமாதிரி தாம்பூலம் தரித்து வஸ்திராபரணங்கள் பூண்டு வாசனைப் பூச்சுக்களுடைய யுவதிகளுடன் இனிது வாழ்கிறார்கள். இந்தத் தேசத்துப் பெண்மணிகளின் அழகு தனிப்பெருமை வாய்ந்தது. உருக்கி வார்த்த தங்கத்தின் சாயையை உடைய தேககாந்தி. குரல் இனிமையோ அமிர்தத்தை ஒத்தது. தாமரைபோன்ற முகம். நீலோத்பலம்

போன்ற கண்கள். தளிர்போன்ற கரங்கள். சிவந்த மிருதுவான இதழ்கள். குர்ஜர யுவதிகளின் அழகை யாரால் வர்ணிக்க முடியும்?

கிருசானு:- "நீ சொல்வது உண்மைதான். ஆனால் அந்த ரஸத்தை இத் தேசத்து யுவர்கள் அறியார்போலும். ஏனெனில் தன் காந்தைகளை இளம் வயதில் விட்டுவிட்டு ரத்ன வியாபாரத்தின் பொருட்டு அவர்கள் தேசாந்தரங்களில் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறார்கள்."

விச்வாவசு:- அடே மூட்டாளே. புருஷர்களுக்கு இது குணமல்லவா? அதையே நீ தோஷமாகச் சொல்லுகிறாயே. புருஷர்கள் தேசாந்தரங்களின் விந்தைகளைப் பார்த்து அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டாமோ? பொருள் சம்பாதிக்க வேண்டாமோ? தேசாடனம் செய்து திரவியத்தைத் தேடி வந்து ஸகல ஸௌபாக்கியங்களையும் தங்கள் ஸ்திரீகளுடன் அனுபவித்துக்கொண்டு அவர்கள் இனிது வாழ்கிறார்கள். அப்படியில்லாவிட்டால் அவர்கள் கண்ணியமான புருஷர்கள் ஆகாமல் மட்டரகமான மனிதர்கள் ஆவார்கள். சம்பாதிக்க யோக்யதையில்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு ஸ்திரீ மோஹத்தில் மயங்கிக் கிடப்பவன் ஸ்திரீகளாலேயே அதிசீக்கிரத்தில் உதாசினம் செய்யப்படுகிறான். தரித்திர வாழ்க்கை நடத்த வேண்டியவனாகிறான். அவனுக்கு வெளியுலகிலும் செல்வாக்குக் கிடையாது. ராஜ ஸதஸுக்கு அவன் செல்ல முடியுமா? நான்கு கண்யமான மனுஷ்யர்களுடன் அவன் நன்கு பழகமுடியுமா! அவன் பெண்பிள்ளைபோல் வீட்டை விட்டு வெளியில்வரப் பயந்துகொண்டு பதுங்கிக் கிடப்பான். கிணற்றுத் தவளைபோன்று அவன் ஜீவித்து என்ன பிரயோஜனம்? உலக விருத்தாந்தத்தை அவன் என்ன அறிவான்? அவனுக்குச் சுகம் ஏது? வேறு வேலையைவிட்டுப் பெண்களின் முகத்தைப் பார்த்து மயங்கி வீட்டிலேயே கிடக்கும் அவன் அதிசீக்கிரத்தில் தரித்திரனாகிக் கடுந் துக்கங்களை அனுபவிக்க நேரும். உலகத்தில் சுகமாக வாழ விரும்புகிறவன் ராஜசபைகளில் பிரவேசித்து வித்வான்களுக்கு மனோகரமாயுள்ள உபந்யாசங்களைச் செய்து சிரமமில்லாமலும் கௌரவமாயும் பணத்தைச் சம்பாதித்து ராஜகுலத்தில் உள்ள அதிகாரிக

னுடைய அன்பைக்கவர்ந்து லோகோபகாரமான பெரிய காரியங்களைச் செய்து எவனுக்கும் விரோதியாகாமல் வாழவேண்டும். அதுதான் வாழ்வு. மற்றது வீணே!

விச்வாவசு வெகு தூரத்திற்குஅப்பால் ரதத்தைச் செலுத்தி நிறுத்திக்கொண்டு யமுனா நதியைப்பார்த்து வணங்கினான். "காளிந்தி உன்னைப் பார்த்ததும் உன் ஜலங்களில் லீலைகள் புரிந்த ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஞாபகம் வருகிறது. உன் கரைகளில் அடர்ந்திருக்கும் கொடி வீடுகள் எவ்வளவு அழகாயிருக்கின்றன. இந்தஇடங்களில் கோபிகள் கிருஷ்ணனை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். கோபிகளால் காதலிக்கப்பட்ட அந்த கிருஷ்ணபகவானுக்கு என் நமஸ்காரம்"

கிருசானு குறுக்கிட்டான். "அந்த வெண்ணெய் திருடியான கிருஷ்ணனையா நமஸ்காரம் செய்கிறாய்? அந்தக் கோபிகளின் காதலனையா துதிக்கிறாய்?

விச்வாவசு:- நண்பா! அப்படிச் சொல்லாதே! பரமாத்மா லோகபாவனன் லோகஸம்ரக்ஷணார்த்தம் அவதாரம் செய்த பரம புருஷன். பக்தஜன அநுக்ரஹகர்த்தா, யாதவகுல ப்ரதீபன். அவனை நிந்திக்கிறாயே! அவனுடைய சரித்திரங்களை கானம் செய்தால் பாபம் விலகும். க்ஷேமம் உண்டாகும். பரமாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணனை மறுபடியும் மறுபடியும் ஸ்மரித்து நான் நமஸ்கரிக்கிறேன். அவரை வணங்காதவர்கள் யார் இருக்கிறார்கள்? கிருஷ்ணன் திருடன் என்கிறாயே! ஒரு ஆச்சரியத்தைக்கேள் அவன் வெண்ணெய் திருடிய சரித்திரத்தைக்கேட்டால் நம்முடைய அக்ஞானமாகிற புராதனப் பொருளெல்லாம் திருடப்பட்டுப்போகும். மேலும் பகவான் ஸ்ரீமந் நாராயணன் அசுர வதத்தின்பொருட்டு அவதாரம் செய்தார். கம்சன், பகன், அகன், பாணன், பௌண்ட்ரன் முதலிய அசுரர்களை அவர் ஸம்ஹாரம் செய்தார். சிஷ்டர்களுக்கு அடைக்கலமானார். அவருடைய புண்ணிய சரித்திரங்களைக்கேட்டால் நமக்கு எல்லாவித க்ஷேமங்களும் உண்டாகும்.

(தொடரும்)

# பூனையும் குரங்கும்

பண்டிதவித்துவான், திரு. தி. இராமாநுசன் அவர்கள்

"பூனையும் குரங்கும்" என்று ஒருகதை உண்டு, நாம் எல்லாரும் சிறு வயதில் படித்தது. இரண்டு பூனைகள். அன்போடு ஆதரித்து வாழவேண்டிய ஒரே இனம். அப்படியும் சில காலம் வாழ்ந்திருக்கும். பிறகு, அவைதம்முள் வேறுபாடு வந்துவிட்டது. காரணம் பொருள்தான். கேவலம் சிறிய அப்பத்துண்டு அப்படிப் பிரித்துவிட்டது.

அப்பத்துண்டு ஒன்று வழியிலே கிடந்தது. இரண்டு பூனைகளும் அதனைக்கண்டு எடுத்தன. பின் பங்கீடு நடந்தது. பங்கீட்டிலே விவாதம், மனக்கசப்பு, சண்டை எல்லாம் வந்தன கூடுதலோ, குறைவோ தாங்களே தீர்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவு பொறுமையும் பெருமையும் நம்மிடமே இல்லையே! பகுத்தறிவற்ற மிருகங்களிடம் எப்படிக் காண இயலும்? பகைமையால் இறுதிவரை போரிடுவதே மிருக இயல்பு.

இடையிலே வந்த குரங்கு வழக்குத் தீர்த்தது. தீர்த்த குரங்கு துண்டுகளைப் பங்குபோடத் தொடங்கியது. சில நேரம் துண்டுகளிலே சமஎடை இல்லாமல் போகும், அதனை ஒழுங்கு பண்ணச் சிறிது சிறிதாய்க் குரங்கு தின்றுக்கொண்டே வரும். வந்து கடைசியில் குரங்கு முதலையே கைப்பற்றி விட்டது. பூனைகளின் அறியாமையோ சொல்லத் தரமில்லை. சிறிது கூடினும் நம்மினந்தானே என்று விட்டுக்கொடுக்காது. பொறாமையால் மூன்றாவதான குரங்கிற்கு அவை இடந்தந்தன. இறுதியிலே பூனைகள் தம் உடைமையையே இழந்து நின்றன. பிறகு பூனைகட்குப் புத்தி வந்திருக்கலாம்: ஒற்றுமையும் பெற்றிருக்கலாம்! நடந்தது என்னவோ நமக்குத் தெரியாது. கண்கெட்ட பிறகு பரிதிவணக்கம் பயனுதரும்? போனது போனதுதானே! பூனையின் பேச்சை இவ்வளவிலே நிறுத்தி மேலே போவோம்.

கதையின்படி பகைமை பொறாமை ஆகிய தீய குணங்களை பூனையிடம் காண்கின்றோம். குரங்கு மட்டும் தங்கமானதா? இல்லை, திருட்டு, சூழ்ச்சி! வஞ்சகம். எல்லாம் குரங்கிடமும் குடிகொண்டுள்ளன. கேட்ட நமக்கு இரண்டின் மீதும் கெட்ட

எண்ணம் தான்வரும். இந்தக்கதையினுல் மட்டும் இல்லை. நாம் கேட்கும் பழமொழிகள்: வழங்கிவரும் வழக்குகள் கற்பித்த கற்பனைகள் — எல்லாம் அப்பொல்லா நினைவை நீரூற்றி வளர்க்கும்

"குரங்கு மனம் கெடுத்து என்னை ஆள்" இது கடவுளிடம் அடியவர் இடும் முறையீடு. அவர் மனம் ஒருப்படாவிட்டால் குரங்கு என்ன செய்யும்? நிலையற்ற மனம் அதற்கு உண்டு. அதனுல் என்ன? 'என் தீமனம் கெடுத்து ஆள்' என்று கூறலாம். நாம் வைய விரும்பும் ஒருவனையும் 'குரங்கே' என்கிறோம்; அழகற்றவனைக் 'குரங்கன்' என்று ஏசுகிறோம். தாய்க்குரங்கு, சுடுகின்ற கூழிலே குட்டியின் கையை விட்டுத் துழாவும். தாயன்பும் அதற்கு இல்லை என்று சொல்லாம். பூனைகளைப் பற்றிய பேச்சும் இப்படியே தான். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் சிலர். அவர்களை 'உருத்திராக்ஷப்பூனை' என்பர். அடுப்படியிலே அசையாது அமர்ந்திருக்கும் பூனை. மிக நல்ல உள்ளத்துத் தவசிபோல் காட்சி தரும். ஆனுல் வீட்டுப் பாட்டியது எண்ணம் வேறு! பூனைக்குப் பாலைக் கவிழ்க்கும் திருட்டு எண்ணமாம். அவ் வெண்ணத்துடன், நம் கண் அவிய அடுப்படியில் அது தவம் கிடக்கிறதாம்! இது பாட்டியின் எண்ணமா? அல்லது பூனையது நினைவு தானு? எப்படியும் முடிவுகட்டுங்கள்.

பாரதியார் "குயிற்பாட்டிலே" குரங்கைச் சிறிது அழகுறுத்திப் பேசியிருக்கிறுர். திருவாரூர்ப் பெருநகரிலே சோலைகள் மிகுதி. மரக்கிளைகட்கு இடையே குரங்குகள் நடமாடும். பலாப்பழத்தை மடியிலேவைத்து விலாப்புடைக்கத் தின்னும் அந்நிலையில், அவை இரணியனைக் கீண்ட திருமாலோடு ஒக்குமாம்! இது குமரகுருபரரது வருணனை, இப்படியாவது ஒப்புமையால் அதற்குத் தெய்வத்தன்மை கிட்டியதில் எனக்குப் பெரிய மகிழ்ச்சி. சமய நூல்களைக் கற்றுல்-பூனை குரங்குகளைப் பற்றிய சுவைதரும் செய்திகள் பல தெரியவரும். பெரியவர்கள் நமக்குள்ள கடவுள் தொடர்பினை அவை காட்டி விளக்குவர். அக் கருத்துக்கள் நம் அறிவுக்குப் பெரும் விருந்தாகும்.

குரங்குகள் குட்டிவளர்ப்பதிலே ஒரு நயம். தாயைக் குட்டி விடாது. இறுகப்பற்றிக்கொள்ளும், வயிற்றிலே அட்டை

போல் ஒட்டுக்கொண்டு கிடக்கும். தாயோ குட்டியைப் பற்றியே கருதாது. குட்டி நினைவின்றிக் கிளைக்குக்கிளை எட்டித் தாவும், மரத்திற்கு மரம் தாவியும் ஓடும். ஒட்டிய குட்டியின் கதி என்ன? பிடிவிடாமல் மடியில் படிந்துள்ள வரை குட்டி உயிர்தப்பும். பிடிதவறிக் குட்டி கீழே விழுந்தாலோ-வாழ்வில் முடிவு ஒழிய வழிவேறில்லை. தாய் திரும்பியும் பாராது. தன் அலுவலை அது மேலே கவனிக்கும். இதில் புதுமை ஒன்றும் இல்லை. காட்டுக் குரங்கின் பொதுவான இயல்புதான்!

நாம் எல்லாம் குரங்கின் குட்டிகள். கடவுள் தான் தாய்க்குரங்கு. நம்மைக் குரங்கு என்றால் பொருந்தலாம். இறைவனைக் குரங்கு ஆக்கலாமா என்று தோன்றும். நாம் குரங்கு ஆனால் - நம்மைப் பெற்றவனும் குரங்கு தான். நமது சமய வாதிகள் சிலர் கடவுளைக் 'குரங்கன்' என்றுதான் உறுதி செய்திருக்கிறார்கள். குரங்கின் குட்டி மடியைவிடாமல் பிடித்திருக்கும் அல்லவா? அப்படியே, நாமும் இறைவனை விடாப் பிடியாய்ப் பற்ற வேண்டும். கர்மம், ஞானம், பக்தி - என்பவைகளே நமது பிடிப்புக்கள், அப்படி, பற்றிநிற்கும் மட்டும்தான் இறைவன் ஏற்று இன்னருள் புரிவன். தவறினால் பிடிவிட்ட குட்டியின் கதிதான் நமக்கும், தவறிய குட்டிக்குக் குரங்கிடம் இருந்து நேர்ந்தது என்ன? உயிரிழப்புத்தானே! அப்படியே நமக்கும் பேரிழவு தான் வரும். பின் மீளா நரகமே நமக்கும் வீடு. தாய்க்குரங்குபோல அவனும் முகம்திரும்பி நோக்கான். கடவுளோடு நமக்குள்ள தொடர்பு இங்ஙனமே என்பர் சிலர். ஞானகர்ம பக்திகள் ஆகியபிடிகள் வருண முறை" தவறாது வரவேண்டும் என்பது அவர்தம் முடிவு. இக் கொள்கையினை "மர்க்கடநியாயம்" என்று கொள்ளுவர் எனவே-"கடவுளுக்கு நம்மீது உள்ள உரிமை, அன்பு, பாது காப்பு இவற்றை விட நமக்கு அவரிடம் பிடிப்புத்தான் பெரிதும் வேண்டும்" என்பது உறுதிப்படுகிறது. "தவறுவது மனித இயல்பு: மன்னித்துப் போற்றுவது கடவுளியல்பு. இல்லையா? என்று கேட்டால், 'தவறிய உங்கட்கு நியாயம் பெறவழியேது' என்றுதான் அவர் தம் கடவுள் வாய்திறந்து பேசுவர்.

கடவுள் இயலை இப்படிக் கேட்டால் நம் நெஞ்சு படபடக்கும், பத்திக்குப் பதில் மனதில் பயமே விளையும். நயந்து இறைவனை அணுகுவதற்குப் பதில் பயந்து ஓடவே செய்வோம்.

இப்படி இரக்கம் அற்றவரா இறையவர்? இக்கடவுளைக் கட்டிக் கொண்டு நாம் எப்படி ஈடேறுவது? அடியவன் தவறு கண்டு கொடிய மனநிலை கொள்ளலாமா? அடியவன் தவறினல் — "என் அடியார் ; அது செய்யார் : செய்தாரேல் நன்று" என்று பேணும் இயல்பல்லவோ இறை நிலை. இவ்விறை நிலை அல்லவா உயிர்கட்கு உயர்வு தரும்? ஆகையால் - குற்றத்தையும் குணம் எனக்கொண்டு பேணும் கடவுளே நமக்குவேண்டும் என்று பலரும் கருதலாம். கருதுவதில் தவறு ஒன்றும் இல்லை. நம் முன்னையோர் இவ்வழியில் கருதியும் இருக்கிறார்கள். ஒன்று மட்டும் இங்கு நின்று நாம் உணரவேண்டும். இக்குரங்கு வழி ஒன்றுதான் எல்லோர்க்கும் ஒப்பியது என்றில்லை.

இக்குரங்குவழி தலைகீழாகப் பிடித்துத் தொங்கும் வழி. நம் இயல்புக்கு இது ஒத்துவராது. இறைவன் பெருங்கருணை யோடும் இது சேராது. வேறுவகையில் உறவு முறை கொள்ளல் வேண்டும் என்கிறோம். என்றால் நமக்கு இவ்வழி வேண்டிய தில்லை என்றுதான் கருத்து. தவிர, நமக்கு இதில் பகை யுணர்ச்சி எதுவும் கிடையாது. "இந்த வழியேதான் நல்லது, அடியவனிடம் முன்னேற்ற முயற்சியை ஒப்படைக்கிறது. அடியவனைப் பொறுப்பாக்கினல்தான் அவன் வாழ்வு திருந்தும்" என்று இவ்வழியில் இழிவாரோடும் நமக்குப் பேச்சில்லை. எந்தத் தனிவழியிலும் செல்ல அந்தந்த மனிதனுக்கு உரிமை யுண்டு. ஆனல் "குரங்குவழி ஒன்றுதான் உண்டு. அதுவே தான் மேலான வழி; வேறு வழிகள் இழிநிலை உடையன" என்றுமட்டும் பேசமுடியாது.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் பழந்தமிழ் மரபிலே வந்த பெருமக்கள். சிவனைத் 'தென்னாடு உடையவன்' என்று முன்னவர் போற்றினர். புல்லாணித் தென்னன் தமிழாகத் திருமாலைக் கண்டவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் காட்டிப் போன இனிய வழி ஒன்று உண்டு. "மார்ச்சால நியாயம்". என வழங்கும் பூனைவழி அது. பூனைக்கும் குட்டி வளர்க்கும் வழியோடு இறைவனை ஒட்டிப் பேசுவது அது. அக்கருத்தில் பொருத்தம் மிகுதியுமுண்டு. அத்திருந்திய கருத்தால் சிந்திப்பது நல்லது. சிந்தைக்கும் செவிக்கும் இனியதாய்ப் பொருந்தி அது மகிழ்வு தரும்

பூனை குட்டிபோட்டு வளர்ப்பது அன்றாட வீட்டு நிகழ்ச்சி. காட்டுக் குரங்கின் செயல்முறைபோல் இல்லை. கடவுளையும், சமய நெறிகளையும் தவறாது போற்றுபவர் தமிழர். இயற்கையை இறை எனக்கண்டு வாழப் பழகியவர். அவர் தம் சமயநெறி யாவும் வீட்டு நிகழ்ச்சி எனக்காட்டும். வழுக்கி வீழினும் இறைவன் பெயரை மறவா இயல்பினர். "குறை திருத்திப் பணிகொள்வதே இறையியல்" என முறை தெரிந்தவர்கள் பூனைவழியே தமிழர்தம் தனிப்பெருவழி. இத் தனிவழியே நமக்கும் இனிமை தரும். காண்டற்கு எளிய இனிய உவமையும் ஆகும். கேட்ட அளவிலே இவ்வுவமை நமக்கு ஒட்டுகிறது. கருத்தின் ஆழத்திலும் நுழைவோம்!

பூனையின் குட்டிகள் தாய் தம்மைப் போட்ட இடத்திலேயே கண்மூடிக் கிடக்கும். கிடப்பதோடு தன் செயலற்றுக் கத்தவும் செய்யும். கத்துவது, பசி நினைவால் ஒழியத் தாய் நினைவுகூட இல்லை. தாய்ப்பூனையோ ஓரிடத்தில் நிலைத்து இராது. போக்கும் வரத்துமாயிருக்கும். பசி நினைவால் ஒரு முறை வெளியேபோகும். குட்டி நினைவு உள்ளே இழுக்கும். நிலையற்ற உள்ளத்தால் சிறிது தொலை செல்லும், குட்டியை நினைத்துத் திரும்பியும் விடும். கண்மூடிய குட்டிகளை விண்மீது வைக்கும். மேலுள்ளதைக் கீழே இறக்கும். அதிலும் அதற்கு அமைதி வராது. மாற்றி மாற்றி ஏற்றியிறக்கும். அன்பால் சுற்றிவரும் ஒருவரைக் குட்டிபோட்ட பூனை, என்பர். தன் செயலற்றுக் கிடக்கும் குட்டி; கவலையுடன் வலியக்காக்கும் தாய்ப்பூனை, குட்டி வளர்ப்பின் சிறப்பியல் இது. இரண்டும் மிருக இனம்தான். ஆனால், வேற்றுமையைச் சற்று நினையுங்கள்!

கடவுள் தாய்ப்பூனையைப்போல. மக்கள்மாட்டு அளவற்ற அன்பு. மக்களைக்காக்கும் பொறுப்பு அவனது. மரம் நட்டவன் நீரூற்றுவதுஇல்லையா? அதுபோல, தானே வலியத்தேடி மக்களை அடைகிறான். வழிதவறி அடியவன் திரியின் தடுத்தாட்கொள்ளுகிறான். நமக்கு எனப் பல பிறப்பும் பிறக்கிறான். பிறந்து தொல்லைகளால் அல்லல் உறுகிறான். நம்குறைக்கு அவன் நாணுகிறான். நெறி தவறின் "செய்வதறியார்" என இரங்குகிறான். அருளால் குற்றமே குணம்எனப் போற்றுகிறான். தாய் செயலைத் தவராது ஏற்றன பூனையின் குட்டிகள். நாமும் மறுக்காது இறைபணியை ஏற்கவேண்டும். நம்செயல் அற்றால் அவன்செயல் தொடங்கும். "நன்றேசெய்வாய் பிழைசெய்வாய் நானோ அதற்கு நாயகன் என்றிருக்க வேண்டும். நம்மை இந்நிலையில் காப்பது அவன் தலைச்சுமை. இப்படிக் கடவுளியல் கண்டவர்சிலர். அவர்க்குப், பூனைவழியே சிறந்தது என்றெண்ணம். அதுவே நமக்கும் நல்லது. நாட்டிற்கும்ஏற்றந்தருவது.

"நாம் பத்தியால் இறைவனை விடாது பற்றவேண்டும். அப்பொழுதுதான் அவனருள் கிட்டும். பக்தர்களைக் காப்பதே அவன் பொறுப்பு; மற்றவர்க்கு அவனருள் இல்லை" எனில் பெருந்தவறு வேறு வரும். பெற்ற ஒன்றுக்கு மற்றொன்று தருவது வாணிகமுறை. இறையருள் வணிகமுறைக்கு ஒப்பில்லை. இறைவன் 'அறவிலை வாணிகன்' அல்லன். இறையருள் மாற்றிற்குரிய விலைச்சரக்கும் இல்லை. மேகம் - கைம்மாறு கருதாதது. காலம் அறிந்து கடல்நீரை முகக்கும். எங்கும் சென்று மழை ஆகப் பொழியும். வாட்டமுற்ற பயிர்களைத் தளிர்க்கச் செய்யும் மேகம் ஒத்த கருணையே இறைவனுக்கு உரியது. நிற்க, நமது வழிபாடும் அவன் தரும் வீட்டிற்கு விலையாகாது. மன்னவன் பிறந்த நன்னாள். மாலையிட்டு மகிழ்ச்சி காட்டினான் நண்பன். மகிழ்ந்த மன்னன் நண்பர்க்கு நாடளித்தான். மாலை விலையும் நாட்டுவிலையும் சரி என்று கூறலாமா? கூறினாலது பொருந்துமா? நாடுதரக் காரணம் மன்னவன் மகிழ்ச்சியே. அவ்வுள்ளக் கனிவு மாலை தந்ததா? இல்லை. முன்னமே 'நம்மவன்' என்றிருந்த நினைவு காரணம். அவ்வன்பின் ஆழம் நிலைகாண இயலாதது. இறைவன் இன்னருளும் இப்படியே ஆகும். ஒன்றுதந்து மாற்றாய்ப் பெறுவதில்லை. தன்னடைவே தானேவந்து நல்குவது. இறையடியை வணங்குதற்கும் அவன் அருள்வேண்டும் என்பர். ஆகவே இறையன்பு காரணமற்றது. அதனைக் கொள்கலமாய் இருந்து ஏற்பதுதான் அடியவன் கடமை. பூனைக்குட்டி நமக்கு இதனைச் சுட்டிக் காட்டும்.

இதில் இருந்து ஒருண்மை துலங்கும். இறைவன் படைப்பு எதிலும் சிறுமையில்லை. சிறப்பியல்பு பெறாத இயல்பு, படைப்பிலில்லை. இப் பேருண்மைக்குப் பூனை ஒருசான்று. பூனை தானே என்றிகழாது அதனை நோக்கல்தகும். நோக்கின் பூனையும் நம் வாழ்வின் பேரிலக்கு ஆகும். பூனைமட்டும் நம் வாழ்க்கைக்கு இலக்கில்லை. வேறு பிறவற்றிலும் கண்டு வேறு பெறலாம். காகம் நாளும் உறவோடு கலந்துண்ணும். 'வேல்கொண்டு எறியினும் வால்குழைக்கும் நாய்." "பசிமீறினாலும் புலி புல்லுண்ணாது." இவை மட்டுமில்லை. எறும்பின் சுருசுருப்பு: தேனீயின் உழைப்பு. சிலந்தியின் விடாமுயற்சி, ஆனையின் அருமை: சிங்கத்தின் பெருமிதம்: அன்னத்தின் பகுத்தறிவு: பசுவின் பொதுநலம்-இப்படிப் படிப்பினைகள் பல இயற்கையை, இவையறிந்து போற்ற நாம் பழகவேண்டும். அப் பழக்கம் எப்படி வரும்? பாரதியார் கூறியதுபோல் - அறிவுக்கண்ணால் அனைத்தையும் நுகரவேண்டும். அந்நுகர்ச்சி விழுமிய ஒழுக்கம் தரும். விழுமிய ஒழுக்கமே வாழ்வின் இலக்கு.

448



# இலக்கியம் துலங்கும் எழிற்காஞ்சி

திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் B. A., L. T.,
உதவியாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

காஞ்சிமாநகர் தண்டமிழ் வரைப்பின் வண்டமிழ் மூவர் எனப்படும் சேரசோழ பாண்டியர் நாடுகளுக்கும் வடவர் நாடுகளுக்கும் இடையே உள்ள தொண்டை மண்டலத்தின் தலைநகராகும். இஃது இலக்கியம், சமயம், அரசியல் என்பவற்றின் வரலாறுகளில் சிறந்த இடம்பெறுவதாய், வடக்கும் தெற்கும் என்பவற்றின் இடைநிலை விளக்கமாய் பண்டுதொட்டு விளங்கி வந்துள்ளது. பண்டைத் தமிச்சங்க விலக்கியத்தில் இது "மூதூர்" எனக் குறிக்கப்பெறுதலின் இதன் பழமை துணியப்படும். கிறித்து பிறப்பதற்கு முன் நான்காம் நூற்றுண்டினன் எனப்படும் சந்திரகுப்த மௌரியன் அரச அவையில் தலைமை பெற்று அரசியலும், பொருளியலும், நீதியும்வகுத்த கௌடில்லியர் (சாணக்கியர் என்பவரும் இவரே) காஞ்சியில் வாழ்ந்து வளம்பெற்றவர் என்பதை உணரின், அக்காலத்தே இந்நகர் பல்கலைப்பீடமாக விளங்கியது என்பது துணியப்படும். உத்தர மா-மதுரைக்கு அச்சு எனப்படும் கண்ணனைப்போல வண்கூடற்கு அச்சாக விளங்கிய தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் காஞ்சி மண்டலத்தைச் சார்ந்த மயிலையந்துறை (மயிலாப்பூர்) வாணர் என்பது கருதத்தக்கது. நாவலந் தண்பொழிற்கண் தம் இயற்கையால் மெய்யுணர்வைப் பயக்கவல்ல தூய இடங்கள் என எடுக்கப்பட்ட மூத்திநகர் ஏழனுள் முதன்மையுடையது கச்சிநகர் எனவே யாவரும் போற்றுவர். இதனைத் தமிழிலக்கியம் துலக்குமாறும் இஃது அதனைத் துலக்குமாறும் ஆராய்வது இன்பம் பயக்குமாகலின், அவ்விரண்டும்பற்றிய ஒரு சிறிய ஆராய்ச்சி ஈண்டுச் செய்யப்படும்.

தமிழ் இலக்கியத்தில் காஞ்சிநகர்பற்றிய வெளிப்படையாகிய குறிப்பு முதலாவதாக வரும் இடம் பத்துப் பாட்டுள் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப் படை ஆகும். இப்பாட்டுத் தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. இஃது இளந்திரையன் காஞ்சிநகரத்துச் சிறப்

போடு வீற்றிருத்தலையும் அவன் நாட்டில் உள்ள நானிலத்து ஐந்திணை வளத்தினையும், அவன் வள்ளன்மையினையும் கூறுகின்றது. இதன்கண் காஞ்சிமாநகர் "நச்சிச் சென்றோர்க்கு ஏமமாகிய கச்சி" எனவும், "நான்முக ஒருவற்பயந்த பல்லிதழ்த் தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி, எனவும்" "மலர்தலை உலகத்துள்ளும் பலர்தொழ—விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்" எனவும் குறிக்கப்படுகின்றது. இவ்வடிகளில் வந்துள்ள அடைமொழிகளாலும், உவமத்தாலும் (1) காஞ்சி மாநகர் விரும்பி வந்தோர்க்குப் பாதுகாப்பாயிருந்து இன்பம் பயந்தது என்பதும், (2) அது பழமையும் சிறப்பும் தூய்மையும் தன் இயல்பால் பெற்றுள்ளதென்பதும், (3) பல சமயத்தாரும் தொழும்படி எடுத்த விழாக்களாலே ஏனைய நகர்களினும் மேலான பழைய வெற்றியை உடையதாய் இருந்தது என்பதும் அறியப்படும்.

இப்பாட்டில் காஞ்சியைச் சுட்டி வந்துள்ள சொன்னிலை பொருணிலைகள் பிற்காலத்து இந்நகரச் சிறப்பு உரைக்கப் போந்த மணிமேகலை, பெரியபுராணம், கந்தபுராணம், காஞ்சிப் புராணம் முதலியவற்றின் சொன்னிலை பொருணிலைகளுக்கு மூலமாக அமைந்திருத்தல் தமிழ்நூல் ஆராய்ச்சி வல்லாரால் அறியத்தக்கது.

இப்பாட்டுடைத் தலைவன் பெயரால் திரையன் ஏரி எனப் பண்டு வழங்கிய பெயரே இஞ்ஞான்று தென்னேரி என் மருவி வழங்குகிறது என்பது நினைத்தற்கு உரியது. இதனைப் பாடிய நல்லிசைப் புலவர் பட்டினப்பாலையால் கரிகால் வளவனையும் பாடியுள்ளார்; ஆகலின், அவர் காலம் கி. மு. முதல் நூற்றாண்டு எனக் கொள்ளப்படும்.

இப்பாட்டின் தலைவனாகிய இளந்திரையன் அரசியல் உணர்ந்து காவற்சாகாடு உகைத்த பேரரசனாதல் மாத்திரையேயன்றித் தமிழ்நல்லிசைப் புலமை வாய்ந்த பெரியோனும் ஆம் என்பதை இவன் பாடிய, புறம் 185 ஆம் பாட்டும், நற்றிணை 94, 99, 106 ஆம் பாட்டுக்களும் புலப்படுக்கும்.

சங்ககாலத்தில் நல்லிசைப் புலமைவாய்ந்து காஞ்சியம் பதியில் இருந்தவர்கள் எனக்கொள்ளுதற்கு உரியவர் கச்சிப் பேட்டு இளந்தச்சனார், கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார் என் போர் ஆவர். இவ்விருவரும் பாடியவை நற்றிணையில் உள்ளன

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானைப்பாடிய தாமப்பல் கண்ணனார் தாமல் என வழங்கும் இடத்தினராதல் கூடும் எனக் குறிப்பிக்கப்படுகின்றனர்.

இனி. அகத்தில் இரண்டும், புறத்தில் இரண்டும், நற்றிணையில் ஒன்றுமாக உள்ள ஐந்து பாட்டுக்களைப்பாடிய நல்லிசை மெல்லியலார் ஒருவர் வெறிபாடிய காமக்கண்ணியார் எனப்படுதலின், கச்சிக்காமக் கோட்டத்தில் வீற்றிருந்தருளி அறம் வளர்க்கும் பெருஞ்செல்வியாகிய காமக்கண்ணி (காமாக்ஷி) யம்மையின் திருப்பெயர் சங்ககாலத்து மக்களுக்கு இடப்பட்டு வழங்கியது என்பது புலனும். காமக்கணிப் பசலையார் என்னும் பெயர் உள்ள மற்றொரு நல்லிசைப் புலமை மெல்லியலாரும் உளர். இவ்விருவர்தம் முன்னோர்களும் வாழ்க்கையால் அன்றி வழிபாட்டால் காஞ்சியோடு தொடர்புடையோர் என்பது தெளிவு.

தமிழ் இலக்கியவரலாற்றில், சங்ககாலத்தை அடுத்துப் பின் வருவது காப்பியக்காலம் ஆகும். இக்காலத்துக் காப்பியங்களுள் காஞ்சியின் இயல்பு தெரிவிப்பது மணிமேகலையாகும். இது கச்சிநகர், மணிமேகலை வருதற்குமுன், "தேவர்கோமான் காவல்மாநகர் - மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய - பொன்னகர்," 'அவள் வந்தபோது, தன் பொலிவை இழந்து புல்லென்று தோன்ற, அதனைக் கண்டு இரங்கினள்' எனவும், அவள்பின்னர் "அப்பொற்கொடி மூதூர்ப் புரிசையை வலமாகச் சூழ்ந்து உட்புகுந்தாள்' எனவும் கூறுகின்றது (கச்சிமாநகர் புக்ககாதை). பின்னர்த்தன் பண்டைப் பொலிவினை உடைத்தாய், மணிமேகலை தவத்திறம் அறுகென நோற்றிருத்தற்கு வாய்ப்புடைத்தாய் இருந்தது என்பதும் அந்நூலானே உணரப்படும்.

காப்பியக்காலத்தின் பின் புத்தசமண் சமயங்கள் தமிழ் நாட்டில் மிகைபட்டமையால். திருவருள்நெறியை வளர்ப்பான் வேண்டி நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றியருளினர், அவர்தம் காலத்தும் காஞ்சிமாநகர் பல்கலைகளுக்கும் உறையுளாய்ப் பல்வளஞ் செறிந்து, தேரும் நெடுவீதிகளை உடைத்தாய் விழவருக் கடிநகராகவே இருந்ததென்பது விளங்குகிறது.

திருவருள் நெறிவிளக்கஞ்செய்து போந்த செம்புலச் செல்வர்களுள் தமிழ் இலக்கியவரலாற்று மாணவர்கள் நினைவிற்கு உரியவர் மாணிக்கவாசகர் ஆவர். இலக்கியங்களுள் செம்மை

செய்யப்பெற்றுக் காணும் ஒழுகலாறு, விளையாட்டு, பழக்க வழக்கம் முதலியன இலக்கியத்தில் இடம் பெறுதற்குமுன் பன்னூறு ஆண்டுகளாக மக்கள் வாழ்க்கையில் இருந்து வந்திருக்கும் என்பது எண்ணுதற்கு உரியது. ஆற்றுப்படை என்னும் பிரபந்தம் எழுவதற்குமுன், ஒருகொடையாளியிடம் நலம்பெற்றவன் பிறரையும் அவனிடம் ஆற்றுப்படுத்து உய்க்கும் வழக்கம் பன்னூறு ஆண்டுகளாக எவ்வெந் நாட்டிலும் உண்டு. அச்செய்தி நாட்டுப்பாடல்களில் பயின்றும் வரலாம். அச்செய்தியைச் செப்பஞ் செய்து தக்கதொரு வாய்பாட்டாற் பாடவல்ல திறமையே நல்லிசைப் புலமையாகும். இங்ஙனமே பிறதுறைகளைப்பற்றிய பாடல்களுமாம். இக்கருத்துப்பற்றி நோக்கின், தமிழிலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படை என்றும் பிரபந்தத்தைப் பொறுத்த மட்டில் புதுமையைப் புகுத்திய பெருமை நக்கீரனுருக்கே உண்டு; பிறரெல்லாம் ஓரொரு காலத்தே விளங்கி மறைந்த அரசர் முதலாயினர் பால் அழிந்துபடும் பொருள்களைப் பரிசிலாக வேண்டி ஆற்றுப் படுப்பாராக, இவர் நித்தனாகிய திருமுருகன்பால் எஞ்ஞான்றும் நிலைத்து உள்ளதாய திருவருட்பரிசிலைப் பெறுவிப்பான் வேண்டி ஆற்றுப்படுத்தார்; அதனால் அவர் "பொய்யற்ற கீரன்" ஆயினர். அவருக்குப்பின், நாட்டுப் பாடல்களிற் பயின்றும் பயிலாமலும் வந்த அம்மனை முதலிய விளையாட்டுக்களையும் பிறவற்றையும் செந்துறைப் பாடல்களால் முதல்வனுக்கே ஆக்கிய பெருமை திருவாதவூர் அடிகளுக்கே உண்டு. அவரை "அணிமொழியாம் அகப்பொருளும் புறப்பொருளும் அவன் அருளால் அமைத்துப் பாடும் மணிமொழியார் எனப்பெற்ற வாதவூர் அடிகள்" எனச் சான்றோர் போற்றினமை கருதற்பாலது. இத்தகைய செம்புலச் செல்வர், பொற்சுண்ணம் இடிக்கும் மகளிர் வாய்மொழியாக "தேசம் எல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித் - திருவேகம் பன் செம்பொற் கோயில் பாடி" என்றருளிச் செய்கின்றார். இங்ஙனமே "பதிகமே ழெழுநூறுபகரு மாகவியோகி" எனப் போற்றப்படும் திருநாவுக்கரசரும் "கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர்" எனப்பாடியுள்ளார்.

இனித் திருநெறித் தலைவர்கள் காலத்தின்பின், 12ஆம் நூற்றாண்டில் எழுந்தனவாய்க் காஞ்சியின் மாண்பு தெரிவிக்கும் பெருங்காப்பியங்கள் பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணமும், கந்த புராணமும் ஆகும். இவற்றுள்

452

முன்னையதன் ஆசிரியராகிய சேக்கிழார் நாயனார் குன்றத்தூரில் தோன்றிச் சேரனாட்டில் வாழ்ந்தவராயினும், அவர் தம் ஊர் காஞ்சியெனவே திருவுளங் கொண்டார் எனும்படி தொண்டை நாட்டு நானிலத்து ஐந்திணை வளனையும் காஞ்சிமாநகரின் சிறப்பையும் கூறி உளங்குளிர்கின்றார். தமிழ் இலக்கியங்களில் ஐந்திணை வளம்பாடும் திறன் சேக்கிழார் பால் உயர்முடி நிலையை அடைந்தது எனக் கூறலாம், இதனைத்

"திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந்
திணைவளமும் தெரிந்துக்கொண்ட
மருத்தொண்டை வாச்சியர்சூழ் குன்றைநகர்க்
குலக்கவியே வல்லான், அல்லால்
கருத்தொண்டர் எம்போல்வார் எவ்வாறு
தெரிந்துரைப்பார்?"—

காஞ்சிப்புராணம், நாட் 128.

என மாதவச் சிவஞானயோகிகள் கூறுதல் பற்றியும் உணரலாகும்.

பெரியபுராணத்துக் காஞ்சியைப்பற்றிய பல குறிப்புக்கள் பெறப்படினும் அவற்றுள் இங்குச் சுட்டத்தக்கவை இரண்டு, அவையாவன (1) காஞ்சி என்றும் உள்ள தொன்னகர் என்பதும் (2) கரிகால்வளவன், இமையத்தின்மேல் தனது புலி இலச்சினையைப் பொறிக்கச்செல்வோன், ஒரு வேடனால் இந்நகர் வளப்பம் கேட்டுணர்ந்து, இதற்கு நான்கு காத அளவு எல்லைவகுத்து, சுற்றி மதில் எடுத்து, நற்குடிகளை இரீயினன் என்பதும் ஆகும்.

"என்றும் உள்ள இந் நகர்கலி யுகத்தில் இலங்கு
வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி இமையமால் வரைமேல் வைக்க
ஏகுவோன் றனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத் திருந்து
காதம்நான் குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக்
குடியிருத்தின கொள்கையின் விளங்கும்".

திருகுறிப்பு—, 5

எனப் பெரியபுராணம் கூறுகின்றது.

பட்டினப்பாலையால் கரிகாற் பெருவளத்தானது இச்செய்தி பெறப்படாமையின், அதனை இயற்றியது அவன் இமையஞ் செல்வதற்கு முன்னர் ஆதல்வேண்டும்.

சிலப்பதிகாரத்துக் கரிகால் வளவனது இமையச்செலவு கூறப்படினும் அவனுக்குக் காஞ்சியோடு உள்ளதாய தொடர்பு கூறப்பட்டிலது. ஆயினும், கரிகாலன் இமையஞ்சென்று அதனை முன்னர்ச்செண்டு என்னும் படைக்கலத்தால் அடித்துத் திரித்து, மீள அதனைப் பண்டுபோல் நிறுத்திப் புலியைப் பொறித்தனன் என்பதும், அச்செண்டு கச்சியில் காமக்கோட்டத்துள்ள சாத்தன் (ஐயனர்) என்னும் தெய்வத்தால் கரிகாலற்கு அளிக்கப்பட்டதாகும் என்பதும் செவிவழிச் செய்தி இது.

> "கச்சி வளைக்கச்சி காமகோட் டங்காவல்
> மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
> கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
> செம்பொற் கிரிதிரித்த செண்டு"

என்பதனாலும் கலிங்கத்துப் பரணியாலும் அறியப்படுகின்றது.

திருவேகம்பர் திருக்கோயில் வாயிற் பக்கத்தில் கச்சி மயானத்திற்கு எதிரில் கரிகாற் பெருவளத்தான் உருவச்சிலை உள்ளது.

இனிக் கந்தபுராணம் என்னும் பாரகாப்பியம் காஞ்சிமாநகரில்தோன்றி "உம்பர்போற்ற உமையுடன்மேவிய காஞ்சியில் கட்டுரை"க்கப்பட்டது. இதனை இயற்றிய ஆசிரியர் திருவேகம்பநாதரையும் திருக்குமரக் கோட்டம் அமர் திருமுருகனையும் திருமேனி தீண்டி வழிபடும் பெரும்பேறு பெற்றவர்; தென்மொழியும் வடமொழியும் நிலைகண்டுணர்ந்து, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்; கச்சியப்ப சிவாசாரியார் சிவானுபூதிச் செல்வர். இவர்

> "செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய
> முந்து காஞ்சியின் முற்றுணர் மேலவர்"

எனவும்,

> "ஈறுசேர் பொழுதினும் இறுதி யின்றியே
> மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சி"

எனவும் இந்நகர்க்கண் தம் காலத்திருந்த கற்றோரையும் இந்நகரினையும் சுட்டிக் கூறுகின்றார். இவர் தம் காலம் பதினொன்றும்

நூற்ருண்டின் இறுதி, அல்லது பன்னிரண்டாம் நூற்ருண்டின் முற்பகுதியாகும் என முடிக்கப்படுகின்றது

இந்நல்லாசிரியர் வடமொழிக்கண் உள்ள வேதம், ஆகமம், புராணம், சாத்திரம் முதலிய எல்லாம் உணர்ந்த பேரறிஞராக இருப்பினும் நூற்பிரமாணங்கொண்டு நெறிதழுவி ஒழுகுதற்கண் சங்கத் தமிழ் இலக்கியங்களையும் திருமுருகாற்றுப்படை, தேவாரம், திருவாசகம்போன்ற அருநூல்களையும் தலையாய ஒத்தாக உணர்ந்து உளங்கொண்டு தம் பெருங்காப்பியத்தை ஆக்கியருளினமை பன்மொழி பயில்வார்க்கெல்லாம் முன்மாதிரியாக உள்ளது.

திருக்குமரக்கோட்டம்வாழ் திருமுருகனை நேசித்துப்பூசித்து வந்த சிவாசாரியர் நினைவு ஊரகத்துள்ள உலகங்கடந்த நெடுமுடி அண்ணலை (உலகளந்த பெருமாள்) வழிபட்டுப் பெரும் புலவராய் விளங்கிய பரிமேலழகரை எண்ணவைப்பது இயல்பு. பரிமேலழகர் காஞ்சிநகர வாணர். வடமொழிக்கண் உள்ள ஆறு சாத்திரங்களும் (ஷட் தரிசனங்கள்) பிறவும் தமிழ் இலக்கிய இலக்கணப் பரப்பும், தமிழ் மெய்ந்நூல் தொகையும் முழுதொருங்கு கற்றுணர்ந்தவர். தம் கல்வியறிவின் பயனாகச் செந்தமிழ்ப் பொது மறையாகிய திருக்குறளுக்குச் சுருங்கல், விளங்கல், ஆழமுடைமை முதலிய அழகுகள் வாய்ப்ப உரை வகுத்தருளினர். இவர் காலம் 15 அல்லது 16 ஆம் நூற்ருண்டு என்ப.

காஞ்சியில் தோன்றித் தமிழ் வளர்த்தோர் இன்னும் பலர், அவருள் குறிப்பிடத்தக்கவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் 17 ஆம் நூற்ருண்டில் தமக்கே உரிய புதுப்புது நயங்கள் அமைந்த பல பிரபந்தங்களையும், பிரபுலிங்கலீலை என்னும் சிறந்த சிறுகாப்பியத்தினையும், சிறு புராணங்களையும், தருக்கம், வேதாந்தம், சித்தாந்தம், வீரசைவ சம்பிரதாயம் என்பவை பற்றிய நூல்களையும் ஆக்கி இளைஞர் உள்ளங்களைப் பண்படுத்திய, துறவுநிலை நின்ற தூயர். மயிலம் வீரசைவ ஆதீன முதல்வராகிய சிவஞானபாலய தேசிகர் பால் ஆட்பட்டவர்.

காஞ்சியம்பதிக்குத் தல புராணங்கள் பல உளவேனும் அவையெல்லாவற்றுள்ளும் சிறந்து நிற்பது திருவாவடுதுறை

ஆதீனமுனிவர் மாதவச் சிவஞான யோகிகள் அருளிச்செய்த காஞ்சிப்புராண முதற்காண்டமே யாகும். இவ்வாசிரியர் 18 ஆம் நூற்றுண்டினர்; வடமொழிக் கடலும் தென்மொழிக் கடலும் நிலைகண்டு உணர்ந்தவர்; இலக்கியம், இலக்கணம், தருக்கம், மொழிபெயர்ப்பு, தோத்திரம், மெய்ந்நூல் மரபு என்னும் பல துறைகளிலும் பாட்டும் உரையுமாக முப்பது நூல்கள் இயற்றிய பெரும்புலவர்; தூய சைவத்துறவு நிலை பூண்டு ஒழுகிய சிவஞானச் செல்வர், இவ்வருட்டிருவாளர் அருளிச்செய்த சிவஞான போதத்தின் பேருரையாகிய திராவிட மாபாடியம் தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்புத் தருவதாய், வடமொழியில் எழுந்துள்ள பாடியங்களையெல்லாம் வெல்லுந் திறத்ததாய், மெய்நூற் பொருள்களுக்கெல்லாம் உரையாணியாய் நிலவித் தலையாய அறிவினர்க்கெல்லாம் உணர்வும், இன்பமும் பெருக்கிவருவது. இம்மாபாடியத்தை இவ்வாசிரியர் காஞ்சியில் வதிந்து திருவேகம்பநாதனை வழிபடா நின்றே இயற்றியருளியது காஞ்சி நகர்க்குப் பெருமை அளிப்பதாகும். இவர்,

"உவரிசூழ் உலக வைப்பின் உரையமை கேள்வி சான்ற
கவிகளென் றுரைப்போர் தம்முள் காஞ்சியைப்
புகழார் இல்லை;
அவரெலாம் புகழ்ந்தும் இன்னும் உலப்புறு
அதன்சீர் முற்றும்
சிவநிறை கல்வி சாலாச் சிறியனே கிளக்கவல்லேன்"

எனக் கூறிக் காஞ்சியின் அளப்பருஞ் சீர்த்தியினையும், கல்விப் பெருக்கத்தால் தமக்குள்ள பணிவையும் ஒருங்கே விளக்கியுள்ளார்; இன்னும் இவர் புராணத்தை முடிக்கும்போது, எவ்வுருவில் நின்று எத்தொழிலைச் செய்தாலும்,

'ஒழிவறு பத்தியான் உறுதி யாளராய்
வழுவறு காஞ்சியின் வதிதல் வேண்டுமால்"

எனக் கூறி முடிக்கின்றார்.

காஞ்சியின் இலக்கியவரலாறு ஓராற்றான் கூறிமுடிக்கப் பட்டது. வாழ்க காஞ்சி! வாழ்க வண்தமிழ்!!

H56

# தமிழ்ச் செய்யுட்களில் எழுத்திலக்கணம்

பன்மொழிப்புலவர்,

**வித்துவான், திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்**

ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப் பேராசிரியர், பல்கலைக்கழகம் சென்னை.

(முன் தொடர்ச்சி)

**அவற்றுள் மகரத்திற்கு :**

" பூமி யும்பொறை யாற்றருந் தன்மையால்
வேமெ னெஞ்சமும் வேள்விமு ளரிபோல்
தாம மார்பனைச் சீவக சாமியைக்
காம னைக்கடி தேதம்மின் றேவிர்காள் "

இச்செய்யுளில், 'தேதம்மின்' என்னுஞ்சீர் மூவசைச் சீரா யிருத்தலானும், இஃதொன்றொழிய மூவசைச்சீர் ஒன்றேனும் வந்திலாததனானும், 'தேதம்மின்' என்பதில் மகரமெய்யைச் சிதிலமாக ஒலித்து, ஈரசைச் சீராகக் கோடல் அமைதி.

**னகரத்திற்கு :**

" விசயை யென்றுல கோடிய வீறிலேன்
பசையி னுற்றுஞ்சி யான்பட்ட தீதெலாம்
இசைய நம்பிக் கெடுத்துரைத் தென்னுழை
யசைவின் றையனைத் தம்மினெ னச்சொன்னாள் "

என்னுமிச் செய்யுளில், 'னச்சொன்னாள்' என்னுஞ் சீரில் 'ன்' சிதிலமாக உச்சரித்து அதனைக் கொள்ளாது விடுக்க. பல செய்யுட்களில், 'சொன்னான்' என்பதைச் 'சொனான்' என்றே பதிப்பித்திருப்பது நம் ஊகத்திற்குத் துணையாகின்றது.

'மனைக்கண் வைகுதல் மாண்பொடெ னச்சொனான்' 1400

' இன்ன தாலவன் கூறிற் றெனச்சொனாள் ' 1400

என்பன காண்க. இன்னும்,

" நல்ல சுண்ண மிவையிவற் றிற்சிறி
தல்ல சுண்ண மதற்கென்னை என்றிரேல்
புல்லு கோடைய பொற்புடைப் பூஞ்சுண்ணம்

இச்செய்யுளில் 'என்னை', 'சுண்ணம்' என்னுஞ் சொற்களில் மெய்யெழுத்தினைவிட்டு ஒலிக்க.

இனி இடையெழுத்தினை நோக்குவோம்.

ளகரத்திற்கு :

" பாறை படுதயிர் பாலொடு நெய்பொரு
தாறு படப்பள்ளி ஆகுல மாக
மாறு படமலைந் தாய்ப்படை நெக்கது
சேறு படுமலர் சிந்த விரைந்தே "

இச்செய்யுளில், 'படப்பள்ளி' என்பதைப் 'படப்பளி' என்பது போன்றொலித்தல் அமைதி.

இவ்வாறு வல்லெழுத்துக்களை நொய்ம்மையவாக (சிதிலம் ஆக) ஒலித்தல் வழக்கின்று. ஆகலின் அத்தகைய விடங்களில் மூவசைச்சீர் வந்துளதென்று கொள்ளவேண்டி யிருக்கின்றது. ஆயின் ஆங்கும் அவ்வல்லெழுத்தினை விடுத்து ஈரசைச்சீர் வந்த தாகக் கோடலே அமைதியாகும். என்னெனின், பிற எல்லாச் சீர்களும் ஈரசைச்சீர்களாயே இருத்தலின்.

" மாற்ற மொன்றுரை யாண்மழை வள்ளலென்
னேற்ற சுண்ணத்தை ஏற்பில என்றுசொற்
றேற்று வந்தென் சிலம்படி கைதொழ
நோற்ப னேற்றனை நீயென ஏகினள் "

இச் செய்யுளில் 'சுண்ணத்தை' என்னுஞ் சீரும்,

" கன்னி மாநகர்க் கன்னியர் சூழ்தரக்
கன்னி மாடம டையக் கடிமலர்
கன்னி நீலக்கட் கன்னிநற் றுய்க்கவள்
கன்னிக் குற்றது கன்னியர் கூறினர் "

இச் செய்யுளில் 'நீலக்கட்' என்னுஞ் சீரும் மூவசைச் சீராயிருத்தலும் ஏனைய சீர்களெல்லாம் ஈரசையினவாயிருத்தலுங் காண்க.

இனி, வல்லெழுத்துக்கள், மெல்லெழுத்தோடு சேர்ந்து வருமிடத்தும் இவ்வாறே கொள்ளற்பாலன.

"வண்ண வார்சிலை வள்ள(ல்)கொண் டாயிடை
விண்ணிற் றாவியிட் டான்வந்து வீழ்ந்தன"

என்னுஞ் செய்யுளில், 'டான் வந்து' என்னுஞ் சீரும்.

"ஞாயில் சூடிய நன்னெடும் பொன்னகர்க்
கோயில் வட்டமெல் லாங்கொங்கு சூழ்குழல்
வேயி னன்னமென் றேரளியர் தோன்றியங்
காயி னர்பரி யாள மடைந்ததே"

என்னுஞ் செய்யுளில், 'லாங்கொங்கு' என்னுஞ் சீரும் மூவசைச் சீராயும் ஏனையவெல்லாம் ஈரசைச் சீர்களாயும் இருப்பன காண்க. இவ்விடங்களில் மெல்லெழுத்துக்களை நீக்கிவிடுதல் எளிதாகலின் ஈரசைச் சீர்களாகவே கொள்ளலாம்.

---

## LETTER.

OM

15th April, 1955.

H. H. Sri-la-Sri Mahasannidhanam
of Dharmapuram, Mayuram.

Most Exalted Self,

Salutations and adorations! Om Namahsivaya!

It is with great joy and wonder that I have received the 8th Annual Report of the Dharmapuram Adheenam's glorious services under your Holiness's divine guidance. This sumptuous volume is indeed a breath-taking record of ceaseless service in various directions rendered by your Holiness and the devout band of workers under your Holiness's charge.

In a world where the clouds of ignorance and misunderstanding are gathering to obstruct the vision of the resplendent Sun of Spiritual Wisdom that has for ever been shining in this holy land, it is the constant wafting of the wind of spiritual thoughts that will avert the disaster. In the Dharmapuram Adheenam the world has the surest guarantee of peace and divinity.

May God bless your Holiness and the Dharmapuram Adheenam! With regards, Prem and OM,

Thy humble Sevak,
(Sd.) SIVANANDA.

H59

# திருக்களிற்றுப்படியார்

டாக்டர், மா. இராசமாணிக்கனூர் அவர்கள்

தியாகராசர் கல்லூரி, மதுரை.

இது சிவஞான போதத்திற்கு முற்பட்ட நூல். இதனைச் செய்தவர், திருவுந்தியார் என்ற நூலைச்செய்த உய்யவந்த தேவநாயனுர் மாணவர்க்கு மாணவர். இவர் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனுர் என்னும் பெயர் கொண்டவர். இந்நூல் 100 வெண்பாக்களை உடையது. திருவுந்தியாரின் கருத்தைச் செவ்வையாய் விளக்குவது. இது பொன்னம்பலத்திலுள்ள திருக்களிற்றுப்படியில் வைக்கப்பட்டுப் பாராட்டப் பட்ட தாதலின், ''திருக்களிற்றுப்படியார்'' என்று காரணப்பெயர் பெற்றது. இந்நூலில், 63 நாயன்மார் வரலாறுகளிலிருந்தும் உதாரணங்கள் தந்து வல்வினை, மெல்வினை என்பன விளக்கப் பட்டுள்ளன; சாத்திர விளக்கங்கள் சில உவமைகளால் தெரிவிக்கப்படுகின்றன; திருக்குறட்பாக்கள் சிலவற்றை மேற்கோளாகக்கொண்டு அவற்றின் பொருளை விளக்கும் செய்யுட்கள் இன்பம் பயப்பன.

இறை: பரம்பொருள் சத்தி-சிவமாக விளங்கும். அவ்வாறு விளங்குவது உலகிற்குத் தாயும் தந்தையும் ஆகிய நிலையாகும். தூய பொன்னின் நிறம், நகைகளாக மாறியபோதிலும் பொற் கட்டியாய் நின்றபோதும் ஒருதன்மையாய் விளங்குதல்போல, இறைவன் உலகில் அத்துவிதமாகக் கலந்து ஒன்றன்றாய் இரண்டன்றாய் நிற்பன். கடல் நீரிலிருந்து உப்பு விளைவதுபோல, இறைவன் அருளாலே திருமேனி கொள்ளுவான். இவ்வாறு கொள்ளும் திருமேனிகளில் ஆசிரியத் திருமேனி சிறப்புடையது. கடல்நீரை முகந்துசென்று நன்னீர் பொழியும் முகில்போல, ஆசிரியனாக வெளிப்படும் இறைவன் அநுபவப்பயனை அறிவுரையாக உபதேசிப்பன். இறைவன் மெய்ஞ்ஞானிகளைச் சார்ந்து ஆவேசித்து நின்று உபதேசித்தலும் உண்டு. இவ்வுபதேசம் மெய்ஞ்ஞானிகளது செயலன்று; இறைவனது செயலே ஆகும். மலம் எல்லாம் நாற்றம் உடையனவாயினும், தூய்மை பொருந்திய பசுவின் சாணம் பிற மலங்களை நீக்குதல்போல ஆசிரியன் மக்களுள் ஒருவனே எனினும், சிவன் அவனை நிலைக்

களமாகக் கோடலின், அவன் பிறவியை ஒழிக்க வல்லவனுவன். கடலகத்தே அலைகளால் அலைப்புறுது ஆடும்படி நின்றவர்க்கும் கடலின் ஆழத்தையும் அகலத்தையும் அளத்தல் அரிது. அது போலக் கடவுள் அருள் பெற்றவராயினும், அவர்கள் அவனது முழுப் பெருமையை அறிந்தவராகார்.

உயிர்: உயிர்கள் தம் அறிவில் சிவம் விளங்க, தலைவனையும் (கடவுளையும்) தம்மையும் உணரும்; உணர்ந்தபிறகு, உடலுடன் இருப்பினும், பற்று நீங்கப்பெற்றுச் செத்தாரைப் போலத் திரியும்; அவை சிவன் வயப்பட்டு நிற்குமாதலால் மீண்டும் உலக நிகழ்ச்சிகளில் புகா. ஆற்றுநீர் கடலில் கலந்து கடல் நீராகி மீண்டும் ஆற்றின் படுகையில் மேலேறினும் உப்புத்தன்மை மாறுவதில்லை. அதுபோல சிவத்தோடு ஒன்றி நிற்கும் மெய்ஞ்ஞானிகளுடைய அறி-கருவிகள் செயற்கருவிகள் மாயை நிலையில் நில்லாமல் சிவகரணமாக விளங்கும். அவர்களது பற்றற்ற நிலை, மணியின் கண் தூங்கும் நாக்கிற்கு ஒப்பாகும். படிகம் தன்னைச் சார்ந்துள்ள பொருளினது நிறத்தைக் காட்டும்; தனது நிறத்தைக் காட்டாது. அதுபோல உலகத்தைச் சார்ந்து அவ்வண்ணமாய் இருத்தலும், முத்தி நிலையில் இறைவனைத் தழுவி நின்று அவன் வண்ணமாக இருத்தலும் உயிர் நிலையாகும்.

சாதனம்: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன உயிர்கட்குச் சாதன நெறிகளாகும். சிவனறம் - வல்வினை, மெல்வினையென இருவகைப்படும். இறைவனைத் துணையென்று கருதி ஒழுகுவதும், பூசை, தியானம், பாடல், ஆடல் முதலியன நிகழ்த்துவதும் மெல்வினை எனப்படும். சிறுத்தொண்டர் பிள்ளையை அரிந்ததும், சண்டீசர் தந்தையைக் கொன்றதும் அரிவாள் தாயர் தம் கழுத்தையே அரிய முயன்றதும் சிவனறத்துள் வல்வினை ஆகும். திருவுருவ வழிபாடும், ஆறு ஆதாரங்களில் இறைவனை நினைத்துத் தியானித்தலும் 'ஆதார யோகம்' எனப்படும். இறைவனை அகண்டமாய் அருள் வெளியில் மௌனமாக இருந்து வழிபட்டு அவனோடு ஒற்றுமையுற்று நிற்றல் 'நிராதாரயோகம்' எனப்படும். ஐந்தெழுத்து (பஞ்சாட்சரம்) இறைவனைக்காட்டும் இயல்புடையது. நாத தத்துவத்திற்கு அப்பாலுள்ள இறைவனை யோக முடிவில்

கேட்கும் சிலம்பொலி வழியேசென்று அடைய முயலவேண்டும். 'நான் பிரமம்' என்பது மயக்கவுணர்ச்சியேயாம். உயிரினிடம் சிவவடிவமாகிய ஞானத்தைக்கண்டு வணங்கிச், சிவபெருமானுக்கு அன்புநீரால் திருமஞ்சனம் ஆட்டி, தன்னை அவனுக்கு வாடாத ஒரு மலராகச் சாத்தி வழிபடின், பிறவி ஒழியும். அறிவுநெறியும், அன்புநெறியும் பிறப்பை அறுக்க வல்லவை.

**இறைவனை அணைந்தோர் இலக்கணம்:** இறைவனை அணைந்தவரே அடியார் ஆவர். ஆலமரத்தைத் தன்னகத்தே அடக்கிய வித்துப்போலத் திருவருளைத் தன்னகத்தே அடக்கியவர் அடியார். இறைவன் பெருமையை அடியார் அறிவர்; அடியார் பெருமையை இறைவன் அறிவான். இதற்குக் கண்ணப்பரும் காளத்தியப்பருமே சான்றுவர். இறைவன் பக்தி வலையிற் படுவன் என்பது சேந்தனுர் அமுது படைத்த வரலாற்றிலிருந்து தெளியலாம். ஞானநெறி நின்றவர்க்குக் காலம், இடம், திசை இருக்கை என்பன இல்லை. சிவஞானமும், சிவயோகமும் வித்தும் முளையும் போல்வன.

---

# Dharmapuram Adhinam & Adhinam Devasthanam's Oriental College.

## Extracts from the Visitors' Book.

The Adhinam Oriental College is doing magnificent work. It is just this kind of work which religious heads should interest themselves in. spread of knowledge generally and particularly in the field of religion and in such atmoshere as seen here is indeed noble work. I wish the students and authorities all God's Blessings.

(Sd.) Dr. R. M. Alagappa Chettiar,
Chairman,
Elementary Education Commission.
7—3—55.

7—3—55 இக்கல்லூரியைக் கண்டு மகிழ்ந்தேன்,

(Sd.) நெ. து. சுந்தரவடிவேலு.
Director of Public Instruction.

# கலையுலகம்

திரு. கை. முருகையாப்பிள்ளை அவர்கள் B.A., L.T.,
தலைமையாசிரியர், தருமையாதீனக் கீழைக்கலை நடுநிலைப்பள்ளி

(சென்ற மாதம் 66-ம் பக்கத்தொடர்ச்சி)

கோவில் நட்சத்திர வடிவமாக உள்ளது. முன்மண்டபம் அப்படியில்லை. குறுக்கு நெடுக்காக உள்ளது. இக்கோவிலின் அமைப்பு ஹொய்சாளர்கள் காலத்தின் கட்டடக் கலையைக் காண்பிக்கிறது. இது சாளுக்கியர் கலையினின்றும் 11-வது நூற்றாண்டில் பிரிந்த ஒரு பிரிவு ஆகும். கோவில் ஐந்தடி உயரமுள்ள மேடையின்மீது கட்டப்பட்டுள்ளது. அதன் கட்டடக் கலை உள்ளே நன்றாக வெளிச்சத் புகும்படி செய்கிறது. இனி சிறப்பான இடங்களிலுள்ள சிற்பங்களைப்பற்றிப் பார்ப்போம்.

கோவிலில் எல்லாப்புறங்களிலும் சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் சிறந்தன மிகப்பல. எல்லாவற்றையும் கூறிப் போதல் இயலாது, முதலில் கோவிலினுள் நுழையும்போதே திருவாயிலின் இருமருங்கிலும் கண்கவரும் காட்சி. இவைகளைக் கண்ணுற்ற "பர்கூஸன்" என்ற ஆங்கிலேயர் "உலகில் எந்த இடத்திலும் இந்த அளவுள்ள சிறிய இடத்தில் இவ்வளவு சிற்பங்களைக் கண்டதில்லை. வேலையாட்களோ, பொருளோ இந்தச் சிறிய இடத்தில் செலவழிக்கப்பட்டிருப்பது போல் எங்கும் செலவழிக்கப்பட்டிருக்க முடியாது" என்கிறார்.

அடிப்புறத்தில் சுற்றிலும் யானைகள் உள்ளன. அவைகள் மிகச்சிறியவைகளே. அவைகளுக்கு முகப்படாம் உள்ளன. மேலே உட்காருவதற்குச் சேணங்களும் மெத்தைகளும் போடப்பட்டுள்ளன. ஒன்றிரண்டற்கு மிகுந்த சோடிப்பு செய்யப்பட்டுள்ளது. யானைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையைச் சேர்ந்ததுபோல் உள்ளன. நடையும் அவ்வாறே; தோற்றமும் அவ்வாறே; எல்லாம் ஒருங்கு சேர்ந்து நடப்பதுபோல் இருக்கின்றன.

அடுத்த மேல்வரிசையில் கொடிகளாலான இயற்கைமாடங்களில் அழகிகளின் வடிவங்கள் பலவிதமாகச் செதுக்கப்பட்டி

ருக்கின்றன. திருமால் அழகிய பெண்வடிவங்கொண்டு பஸ்மாசுரனை, மயக்கி, அவனையும் தன்னைப்போல் நாட்டியம் ஆட வைத்து, நாட்டிய முறையில் அவனையும் தலையில் கைகளை வைக்கச் செய்து அழித்தது காட்டப்பட்டிருக்கிறது.

மூன்றுவதில் மேலும் கீழும் பூக்கொடிகள் படர்ந்து செல்கின்றன. அவைகளிலிருந்து பூக்கள் மலர்ந்துள்ளன. அந்தப் பூக்களின் வடிவத்துக்குள் இராமாயணக்கதைகளும், மற்றவைகளும் விளக்கப்பட்டுள்ளன. அதற்குமேல் வரிசையில் பாரதமும் சித்திரங்களில் விளக்கப்பட்டுள்ளது.

தூண்களுக்கிடையே யுள்ள பாகங்களிலும் சிற்பங்கள். அவைகளில் ஒன்று அக்காலத்திய அரசன் நடத்திய 'தர்பார்' அல்லது அரச அவையைக் காண்பிக்கிறது. அரசன் அரியணையின்மீது வீற்றிருக்கிறுன். அவனது நீளமான விரிந்த தலைமயிர் கத்தரித்து விடப்பட்ட தாடி, முறுக்கியமீசை, இவைகளுடன் அக்காலத்து அரசர்களின் உடைவகை அதில் நன்ருகப் புலப்படுகின்றன. அது அக்கோயிலைக் கட்டியவன் விஷ்ணுவர்த்தன ஹொய்சாள அரசனுக இருக்கலாம் எனச்சொல்லப் படுகிறது. அவனது இடது புறத்தில் அரசி வீற்றிருக்கின்ருள். அவளது தலைமயிர் நன்ருகச் சீவி வண்ணுத்திப் பூச்சிப் பின்னலும் முடிச்சும் போடப்பட்டுள்ளது. அவள் இடுப்பில் அரைக்கச்சை அணிந்திருப்பது நமக்கு வியப்பை யுண்டாக்குகிறது. அத்துடன் குஞ்சங்கள் தொங்குகின்ற 'ஒட்டியாணம்' அல்லது அணிசெய்யப்பட்ட வார்ப்பட்டையும் உள்ளது. மேலாடை முழங்காலில் நழுவிவந்திருக்கிறது; அதனுல் இவையெல்லாம் நன்ருகத் தெரிகின்றது. வலதுபுறத்தில் மந்திரிமார்கள் அறிவுரைகளைச் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அரசி கையில் வெற்றிலை மடித்த வண்ணம் அவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிருள். அரசனும் உற்றுக் கவனித்த வண்ணம் உள்ளான். சுற்றிலும் மற்றவர்கள் நின்றுகொண்டிருக்கிருர்கள்.

அரச அவையில் அரசியும் கலந்துகொள்வது அக்காலத்திய குடிமக்களுக்கும் மகிழ்ச்சியை யூட்டியிருக்கிறது. நமக்கும் மகிழ்ச்சியை யூட்டுகிறது. பெண்கள் மதிக்கப்பட்டிருப்பதற்கு இது ஒரு பெரும் சான்று. இதேமாதிரியாகத் திருவாயிலின் வடபுறத்தில் இதேவரிசையில் முதலாம் நரசிம்மவர்மன் (தர்பார்) அரச அவை செதுக்கப்பட்டிருக்கிறது. வாயிலின் இருமருங்கிலும் இவ்வாறு உள்ள சிவந்த சிற்பங்கள் பல உள்ளன.

(தொடரும்)

464

# அயல் நாட்டு மகளிர் விரும்பும் நமது ஆடை

'கமாமு'

மனித வரலாற்றிலே ஆடை யுடுத்தாத காலம் ஒன்று இருந்திருக்க வேண்டும். பிறந்த மேனியாக மனிதன் வாழ்ந்து வந்திருப்பான். பிறகு குளிரிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவும், மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும் ஆடை தேடியிருப்பான். இலைகளும் தழைகளும், மரப்பட்டைகளுமே அவனுக்கு எளிதாகக் கிடைத்திருக்கும். மனிதன் மரவுரி தரித்துச் செல்லும் செய்திகளை நாம் பழைய நூல்களில் படிக்கிறோம். வேப்பந்தழை உடுத்தி மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தும் வழக்கம் இன்றைக்கும் சில சிற்றூர்களிலே காணலாம்.

நாளாக நாளாகப் பருத்தியினால் நூல் இழைத்து ஆடை செய்ய அறிந்திருப்பான். பின்பு பட்டும் கம்பளமும் தோன்றியிருக்கும். இக்காலத்திலோ என்னென்னவோ வகையான நார்களிலிருந்து நூல் செய்து என்னென்னவோ வகையான துணிகளை உண்டாக்க நாம் அறிந்து விட்டிருக்கிறோம். நிலக்கரியிலிருந்தும் ஒருவகைப்பட்டு கிடைக்கிறது என்றால் வியக்காமல் இருக்க முடியவில்லை. குளிரும் மானமும் காப்பதற்காக முதன் முதலில் தேவைப்பட்ட ஆடை, காலப்போக்கில் கண்ணையும் மனதையும் கவரவும், உடலை வகை வகையாக வனப்பாக்கிக் கொள்ளவும் பயன்படுத்தப்படலாயிற்று. அழகு அழகாகத் துணி நெய்வதும், அதனை அழகு அழகான ஆடையாக்குவதும், இரண்டு கவின் கலைகளாகி விட்டன.

நமது நாட்டைக் காட்டிலும் அயல் நாடுகளில் இக்கலைகள் பெரிதும் வளர்ந்திருப்பதாக நாம் நினைக்கிறோம். நினைப்பது மட்டும் அல்ல, உண்மையிலேயே மேல்நாட்டுத் துணிவகைகளில் பல, கலை நலம் சிறந்தனவாகவே காணப்படுகின்றன. நாமும் அத்துணிகளைக் கூடுதல் விலைகொடுத்தும் வாங்க முற்படுகிறோம் என்பதும் பொய்யாகாது. என்றாலும், நமது நாட்டு

ஆடைகளின் மேன்மையை அயல் நாட்டவரும் அறியாமலில்லை. அவர்கள் நாடுகளில் இருக்கும் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றபடி அவர்கள் ஆடைகளை ஆக்கிக்கொள்ள வேண்டிவந்தாலும், நமது நாட்டு ஆடைகளின் சிறப்பை அவர்கள் வியந்து போற்று கிறார்கள். விரும்பி அணியவும் அவாவுகிறார்கள்.

நமது ஆடையின் முதல் பெருஞ் சிறப்பு அதன் தூய்மையே யாகும். நாம் உடுத்திக்கொள்ளும் துணிகளை அன்றாடம் தோய்த்து நல்ல வெயிலில் உலரவைக்கிறோம். எனவே, என் றும் நமது உடை துப்புரவாக இருக்கின்றது. அயல் நாட்டவர் அவர்களது ஆடைகளை அவர்கள் அன்றாடம் தோய்க்க முடிவ தில்லை. கால் சட்டையும் மேல் சட்டையும், 'கவுனும்' இவனு மாக அவர்கள் ஆடை இருப்பதே அதற்கும் காரணமாகும். அவற்றைத் தோய்த்தால் சுருங்கல் விழுந்துவிடும். பெட்டி போட்டுத் தேய்க்காமல்மறுபடியும்உடுத்திக்கொள்ள முடியாது. நமது வேட்டித்துண்டுகளுக்கும், புடவை இரவிக்கைகளுக்கும், அன்றாடம் பெட்டி போடத் தேவையில்லை, அல்லவா?

தைத்த ஆடைகள் உடலின் உறுப்புக்களை இறுக்குகின் றன; உறுப்புக்களின்மீது தாராளமாகக் காற்றுப்படவும் விடுவதில்லை. குளிரான நாடுகளில் அங்ஙனம் இறுக்கும் ஆடைகள் ஒருவேளை தேவைப்படலாம். என்றாலும், அவற்றால் உடலுக்குக் கெடுதியும் இல்லாமல் இல்லை என்பதை அந் நாட்டவர்கள் உணருகிறார்கள். நமது உடைகளிலும், தைத்த உடைகளும் சில உண்டாயினும், அவை உடலை அவ்வளவு இறுக்கிப் புழுக்கும் தன்மையன வாகா. மேலும் அவ்வுடை களையும் அன்றாடம் தோய்த்து உடுத்துவதால் உடலின் தோலுக்கு ஊறு நேராது.

புடவையாகவும், வேட்டியாகவும் உடுத்திக் கொள்ளா மல், 'கவுன்' ஆகவும், கால் சட்டையாகவும், உடுத்தவரும் போது, தையல் செலவு ஏற்படுகிறது. கால் சட்டைக்கு ஆகும் தையல் கூலியைக் காட்டிலும், ஒரு 'கவுன்' தைப்பதற்கு ஆகும் கூலி பல மடங்காகும். தையல் ஒரு கலையாகப் போய்விட்ட படியால், தையற்காரரது கற்பனை சென்றவாறெல்லாம் அவர் தைக்கும் ஆடையின் வடிவமும் அன்றாடம் மாறிக்கொண்டே

466.

போகிறது. நேற்று வெட்டித்தைத்த முறை இன்று நாகரிக மற்றதாகிவிட வேண்டும் என்ருல், அவர் அன்ருடம் புதுபுது முறையில் வெட்டுக்கலையில் வல்லவராகிக் கொண்டே செல்ல வேண்டும். அங்ஙனம் செல்வது அவரது தொழில் குறையாது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு போவதற்கும் வழியாகும்.

மகளிர் 'கவுன்' அணிவதில் இருக்கும் இன்னெரு குறையே அயல் நாட்டு மகளிருக்குப் பெருங்குறையாகத் தோன்று கிறது. ஒரு பெண்ணுக்கு அவளது பதினைந்தாவது வயதில் ஒரு கவுன் தைத்தால், அதை அவளது பதினெட்டாவது வயதில் போட்டுக்கொள்ள முடியாது. விரைந்து வளரும் இயல்புடைய பெண்ணுயின் அதற்கு முன்புகூட அந்தக்கவுன் சின்னதாகி விடும். எனவே, ஏறத்தாழ நாற்பது வயது அடைகிறவரை யில் இரண்டு மூன்று ஆண்டுக்கு ஒருமுறை மாற்றி மாற்றித் தைத்துக் கொண்டே யிருக்கவேண்டும், அதற்குப் பிறகும் வயது தளரத் தளர 'கவுன்'களை அத்தளர்ச்சிக்கு ஏற்றபடி மாற்றித் தைக்க வேண்டிவரும். மேலும், ஒரு பெண் மங்கல மனைமாட்சியின் நன்கலனை நன்மக்கட் பேற்றையடைய முற்படும்போது, மாதத்திற்கு மாதம் வேறு வேறு கவுன் தைக் காமல் எப்படி யுடுத்தமுடியும். ஒரு மகப்பேற்றுக்குத் தைத்த உடுப்பு அடுத்த மகப்பேற்றுக்குப் பயன்படும் என்று சொல்ல வும் முடியாது. பேறுகால உடை, வேறு காலத்திற்கும் பயன்படாது.

பதினைந்து வயதில் வாங்கிய ஒரு பட்டுச்சேலை, அது உழைக்கக் கூடியதாயின், ஐம்பது வயதிலும் அதனை ஒரு பெண்பால் உடுத்திக் கொள்ளலாம். ஆண்டுதோறும் உடுக் தலாம், பேறு காலத்திலும் அணியலாம். அன்ருடம் தோய்த் துத் தோய்த்துத் துப்புரவாக உடுத்திவரலாம். பெட்டிப் போட வேண்டுமென்ற தொல்லையில்லை, அதே புடவை, குழந்தை கட்கு ஏணைக்கட்டவும் பயன்படும். 'கவுன்' ஏணையைக் கற்பனை செய்யவும் முடியாது, அல்லவா? தாயின் சேலையை மகள் உடுத்த விரும்பினுலும் அப்படியே செய்யலாம். பாட்டி யின் புடவை பேர்த்திக்கும் பயன்படும். பாட்டி யணிந்திருந்த 'கவுனை'ப் பேர்த்திப் போட்டுக்கொள்ள முடியுமா? எண்ணிப் பாருங்கள்!

இவ்வாறெல்லாம் சிந்தித்துப் பார்த்தே அயல்நாட்டுப் பெண்கள் நமது நாட்டு உடையை அணிய விரும்புகிறார்கள்.

1924-25-ல் இங்கிலாந்தில் வெம்பிளி என்ற இடத்தில் ஒரு பெரிய பொருட்காட்சி நடந்தது. அதில் இந்தியப் பகுதியும் ஒன்று இருந்தது. அப்பகுதியிலுள்ளவற்றை விளக்க ஆங்கிலப் பெண்கள் அமர்த்தப்பெற்றிருந்தனர். அப்பெண்கள் நமது நாட்டுப் பட்டுப் புடவைகளை விரும்பி அணிந்து கொண்டது மல்லாமல், தலைமுடியைக் கோடாலி முடிச்சுப்போட்டு அதன் மீது ஒரு ரோசாமலரை வைத்துக் கொண்டிருந்தார்கள். 'இரட்சண்ய சேனை' யென்ற பெயரால்சேவைசெய்யும் ஒரு கிறித்துவச் சமயத்தவர் குழுவினைச்சேர்ந்த பெண்கள், இந்திய உடையணிய எண்ணியவராய்த் தமிழ் நாட்டுப்பெண்கள் உடுத்திக்கொள்வது போலவே சேலையணிந்து கொள்கிறார்கள் என்பதை இன்றும் காணலாம். அமெரிக்கப் பெண்கள் பலர் நமது பட்டுச்சேலைகளை நமது நங்கை நல்லார் அணிவதுபோலவே இன்று அணிந்து வருகிறார்கள் என்பதை, அந்நாட்டிலிருந்து வரும் படங்களில் பார்க்கலாம். நமது நாட்டின் பல பகுதிகளில் உள்ள பெண்கள் பல்வேறு வகையிலே உடுத்திக்கொண்டாலும், அயல்நாட்டவர் உடுத்த விரும்பும் முறை தமிழ்ப் பெண்கள் உடுத்துகின்ற முறையேயாகும்.

ஏன், நமது நாட்டிலேயும், பிற பகுதிகளிலுள்ள பெண்கள் நாகரிகமாக இருக்க விரும்பினால், அழகாகக் காட்சியளிக்க அவாவினால், தமிழ் மகளிர் உடுத்துவதுபோலவே புடவை உடுத்திக் கொள்ளுகிறார்கள். நான் இதனை ஒருமுறை டெல்லி சென்றிருந்தபோது அங்கு பிர்லா பூங்காவில் வந்து குழுமிய பல பகுதிப் பெண்களையும் பார்த்ததில் தெரிந்துகொண்டேன்; வங்காளம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், பம்பாய் முதலிய பல பகுதிகளிலிருந்து அங்குவந்த பெண்களில், இளையவர்களாக, அழகு நோக்கம் உடையவர்களாக, இருந்தவர்கள் தமிழ் முறையிலே சேலையுடுத்தியிருந்தார்கள். தமிழ்நாட்டில் கூட, வேறு வகையாகப் புடவையணியும் பழக்கமுடையவர்களில் நாகரிகமாக இருக்க விரும்புவோர், தமிழ்ப்பெண்கள் உடுத்துவதுபோலவே உடுத்துவதையும் காணலாம்.

எனவே, தமிழ் மகளிர் சேலை கட்டுகின்றமுறை உலக மகளிர் அனைவரும் பாராட்டிப் பின்பற்ற விரும்புகின்ற அழகானமுறை என்பதை யறிகிறோம். உலகம்முழுதும் போற்று கின்ற நமது ஆடைமுறையிலே மேலும் பல சிறப்புக்கள் இருப் பதை அவர்கள் அறியார்கள். ஒரு புத்தாடை வாங்கினால், ஆண்டவனை நினைத்து, அதன் மூலைகளில் மஞ்சள் தடவாமல் நாம் யாராவது அதனை உடுத்துகிறோமா? நடுவீட்டில் வைத்துத் தெய்வத்திற்குப் படைத்து உடுத்திக்கொள்ளும் சமயங்களும் உண்டு அல்லவா? சமயச் சடங்குகள், வழிபாடுகள் இவற்றில் ஈடுபடுவதற்கு முன்பு குளிப்பதோடு, தோய்த்த ஆடையை உடுத்திக் கொள்ளவேண்டும் என்பதும் நம்மிடையே ஒரு கட்டாயமான ஏற்பாடல்லவா? குளித்துவிட்டு, முன்பு உடுத் திய அழுக்காடையையே அணிந்து கொள்ளுகிறோமா? மண மக்களுக்குப் புத்தாடை வழங்குவதென்றால், இறைவன்முன்னே வைத்து வழிபட்டு எடுத்துத் தருகின்றோமே. வந்திருக்கின்ற பல பெரியவர்களும் தொட்டு வாழ்த்தித்தர வேட்டி புடவை வழங்கும் வழக்கம் இன்றும் உண்டே. புத்தாடை யுடுத்திக் கொண்ட மணமக்கள், பெரியவர்கள் காலில்விழுந்து வணங்கிக் கொள்ளும் சிறப்பு வேறு எந்தநாட்டில் உண்டு, நமது ஆடை தெய்வம் நல்கும் ஆடை என்ற உணர்ச்சியோடல்லவா? இங் ஙனமெல்லாம் செய்கிறோம்? நமது ஆடையைப்பற்றிய இப் பெருஞ் சிறப்பை அயல்நாட்டார் அறியார்கள், பாவம்! என்றாலும் நமது ஆடையின்மீது எவ்வளவு பற்று! நமது ஆடைக்கு எவ்வளவு பாராட்டு!

169

தொடர் கதை

# மாசில் வீணை

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், தருமபுர ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி

பத்தாம் அத்யாயம்

## குற்றால மலையில்

திருக்குற்றால மலையின் அழகான இயற்கைவளம் பொன்னி தேவிக்கு மிகவும் பிடித்திருந்தது. 'சோ' வென்று கொட்டும் அருவியும், பச்சைப்பசேரென்று விளங்கும் மலையும், விண்ணை யளாவிய காட்டு மரங்களும். விதம்விதமான வண்ண மலர் களும் கிளைகளில் ஊஞ்சலாடி இசைபேசும் கிளியினங்களும், அருவிகளில் அமிழ்ந்தி விளையாடும் நீர்வாழ் இனங்களும் ஆகிய இவை இளவரசியின் மனத்துயரங்களை எங்கோ விரட்டிவிட்டன. பிரான்மலையில் இருந்தபோது இருந்த ஆறாத மனப்புண் அருவிப்பெருக்கிலே குளிர்ந்தது எனலாம். ஆம்; அந்த அளவுக்கு நன்மை புரிந்தது அந்த இயற்கைச் சூழ்நிலை.

திருக்குற்றால மலையில் இப்போது இருப்பதுபோல மக்கள் நடமாட்டம் இல்லை அப்போது. கடைகளும் பிறவும் அந்தக் காலத்தில் குற்றால மலையில் கால் வைக்கவில்லை. ஆம்; அமை தியான மக்கள் நடமாட்டம் இல்லாத மலைப்பாங்காக இருந்தது அது. சுருக்கமாகச் சொன்னால் அங்கு வரவே மக்கள் அஞ்சினர் என்று சொல்லலாம். சோவென்று கொட்டும் அருவிக்குப் பக்கத்தில் அப்போதெல்லாம் இரும்பு வேலி ஏது? எழிலார்ந்த பாலந்தான் ஏது?

இவையெல்லாம் மனிதன் குற்றால அருவியில் குளிக்கத் தொடங்கியபின் தன் வசதிக்கு உண்டாக்கிக் கொண்டவை யல்லவா?

குற்றாலநாதர் மட்டும் அந்த அமைதியான மலைப்பாங்கில் கோயில் கொண்டிருந்தார். அருவிக்கு அருகில் ஆனந்தமாக இயற்கை அன்னையின் பூசனைக்கு இன்னருள் சொரிவது போல

எழிலாக வீற்றிருந்தார் எம்பெருமான். மலைக்குகைக் கோயில்; கட்டு மண்டபமும் கோயிலின் முன்பக்கம் இருந்தது. திருச்சுற்று கருங்கல் திருப்பணி. ஆனால் இன்றுநாம் காணுமளவுக்கு அவ்வளவு அழகான திருத்தம் இல்லை.

குற்றாலநாதர் மலைக்குகைக்குப் பின்னால், தென்கிழக்குத் திசையில் கப்பும் கிளையுமாகத் தழைத்திருந்தது குறும்பலாமரம். பலாமரத்தின் இடது பாகத்தில் இருந்த மலைப்பாதை வழியே சுமார் நூறு அடி தூரம் சரிவில் சென்றால் அங்கே ஒரு மண்டபம் உண்டு. நான்கு அடி தள்ளி ஒரே புதர்களும் செடிகளுமாகச் சூழ்ந்திருந்தது அந்த விசாலமான மண்டபம். இந்த மண்டபந்தான் இளவரசனுக்கும் இளவரசிக்கும் இனிய அரண்மனை. அந்த மண்டபத்தின் கருங்கல் தூண்களும், அவற்றில் அமைந்த நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளும் அது ஒரு அமரத்துவம் படைத்த சிற்பியின் கை வண்ணம் நிறைந்த கலைக்கூடம் என்று கட்டியம் கூறிக்கொண்டிருந்தன.

மண்டபத்தின் உள்ளே சென்றால் சுமார் ஐம்பதடி நீளமான ஒருதாழ்வாரம்; அதையடுத்து விலாசமான ஒரு கல்யாண கூடம்; அதைக் கடந்து பின்புறம் சென்றால் மலைப்பாங்கைத் திருத்தி அமைத்த ஒருசிறு பூங்கா. அங்கே ஒரு சுனையும் உண்டு. அதற்குப் பக்கத்தில் ஒரு சிறு கருங்கல் மேடை. அதன்மேல் சிற்பியின் அரிய ‘கலை விளக்கம் ஒன்று’ சுடர்விட்டது. ஆம்; காமனும் ரதியும் அங்குக் கல்லுருவிலே காட்சிதந்தனர்.

இந்த அழகான பழைய மண்டபத்தில்தான் புலவர் பிறைகுடியாரின் மோனவாழ்க்கை - அமைதிவாழ்க்கை - தமிழ் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. குற்றாலநாதர் கோயிலும், அதைச் சார்ந்த இந்தப் பழைய கலை மண்டபமும், சூழ இருந்த இயற்கை வண்ண அமைப்பும் இளவரசன் இளவரசி இருவர் மனத்தையுமே கொள்ளை கொண்டிருந்தன. ஆனால் மருத நம்பிக்கு மாத்திரம் கொஞ்சம் மனக் கலக்கம் உண்டு; காரணம் மதுரையில் தன் செய்தி கேட்காமல் தவித்துப் போவாளே பொன்முடி என்பதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? குற்றாலமலையின் அருவி அவனுக்குக் கோடை வெயிலாகச் சுட்டது; காட்டு மலர்களின் மீது படிந்துவந்த

தென்றல் கனலை வாரி வீசுவதாகப் பட்டது அவனுக்கு. நீல வானிலே தெண்ணிலாப் பொழிந்த கோலமதி அவனுக்கு விடம் வீசும் வெய்யோனாகப் பட்டான். 'பாவம்!. தன்னைப் பற்றி ஊரார் அவதூறாகப் பேசுவதைக் கேட்டுப் பித்தேறி நிற்பாள் பொன்முடி... ஆனால்... நாட்டைக் காட்டிக் கொடுக்க முற்பட்டு விட்டானே நாயகன் என்று என்னை வெறுத்து விடுவாளோ... அப்படி இருக்காது! என்மேல் அவளுக்கு உயிர். யார் சொன்னாலும் நம்பமாட்டாள்... ஆமாம்... அன்புள்ளம் நிறைந்த தூய்மை வடிவம்'

... இப்படியெல்லாம் எண்ணுவான் மருதநம்பி. அடுத்த கணமே ஒரு ஆசை தோன்றும் அவன் நெஞ்சின் ஓரத்தில்...

'மாறுவேடத்தோடு சென்று மதுரையிலிருந்து பொன் முடியையும் இங்கு அழைத்து வந்து விட்டால்... இளவரசிக்கும் துணையாக இருப்பாள்! ... ஆனாலும் எவ்வளவு பயங்கரமான வேலை...!'

சீச்சீ! என்ன இழிவான எண்ணம்! தன் இளவரசருக்கு எதிரியின் நாட்டில் மாறுவேடமிட்டு நுழைவதா? வேண்டாம்! இப்படி வருவான் முடிவுக்கு...

பாரியின் நெஞ்செல்லாம் பாண்டியனோடு போரிட்டு அவன் மணிமுடியை மண்ணோடு மண்ணாக்கி, அவனை மாய்ப்பதிலேயே சுற்றிச் சுற்றி வந்தது!

மண்டபத்தின்மேல் தட்டுக்கு வந்து நின்று அதோ... ஆவேசமாகப் பாயும் அருவியைப் பார்ப்பான்! 'ஆகா! இப்படியல்லவா பறம்பினர் படை பாண்டியர் மீது பாயவேண்டும்' என்று நினைப்பான்! அடுத்த கணம் பச்சைப் பசேலென்று விண்ணையளாவி நிற்கும் மலை உச்சியைப் பார்ப்பான்! 'இவ் வண்ணமன்றோ மாற்றானைச் சாடி, மணிமுடி தரித்துத் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும்' என்று எண்ணுவான்!

இப்படி இவன் நினைவுகள்!

பிறைசூடியாரோ காலையில் குதிரைமேல் எங்கோ மலைப் பாதைவழியே சென்று மறைவதும், மாலை கையெழுத்து

மறையும் வேளையில் மீள்வதும் ஆக இருந்தார்! இரவு நேரத்தில் தான் அவரைச்சந்திக்க முடிந்தது! அன்றுட நாட்டு நடப்புக்களை அப்படி அப்படியே ஒற்றறிந்து வரும் புலவரின் நுண்ணறிவு கண்டு வியந்தான் இளவரசன் பாரி. நாட்கள் நகர்ந்தன.

*

அன்று ஒருநாள், கதிரெழுந்து இரண்டு நாழிகைக்குமேல் ஆகியிருக்கும். இளவரசி வழக்கம்போல் எழுந்து அருவியில் நீராடிக் காட்டு மலர்களைக் குடலையில் பறித்துக்கொண்டு குறும்பலா ஈசராம் குற்றாலநாதர் மலைக்குகைசென்று பூசனை செய்து கொண்டிருந்தாள். மருதநம்பியும் பாரியும் அருவியின் ஓரமாக வந்துகொண்டிருந்தனர். அன்று அதிகாலையிலே புலவர் சென்று வீட்டதைப்பற்றி இருவர் பேச்சும் திரும்பியது.

சற்று தூரத்தில் நாட்டுப் பகுதியிலிருந்து வரும் காட்டுப் பாதை வழியே குதிரைச்சத்தம் கேட்டது. சரேலென்று பக்கத்திலிருந்த பாறை ஒன்றின் பின்புறம் மறைந்துகொண்டு உடைவாளின்மேல் கையைவைத்து ஆவலோடு யாரென்று பார்த்தனர்.

குதிரையின்மேல் யாரோ ஒரு முதியவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்போன்ற எடுப்பான தோற்றம்!

குதிரை இளவரசனும் மருதநம்பியும் மறைந்திருந்த பாறைக்கு முன்னால்வந்து நின்றது. குதிரைமேல் இருந்து நிலத்தில் குதித்தார் அவர். நல்ல கம்பீரமான தோற்றம். விசாலமான மார்பு; நீண்ட கரங்கள். வளைந்து நீண்ட மீசை; ஒட்டிக்கொண்டு அடர்ந்து வளர்ந்திருந்த தாடி.

அடுத்தகணம் சரேலென்று பாறைக்குப் பின்னாலிருந்து உருவிய உடைவாளோடு அவர் முன்வந்து நின்றான் இளவரசன். கண்களில் கடுமை ததும்பி நின்றது

'யார் நீங்கள்?'

எடுப்பான குரலில் கேட்டான் இளவரசன்.

'தம்பீ! நீ யாரப்பா? இந்தக் குற்றாலமலையில் எப்போது முதற்கொண்டு இருக்கிறாய்? பார்த்தால் யாரோ இளவரசன் போல் தோன்றுகிறதே?' என்று, மெல்லிய புன்சிரிப்போடு வினவினார் அவர்.

அந்தப் புன்னகை – அந்தக்குரல் தங்களோடு பழகியதாக இருக்கும் சாயல் இளவரசனுக்கும் மருதநம்பிக்கும் உண்டாகியது. அவர்கள் கண்கள் விரிந்துநின்றன.

'என்ன இளவரசரே! என்ன அப்படிப் பார்க்கிறீர்?' என்று கூறியவாறே மெல்ல தலைப்பாகையையும் உடைகளையும் களைந்தார் அவர்.

'ஆ! புலவரா?' என்று வியப்போடு கத்தியேவிட்டான் இளவரசன். 'இது என்ன சுவாமி வேஷம்? இது எல்லாம் எதற்காக?' என்று ஆவலோடு கேட்டான்!

'எல்லாம் மண்டபத்துக்குச் சென்று பேசிக்கொள்ளலாம் வாருங்கள் போகலாம்' என்று கூறியவண்ணம் இளவரசன் தோளில் கையைவைத்து மெல்ல நடந்தார் பிறைசூடியார்.

'அதுசரி; பொன்னி எங்கே?' என்று புலவர் கேட்டு முடிப்பதற்கு முன்பாக 'இதோ வந்துவிட்டேனே! புதிய செய்தி ஏதேனும் உண்டா?' என்று கூறியவண்ணம் குற்றால நாதர் குகையிலிருந்து கையில் பூக்குடலையோடு வந்துகொண்டிருந்தாள் பொன்னிதேவி.

'ஆமாம்; பொன்னி! புதிய செய்திதான்' என்று கூறியவண்ணம் நடந்தார் புலவர்.

மூவரும் ஆவலோடு பின்னே நடந்தார்கள்

'இளவரசே! இன்று காலை நான் மிகவும் அதிகாலையிலேயே புறப்பட்டு போனதற்கு ஒரு புதிய செய்தியும் கிடைக்கத்தான் செய்திருக்கிறது. இளவரசரும், இளவரசியும் காணமற் போனதனல் பாண்டியநாடே பரபரப்படைந்திருக்கிறது. பாண்டிய

வீரர்கள் நாடெங்கும் நாலாபக்கங்களிலும் தேடுகிறார்கள். திருநெல்வேலிப்பக்கம் நான் போனபோது அங்கே இரண்டு வீரர்களைச் சந்திக்க நேர்ந்தது. நான் அப்போது இந்த மாறுவேடத்திலேயே இருந்தேன்.

சிந்து பூந்துறை என்பது தாமிரபரணி நதிக்கரையில் உள்ள ஒரு அழகான பகுதி. சாலையை யடுத்து அங்கிருந்த சாவடியில் என் களைப்பைப் போக்க உட்கார்ந்திருந்த போது தான் அவர்களைக் கண்டேன்.

சந்தனத்தேவன் பிரான்மலைக்குச் சென்றதும் திடுக்கிட்டானும். குடிமக்களையெல்லாம் விசாரணை செய்தானும். ஒன்றும் புலனாகவில்லை. இளவரசனும் இளவரசியும் தப்பி விட்டார்கள் என்று கேட்ட பாண்டியமன்னனுக்கோ ஒரே வியப்பு. சந்தனத்தேவன் இராமநாதபுரம் சுற்றுப் புறங்களில் வீரர்களோடு மாறுவேடத்தில் அலைகின்றானும். உக்கிரப் பெருவழுதி பிரான்மலை போவதாக இருக்கிறானும். பெரும்பாலும் அடுத்த வாரத்துக்குள் பாண்டியனின் படைவீரர் பறம்புநாட்டுக்குப் பயணம் தொடங்கலாம்.

என்று சொல்லி முடித்தார் புலவர்.

'அப்படியா? பூங்காட்டு மண்டபத்தை மன்னன் பார்வையிடச் செல்லலாமோ?' என்று பாரி கேட்டான்.

'இளவரசே! ஏன்? நன்றாகச் செல்வான்?

'அங்குள்ள தமிழ்ச் சுவடிகள் பாதுகாப்பாகப் பேழையுள் வைக்கப்பட்டுள்ளன. மற்றும் பறம்புநாட்டின் பரம்பரை, பரம்பரையாக வரும் ஒரு அழகிய தந்தப் பேழையும் இருக்கிறது. இவற்றை மன்னன் கண்டுவிட்டால்—'

(தொடரும்)

# ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்

## தருமபுரத்தில் :

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ தர்மபுரீஸ்வரர் கோயிலிலிருக்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்கைக்கு 6—5—55 சித்திராபௌர்ணமியன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணைப்படி அபிஷேக ஆராதனைகள் சிறப்பாகச் செய்விக்கப் பெற்றது தருமபுரத்திலுள்ளவர்களும், மற்றவர் களுமாகச்சேர்ந்து காவடி எடுத்தார்கள். விசேஷமேளம் முதலியன ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன, 6—5—55 வெள்ளிக் கிழமை மாலை சுமார் 6 மணிக்குக்காவிரிக்கரையிலிருந்து காவடி புறப்பட்டது. வீதிவலமாகவந்து ஸ்ரீ துர்க்கைக்கோயிலை அடைந்தது. அபிஷேக ஆராதனைகளுக்குப்பின் இரவு சுமார் 11 மணிக்குத் தீபாராதனை நடந்தது. அவ்வமயம் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மற்றைய பெரியோர்களும் வந்திருந்தனர். வழிபாடு சிறந்தமுறையில் நடைபெற்றது.

## மன்மத ஆண்டுப் பிறப்பு :

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி ஆலயத்தில் புது ஆண்டுப்பிறப்பைக் குறித்து ஸ்ரீ அபயாம்பிகா சமேதஸ்ரீ மாயூர நாதசுவாமிக்கு 14—4—55 வியாழக்கிழமை அன்று தருமபுர ஆதினம் 25-ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் ஆணைப்படி அபிஷேக ஆராதனைகள் செய்து சிறப்பு வழிபாடு இயற்றப் பெற்றது. உலக நன்மையைக்கருதி இவ்வழிபாடு செய்யப் பெற்றது. அவ்வமயம் சிறந்த சொற்பொழிவுகளும் நிகழ்த்தப் பெற்றன.

வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்)

"வழிபாடு". வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், (கட்டளை விசாரணை, சீகாழி தேவஸ்தானம்) "தோத்திரம்". ஸ்ரீ சட்டைநாதக்குட்டி (தருமபுர ஆதீனம்) "ஆராதனை", ஸ்ரீ சண்முகக்குட்டி (தருமபுர ஆதீனம்) "திருப்பள்ளித்தாமம்", புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், (தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்), "நித்திய கர்மவிதி", வித்துவான், திரு. ச. சேது. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், (தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்) "திருவிளக்கிடுதல்", சிரோமணி, வித்துவான், திரு. V. சபேசன் அவர்கள், (தமிழாசிரியர், தருமையாதீன நடுநிலைப்பள்ளி) "சமய நூல்", பண்டித திரு. அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள், (தமிழாசிரியர், தருமபுரம்) "நிவேதனம்"

## திருமுல்லைவாயில் கும்பாபிஷேகம் :

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருமுல்லைவாயில் ஆலயத்தில் ஸ்ரீ அணிகொண்டகோதை அம்பாள் சமேத ஸ்ரீ முல்லைவனநாத சுவாமிக்கும் பரிவாரங்களுக்கும் ஜீரணோத்தாரணங்களுடன் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 7—4—55 வியாழக்கிழமையன்று காலை 11-மணிசுமாருக்குச் சிறப்பாக நடைபெற்றது. இரவு மகாபிஷேகமும் வீதியுலாக்காட்சியும் சிறப்புற நிகழ்ந்தன.

கும்பாபிஷேக தினத்தன்று ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்களால் திருமுற்ற ஓதப்பெற்றது. ஆதீன சமயப் பிரசாரக் குழுவினர்கள் வந்திருந்து சமயப்பிரசாரம் செய்தனர். மாலை 4-மணிக்குச் சமயப்பிரசாரம் தொடங்கியது. கீழே குறிக்கப்பட்டுள்ள அன்பர்கள் பலரும் தங்களுக்கெனக் குறித்த தலைப்பில் சிறப்புறப் பேசினர்.

வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், (கட்டளை விசாரணை, சீகாழி தேவஸ்தானம்,) 'பிள்ளையார் தமிழ்', வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள், (தமிழ்ப்பேராசிரியர், ஆதீனக்கீழ்மைக்கலைக்கல்லூரி, தருமபுரம்,) 'அரசர் தமிழ்', திரு. க. வேலாயுத ஓதுவார், அவர்கள், தலைமை

ஆசிரியர், தேவாரப்பாடசாலை, தருமபுரம், 'நம்பி தமிழ்', வித்துவான், திரு, வி. சா. குருசாமி அவர்கள், தமிழ்ப்பேராசிரியர், ஆதீனக் கீழைக்கலைக்கல்லூரி, தருமபுரம், 'அடிகள் தமிழ்', ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், கட்டளை விசாரணை, குறுக்கை தேவஸ்தானம், 'ஒன்பதின்மர் தமிழ்', திரு. வை. கல்யாணசுந்தரம், மாணவர், கீழைக் கலைக்கல்லூரி. 'மூலர் தமிழும் திருமுகாதியும்', திரு. கீ, இராமலிங்க முதலியார் அவர்கள், M. A., மாற்றும் முதல்வர், ஆதீனக் கீழைக்கலைக்கல்லூரி. தருமபுரம். 'சேக்கிழார் தமிழ்'.

## திருநின்றியூர் கும்பாபிஷேகம் :

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருநின்றியூர் ஆலயத்தில் ஸ்ரீ உலகநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ லக்ஷ்மிபுரிசுவர சுவாமிக்கும் பரிவாரங்களுக்கும் ஜீர்ணோத்தாரணங்களுடன் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகங்கம் 7—4—55 வியாழக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. இரவு மகா அபிஷேகமும் வீதியுலாக் காட்சியும் நிகழ்ந்தன.

அன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மௌனப் பெருநாள். அங்ஙனமிருந்தும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் கும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். அவ்வமயம் திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், இளவரசு ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மற்றும் பல பெரியோர்களும் வந்திருந்தார்கள். காலை 11 மணிக்குக் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேக தரிசனத்திற்காக வந்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை ஓலையாம்புத்தூர் திரு. திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் வரவேற்றுப் பணிவன்போடு உபசரித்தார்கள்.

அன்று தருமபுர ஆதீனத் தேவாரப்பாடசாலை மாணவர்களால் திருமுறை ஓதப்பெற்றது. தருமபுர ஆதீன சமயப் பிரசாரக் குழுவினர்களால் சமயப் பிரசாரமும் நிகழ்த்தப் பெற்றது. கும்பாபிஷேகத்திற்குச் சுற்றுப்புறங்களிலிருந்து வந்திருந்த மக்கள் அனைவருக்கும் ஓலையாம்புத்தூர் திரு, திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் இரண்டுநாள் முன்னிருந்தே அறுசுவையுடன் கூடிய உணவை அன்புடன் அளித்தார்கள்.

கும்பாபிஷேக தினத்தன்று மாலை 4 மணிக்கு, தருமபுர ஆதீன சமயப்பிசாரக் குழுவினர்களால் திருமுறை மாநாடு சிறப்புற நடத்தப்பெற்றது.

அவ்வமயம் கீழ்க்காணும் அன்பர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு தங்களுக்கெனக்குறிப்பிட்ட தலைப்பில் சிறந்த முறையில் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

வித்துவான், ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், 'உள்ளங்கவர் கள்வன்', திரு. சிவஞானம் அவர்கள், சமயத்தொண்டர், தருமபுர ஆதீனம், 'மறவாதே நினைக்கின்றேன்', வித்துவான், திரு. ச. சேது. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள், தமிழ்ப்பேராசிரியர். ஆதீனக் கீழைக்கலைக்கல்லூரி, 'அவனருளாலே அவன்தாள் வணங்கு'. திரு. ந. சம்பந்தம் அவர்கள், B. A., Hons. தமிழ்ப்பேராசிரியர், ஆதீனக் கீழைக் கலைக்கல்லூரி, 'சித்தத்துள் தித்திக்கும் தேன்' 'தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம், புலவர். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், 'குருவே சிவம்', திரு. சா. ஞானப்பிரகாசம் அவர்கள், மாணவர், ஆதீனக் கீழைக் கலைக்கல்லூரி, 'திருமுகமும் சிலம்படி வாழ்த்தும்'.

## ஜென்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவத்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல, இம்மாதத்திலும் 4—5—55 புதன்கிழமை திருக்கரவீரம் கரவிரநாத சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆதீனச்சார்பில் செய்விக்கப்பெற்று ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருக்கரவீரத் திருப்பதிகம் என்ற ஆதீன வெளியீட்டை வழங்கி அன்பர்களைக்கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதச் செய்யப்பட்டது

### திருப்பனந்தாளில்:

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர ஸ்வாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்

திருவிழா 26—4—55 முதல் 5—5—55 முடிய மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொருநாளும் மாலை 5 மணிமுதல் சமயச் சொற்பொழிவுகளும் 30—4—55 அன்று தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நிகழ்ந்தன.

26—4—55 செவ்வாய்க்கிழமை மாலை வித்துவான், திரு. எஸ். துரைசாமி ஐயர் அவர்கள் (பிரின்ஸ்பால், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி மயிலம்). 'சிவப்பிரகாசர் செந்தமிழ்', 27—4—55 புதன்கிழமை மாலை தருமபுர ஆதீனப் புலவர், வயிநாகரம், பாலகவி, திரு, வே. இராமநாதன் செட்டியாரவர்கள் ('செட்டி நாடு' ஆசிரியர், தேவகோட்டை.) 'பரஞ்சோதி முனிவர் பைந் தமிழ்', 28—4—55 வியாழக்கிழமை மாலை திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தனூர் அவர்கள் Banker திருவண்ணமலை. 'திரு நீலகண்டர்'. பண்ணிசையரங்கம்: வீணை சங்கித பூஷணம், திரு. R. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள். லய வித்வமணி, திரு. K. பாலகுருநாதம்பிள்ளை அவர்கள். 29—4—55 வெள்ளிக் கிழமை மாலை திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான், 'தொண்டன்' ஆசிரியர், திரு. K. ஆறுமுகநாவலர் அவர்கள் (நாகர்கோவில்.) 'நம்பியாரூரர் நற்றமிழ்',

## திருமுறை விழாவும்
## தேவார வகுப்பு ஐந்தாவது ஆண்டு விழாவும்

30—4—55 சனிக்கிழமை மாலை வித்துவான், திரு. S. V. வரதராச அய்யங்கார், M. A. M. O. L., (தமிழ்த்துறைத் தலைவர் ஜெயின் கல்லூரி, மாம்பலம், சென்னை) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சொற்பொழிவாளர்; வித்துவான், திரு. K. M. வேங்கட ராமையா அவர்கள் M. A. B. O. L., (பிரின்ஸிபால் செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.) 'திருமுறைப் பெருமை', (தருமபுர ஆதீனப் புலவர், பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்,) சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி, வித்துவான் திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள் 'திருப்பாசுரம்', தேவார வகுப்பு மாணவிகளுக்குப் பரிசளிப்பும், இரவு பண்ணிசை வாணர் களுடன் யானைமீது திருமுறைகள் திருவீதியுலாவும் நடை பெற்றன.

1—5—55 ஞாயிற்றுக்கிழமை மாலை தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த சிகாமணி, திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் B. A., L. T., (கணித ஆசிரியர், பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சிபுரம்) 'சிவஞானபோதம்' 3—5—55 செவ்வாய்க்கிழமை மாலை 'சித்தாந்த ஞானபானு' வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் (தமிழாசிரியர், பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.) 'சிவஞான சித்தியார்' வித்துவான், திரு ச. சேதுசுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் (பேராசிரியர், தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி.) 'மாதவக் கலயர்' வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார் அவர்கள், (தமிழ் விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.) 'தாயிலான் தாய்' திரு. கீ. இராமலிங்கம் அவர்கள், M. A. (மாற்றும் முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.) 'திருவடி'.

## திருவையாறு:

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பிரமோற்சவம் 24—4—55 முதல் 9—5—55 முடிய நடைபெற்றது. 29—4—55 தேவாரவகுப்பு ஆண்டு விழாவும் திருவிழாச் சிறப்பு நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. 7—5—55 அன்று ஏழூர்த் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. திரளான மக்கள் வந்து கண்டுகளித்து இன்புற்றனர்.

26—4—55 செய்வாய்க்கிழமை, வித்துவான், திரு. ச. சேது சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், தமிழ்ப் பேராசிரியர். தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி. "திருவையாறும் திருநாவலூரரும்" வித்வான், திரு. சொ. கணபதிதேசிகர் அவர்கள், தமிழாசிரியர், நகராட்சி உயர்நிலைப்பள்ளி, குடந்தை, "கண்ணப்பர் அன்பு"

28—4—55 வியாழக்கிழமை, திருவாவடுதுறை யாதீன மகா வித்துவான், திரு. கே. ஆறுமுக நாவலர் அவர்கள் 'தொண்டன்' ஆசிரியர், நாகர்கோவில். "இறைவன் இயல்பு"

## திருமுறைவிழாவும், தேவாரவகுப்பு ஆண்டு விழாவும்

29—4—55 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி முதல் தொடங்கி நடைபெற்றது, தலைவர், டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார், M. A., L. T., M. O. L., Ph. D. அவர்கள்.

தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை. பேச்சாளர்கள்:- வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள், தமிழ்விரிவுரையாளர், அரசர் கல்லூரி. திருவையாறு. "ஐயாறும் அப்பரும்".

மாலை 5-30 மணிக்கு வித்துவான், திரு. தில்லைக் கோவிந்தப் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், நேஷனல் ஹைஸ்கூல், நாகூர். 'மெய்யுணர்தல்" வித்துவான், திரு. க. முருகேச முதலியார் அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், அரியலூர். "அடியார் பெருமை"

தேவாரப் பாடசாலை மாணவர்களுக்குப் பரிசு வழங்குதல், பண்ணிசைவாணர்களுடன் யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்ச்சி நிகழ்ந்தது.

30—4—55 சனிக்கிழமை, பண்டித, வித்துவான், திரு. B. R. புருஷோத்தம நாயுடு அவர்கள், தமிழாராய்ச்சிப் புலவர், சென்னைப் பல்கலைக்கழகம், "நால்வர்"

1—5—55 ஞாயிற்றுக்கிழமை, திரு. கி. இராமலிங்க முதலியார் அவர்கன் M.A., மாற்றும் முதல்வர், தருமையாதீனக் கிழைக்கலைக்கல்லூரி, "திருவிழா"

3—5—55 செவ்வாய்க்கிழமை தருமபுர ஆதீனப்புலவர், சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி, வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம் "வழிபாடும் பயனும்".

## சீகாழி :

### தேவார வகுப்பின் ஐந்தாவது ஆண்டுவிழா

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 25-4-55 தொடங்கி 8-5-55 முடிய திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. 27-4-55 திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் உண்டருளிய திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருஞானசம்பந்தர்

வரலாற்று அற்புத நிகழ்ச்சிகளும் திருவிழாக்களில் பழைய வழக்கமாக நடைபெற்றன. தேவார வகுப்பு ஆண்டு விழா 26-4-55 அன்று நிகழ்ந்தது. சாத்திர தோத்திர மாநாடு திரு விழா நாட்களில் மாலை 4மணிக்கு நிகழ்ந்து நிறைவெய்தியது.

2-5-55 அன்று இரவு 7 மணிக்கு யானைமேல் திருமுறை திருவீதியுலாக்காட்சி நிகழ்ந்தது. ஆதீனத் தேவாரப்பாடசாலை மாணவர்களாலும் மற்றும் தேவார இசையாசிரியர்களாலும் திருமுறை பாராயணம் நாடோறும் நிகழ்த்தப்பெற்றது.

26—4—55 செவ்வாய்க்கிழமை, விழாத்தலைவர், டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள். M.A., L.T., M.O.L., Ph. D. தமிழ்த்துறைத் தலைவர், தியாகராஜர் கல்லூரி, மதுரை. சொற்பொழிவாளர், வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் தமிழாராய்ச்சிப் புலவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர் 'பண்ணும் பாடலும்' தேவாரவகுப்பு மாணவர் - மாணவிகளுக்குப் பரிசளிப்பு.

## சாத்திர தோத்திர மாநாடு

27—4—55 புதன்கிழமை மாலை 5 மணிமுதல், மாநாட்டுத் திறப்பாளர், திரு. P. ஆறுமுக முதலியார் அவர்கள் B. A., Inspector General of Registrarion, Madras. மாநாட்டுத் தலைவர், திரு. S. சுப்பராய முதலியாரவர்கள், பெருநிலக்கிழார், சீகாழி. சொற்பொழிவாளர், பன்மொழிப் புலவர், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் M.A., M.L., M.O.L., தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் கல்லூரி, சென்னை. 'பாலரு வாயரும் பல திறச் செய்யுளும்'. வித்துவான் திரு. மு அருணா சலம் பிள்ளை அவர்கள், தமிழ் விரிவுரையாளர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 'பன்னிரு பெயர்க் காரணம்'

28—4—55 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு, தலைவர், திரு. C. இராமநாத முதலியார் அவர்கள், பெருநிலக்கிழார், சீகாழி. சொற்பொழிவாளர். சைவசித்தாந்த வித்தகி, திருமதி ஈஸ்வரவடிவம்மையார் அவர்கள் தூத்துக்குடி. 'திலகவதியாரும் தாண்டகச் சதுரரும்' வித்துவான் திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் M. A., B. L., தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்

'நாவலர்கோன் நற்றமிழின்பம்' வித்துவான், திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் M. A., B. O. L., பிரின்ஸிபால், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதசுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள். 'சிவஞானபோதம்'

29—4—55 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு, தலைவர், திரு. S. தியாகராஜ அய்யர் அவர்கள் M. A., சப்-ரிஜிஸ்டிரார், சீகாழி. சொற்பொழிவாளர், புலவர், திருமதி. ந. சி, குழந்தையம்மாள் அவர்கள், நிர்மலா கல்லூரி, கோவை. 'மாணிக்கவாசகரின் மாண்பு' வித்துவான், திரு. S. அரங்கசாமி அய்யர் அவர்கள் B. O. L, இ. ஆர். ஹைஸ்கூல், திருச்சி. 'திருக்கோவையார்' திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்கள் ஆசிரியர், தேவாரபாடசாலை, தருமபுரம், 'மெய்கண்டசிவமும் அருணந்தி சிவமும்'. புலவர், திரு. S. திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் தமிழாசிரியர், சபாநாயக முதலியார் உயர்நிலைப்பள்ளி, சீகாழி, 'உமாபதி சிவம்'.

30—4—55 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு, தலைவர், திரு. K. N. அம்பலவாணப் பிள்ளை அவர்கள் B. A, (Hons) ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர், மாயூரம். சொற்பொழிவாளர், திரு. திருலோகசீதாராம் அவர்கள், ஆசிரியர், 'சிவாஜி' திருச்சி. 'திருவாசகம்' வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், கட்டளை விசாரணை, திருநள்ளாறு 'சிவஞானசித்தியார்' வித்துவான், திரு. M. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள். 'திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும்',

## இசை நிகழ்ச்சி :

இரவு 7 மணி முதல். சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாத முதலியார் அவர்கள் - பாட்டு. தேவார ஆசிரியர், சமயப்பிரசார நிலையம், சென்னை. திரு. T. S. சம்பந்தம் பிள்ளை அவர்கள் பிடில். இசையாசிரியர், இசைக்கல்லூரி, தருமபுரம். திரு. R. சுவாமிநாத அய்யர் அவர்கள் - மிருதங்கம். மிருதங்க ஆசிரியர் தருமபுரம். 1—5—55 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு

H84

தலைவர் திரு. D. முத்தையா முதலியார் அவர்கள் B.A., தாசில் தார், சீகாழி. சொற்பொழிவாளர், வித்துவான் திரு. V. S. குருசாமி அவர்கள், தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக்கல்லூரி. தருமபுரம். "சிவப்பிரகாசமும் திருமந்திரமும்" வித்துவான் திரு. S. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம். "திருமுகப்பாசுரமும் திருவருட் பயனும்" திருமதி S. பாகிரதி அம்மாள் அவர்கள் B.A. (Hons) நெல்லை. 'திருக்குறளும் திருவாசகமும்'

வீணைக் கச்சேரி:

இரவு 7 மணிக்கு, திருமதி. கௌரிகுமாரி அவர்கள் குழுவினர் வீணை. 2—5—55 திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் தலைவர், திரு. M. T. குழந்தைவேலு செட்டியார் அவர்கள் பெருநிலக்கிழார், சீகாழி. திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் M.A., மாற்றும் முதல்வர், கீழைக்கலைக் கல்லூரி, தருமபுரம், "செங்கதிரவன்" தருமை ஆதீன வித்துவான், சித்தாந்த ரத்நாகரம். புலவர். திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம். "செய்யாச் செயல்" இரவு 7 மணிக்கு யானைமீது திருமுறை வீதியுலாக்காட்சி நடைபெற்றது. 3—5—55 செவ் வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் திருமதி A. பட்டம்மாள் அவர்கள் குழுவினர் இன்னிசை நிகழ்ந்தது.

திருக்கடவூர் :

தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி கோயிலில் சித்திரைத் திருவிழா 15—4—55 முதல் 9—5—55 முடிய மிகச் சிறப்பாக நடைபெற்றது 29—4—55 தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நாடோறும் மாலை 6 மணிக்கு சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன. 1—5—55 அன்று காலசம் ஹார த் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

28—4—55 வியாழக்கிழமை மாலை வித்துவான், திரு. S. துரைசாமி ஐயர் அவர்கள் பிரின்சிபால், சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம். 'திருவாளன் திருநீறு'

## திருமுறை விழா

29—4—55 வெள்ளிக்கிழமை காலை திருமுறை விழா தொடங்கியது. அதற்குத் தலைமைதாங்கி திருமுறை விழா வைச் சிறப்பிக்க திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு, வித்துவான் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எழுந்தருளினார்கள். அவர்களை ஸ்ரீமத் முத்துக்குமரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (திருக்கடவூர் கட்டளை விசாரணை) வரவேற்றார்கள். ஸ்ரீ காசிமடம் 'இளவரசு' வித்துவான் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருமுறையின் பெருமைகளையும் 'அதில்சில சிறந்தகருத்துக்களையும், நாயன்மார்களைப்பற்றியும்குறிப்பிட்டு 'திருமுறைவிழா' கொண்டாடுவதின் இன்றியமையாமையையும் விளக்கிக் கூறினார்கள்.

பேச்சாளர்: சித்தாந்த சிகாமணி, தருமபுர ஆதீனப் புலவர். திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் B. A., L. T., பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சீபுரம். 'உள்ளம்கவர் கள்வன்' வித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சீபுரம், 'பகவனுரைப் பரவு சொல்மாலை' வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம். 'அந்தணர் பிரியாத சிற்றம்பலம்' வித்துவான், திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் M. A., B. O. L., பிரின்சிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள். 'நினைப்பவர் மனம் கோயில்' வித்துவான், திரு. S. V. வரதராஜ அய்யங்கார் M. A., M. O. L., பேராசிரியர், ஜெயின்கல்லூரி, சென்னை. "அன்னம்பாலிக்கும் தில்லை" தருமபுர ஆதீனத்திலுள்ள வித்துவான்கள்; திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை, 'பேசாதநாள் பிறவாதநாள்' திரு. சொ. சிங்காரவேலன், "மீளா அடிமை" வி. சா. குருசாமி, "அண்ணிப்பான்" திரு. முத்து சு. மாணிக்க வாசக முதலியார் 'ஆனந்தக் கனி' திருவிடைமருதூர் ஆதீனம் ஹைஸ்கூல், தமிழாசிரியர், வித்துவான், திரு. மு. நடராசதேதிகர் 'நமச்சிவாயப் பழம்' தருமையாதீன நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர், கை. முருகையாப் பிள்ளை B.A.L.T. 'புராணம் பொது' இரவு யானைமேல் திருமுறைகள் நகர்வலம் வந்தது. 30—4—55 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள், தமிழாசிரியர், தருமையாதீன நடுநிலைப்பள்ளி, 'கடவூரில் நாவரசர்' திரு. சிவசம்பு அவர்கள், மாணவர், பல்கலைக் கல்லூரி, 'கருணைக் கடல்'.

## REVIEWS:

### Shakespeare on Sivananda by Swami Omkarananda.

Rs. 1—0—0

Swami Omkarananda is steeped in shakespeare and is an ardent young disciple of Swami Sivananda. He finds by a stretch of the imagination that shakespear's moral ideals and philosophical dicta become exemplified in the life and conduct of his Guruji. He has made an elaborate analysis of the great and admirable trait of his Guruji and has tried to document them with quotations from Shakespeare. Quaint as the method is, it is admirably pursued and undoubtedly speaks volumes about the writers' mastery of the English dramatist's entire works as well as of his penetrating study of the unplumbable spiritual profundities of his great Master. The quotations are implemented in a dexterous way to des cribe the dazzling personality of Swamiji and the eloquence and imagination of Shakespeare seem to aid the language to soar high enough to fulfil the difficult task. The reader will not fail to congratulate the writer on his ingenious device.

### Swami Satyananda, His life and work, Edited by SWAMI Sivananda—Krishnananda Rs. 1—8—0

This is the thirtyfirst birth day souvenir of Swami Satyananda. Many eminent men have in their appreciations tried to illuminate his spiritual personality. Swami Satyananda is a young man moulding his life on the pattern of an upanishadic Rishi. Of him Swami Sivanandaji Says "Few would have such Vairagya at such a young. age Swami satyanandaji is full of the Nachiketas element.........He is a versatile genius and a linguist too......... an ideal Sadhak and Nishkamya Sevak. He is a pillar of the Divine life mission". The collection of the felicitations contains both the English and the Hindi sections

# வருங்காலம்

ஜோதிஷார்ணவம்

பிர்மஸ்ரீ முத்துசோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்

(மன்மத-ஷூ வைகாசிமீ 1-உ முதல் 31-உ முடிய)

(15—5—55 முதல் 14—6—55 முடிய)

**1. மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

அசுவதி நான்குபாதங்களும் பரணி முதல் பாதமும் சுபத்தையும் லாபத்தையும் சந்தோஷத்தையும் தரும் பரணி 2, 3, 4 பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் நஷ்டங்களையும் ரோகத்தையும் அபவாதத்தையும் பீதியையும் உண்டுபண்ணும். மாதக்கடைசி 4 தினங்களில் 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

**2. விருஷபம்** கார்த்திகை $\frac{3}{4}$ ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$

விருஷபராசி 9 பாதங்களும் மாதம் முதற்பாதியில் விசேஷ சுபமாகவும் லாபகரத்தோடும் சுபசோபனுதி மங்கள காரியங்களோடும், பந்து மித்திராளுடைய சேர்க்கையோடும் சந்தோஷமாய் நடக்கும். பிற்பாதியில் நேர்மாறான பலனைத்தந்து கவலைகளைக் கொடுக்கும். சனி செவ்வாய் நலன் தரும்.

**3. மிதுனம்:** மிருகசீரிஷம் $\frac{1}{2}$ திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் கிரஹணத்திலிருந்து விடுபட்ட சந்திரனைப்போல் பிரகாசித்து ஆபத்துக்களை கொஞ்சம் கொஞ்சமாய் நீக்கும். பூரண சுபமிராது. தேவகோபம் ஏற்பட்டு குலத்துக்கு தோஷ சூசனையைக்காட்டும். சனியும் வியாழனும் சுபமாகும்.

**4. கடகம்:** புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம், ஆயில்யம்,

புனர்பூசம் நாலாம் பாதமும் ஆயில்யம் பூராவும் நன்கு நடக்கும், ஜயம் அடைதல் சத்துருக்கள் சரண் அடைதல், நஷ்டதனம் கிடைத்தல் தொழில் மேன்மை மேலோர் அன்பு இவைகள்கிட்டும். பூசம் நான்கு பாதங்களும் ரொம்ப சிரமத்தைப் பலவிதத்திலும் கொடுத்து நாஸ்தீகத்தை விருத்திசெய்து பயத்தையும் தரும். வெள்ளி ஞாயிறு சுபமாகும்.

**5. சிம்மம்:** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகம் நான்கு பாதங்களும் வெற்றியைத்தந்து ஜயபேரிகை யுடன் சஞ்சாரத்தையும் தரும். பூரம் அதிக உழைப்பின்பேரில் நான்கு பாதங்களும் லாபம்தரும். உத்திரம் முதல்பாதம் கவலை யோடு ஓடும். மொத்தத்தில் சிம்மராசி பலன் பூராவுமே தொழி லாளிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் துக்கமில்லாமல் நடக்கும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

**6. கன்னி:** உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

உத்திரம் 2. 3. 4. பாதங்களும் முதல்மாதம் போலவே நடப்பதோடு கொஞ்சம் நன்மைதரும் மேலோர் பெரியோர் அன்பினுல் வெகுகாலமாய் எதிர்பார்த்தகாரியம் சாதனமாகும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் மகாபுண்ணிய பலன்களையும் விசேஷ கீர்த்தியையும் அசாத்தியமெல்லாம் சுபமாக சாதித்த தாயும் எங்கும் நிறைந்த கீர்த்தியையும் லாபத்தையும் தந்து சகலகாரியங்களும் விஜயமாய் நடக்கும். (வியாழன் வெள்ளி சுபவாரமாகும்) சித்திரை முதல் இரண்டு பாதங்களும் உல்லா சத்தையும் சந்தோஷ காரியங்களையும் தந்து புத்திரவர்க்கமூலம் லாபத்தையும் தரும்.

**7, துலாம்:** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$

விசாகம் 3 பாதங்களும் சயமிராது ஏப்போதும்போலவே நடக்கும் மற்ற இருநக்ஷத்திரபலனும் ஜயம் சத்துருநாசம் தெய் வீகத்தன்மை நினைத்ததெல்லாம் கைகூடுதல் எங்கும் கீர்த்தி தொழில்விருத்தி கட்டடவேலைகள்மூலம் சிலசுபங்கள் ஏற்படல் சஞ்சாரத்தால் விசேஷ லாபங்கள் ஏற்படல். முதலிய நன்மை யான பலன்கள் நடக்கும். வெள்ளியும் சனியும் சுபமாகும்.

**8. விருச்சிகம்:** விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் ஷ மாதம் மஹா சந்தோ ஷத்தையும் தந்து தொழில் செய்பவர்களுக்குத் தொழில் மேன் மையும் வியாபாரிகளுக்கு லாபமும் சாதுக்களுக்கு தெய்வபலம் ஓங்குதலும் பிரபு ஜனங்களுக்கு மனம் சாந்தியடைதலும் ஏற்படும். செவ்வாயும் புதனும் சுபமாகும்.

9. தனுசு: மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலம், பூராடம் இருநக்ஷத்திரபலனும் பூரா சுபமிராது கஷ்டநஷ்டங்கள் மாறிமாறி நடக்கும். அதிக செலவினங்கள் ஏற்படும். நினைத்தபடியெல்லாம் நடவாது. உத்திராடம் முதல் பாதம் வியாதி சாந்தியாகும், ஜயமுண்டாகும். ஸ்தாவர ஜங்க சொத்துக்கள் சேரும், மனம் சந்தோஷமடையும், இல்லற சுகம் கிட்டும். புதன் வியாழன் சமபலனையும் சனி சுப பலனையும் தரும்.

10 மகரம்: உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$

திருவோணம் நான்கு பாதங்களும் சுபமாகும். உத்தியோக லாபம் பெரியோர் அன்பு கீர்த்திப்பத்திரம் கிடைத்தல். சுப சோபனுதி பலன்கள் கிடைக்கும். உத்திராடம் 2. 3. 4-ம் அவிட்டம் 1. 2. பாதங்களும் மிசிரபலனைத்தரும். மனம் சாந்தியடையாமல் சதா அல்லல் பட்டுக்கொண்டே யிருக்கும் சனி ஞாயிறு சுபமாகும்.

11 கும்பம்: அவிட்டம் $\frac{1}{2}$ சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாத பலனும் சென்ற மாதம்போலவே இருப்பதோடு துர்ப்புத்தியையும், நாஸ்திகத்தையும் வஞ்சகத்தன்மையையும் தந்து லோகாபவாதத்தால் துக்கம் உண்டுபண்ணும் சனி ஞாயிறு சுபமாகும்.

12. மீனம்: பூரட்டாதி $\frac{1}{4}$. உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி நாலாம்பாதம் மிசிரமாய் நடக்கும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் பொறுப்பில்லாமலும் ருசி இல்லாமலும் ஓடும். ரேவதி நான்கு பாதங்களும் சந்தோஷகரமாய் ஓடிக்கொண்டிருக்கும். சனியும் வியாழனும் சுபமாகும்.

---

குறிப்பு: இம்மாதம் உலகநிலையில் வடநாட்டில் அதிக மழையாலும் பூமி சம்பத்தாலும் உள்நாட்டுக் கலஹத்தாலும் சிரமம் உண்டுபண்ணும். தெய்வபலத்தால் பூரா சுபமுண்டாகும்.

தருமபுர ஆதீன வெளியீடு :

# திருஞானசம்பந்தர் தேவாரம்

## முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளவர்கள் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் எழுதிய குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக் குறிப்புக்களும் இதில் அமைந்துள்ளன. அற்புதச் செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ், பக்கங்கள் 768.

**விலை விவரம் :-**

| | | |
|---|---|---|
| **ராப்பர் பைண்டு:** | .... | ரூ. **3—8—0** |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | ... | **1—5—0** |
| **காலிகோ பைண்டு:** | ... | **5—0—0** |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | ... | **1—8—0** |

**கிடைக்குமிடம் :-**

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம்.
   பொருளாளர் :-
2. ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,
   வைத்திசுவரன்கோயில்.
3. ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.
4. ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.
5. ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.
6. ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம்,
   திருப்பனந்தாள்.
7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலையம்,
   41, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை—17.

# அறிவிப்பு

## தருமபுரம் ஆதீனம் கீழைக்கலை நடுநிலைப்பள்ளி

இந்த இத்தகைய பள்ளி சென்ற மூன்று ஆண்டுகளாக நடைபெறுகிறது. இங்கு ஒரு ஆண்டுக்கு ஒரு படிவமாக முறையே மூன்று படிவங்களும் வைத்து நடத்தப் பெறுகிறது. அதே போன்று இவ்வாண்டும் நான்காம் படிவம் தொடங்கப்பெறுகிறது. இப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் S. S, L. C. தேர்விற்கு அனுப்பப்பெறுவார்கள். இதில் தேர்வு பெற்ற மாணவர்கள் மற்ற உயர்நிலைப்பள்ளிகளில் தேர்ச்சிபெற்றவர்களைப் போன்றே தொழில் முதலிய நலம் பெறத்தக்கவர்கள். கல்லூரிகளில், விஞ்ஞானம் கணக்கு, இவ்விரண்டையும் தவிர மற்றைய பகுதி களில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். அன்றியும் டாக்டர், இஞ்சினீயர் தொழில் அல்லாமல் மற்ற எல்லாத் தொழிலுக்கும், தொழிற்படிப்புக்கும் செல்லலாம். இங்கு மாணவர் சம்பளம் இல்லாமல் படித்துப் பயன் பெறுகிறார்கள். மற்ற உயர்நிலைப் பள்ளிகளைப்போல எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படுவதொடு இங்குத் தமிழ்ப்பாடம் அதிகமாகக் கற்பிக்கப் பெறுவது குறிப் பிடத் தக்கது. இஃது எல்லோருக்கும் அரியதொரு வாய்ப்பு.

## மாணவர் கழக ஆண்டுவிழா

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளியில் விளையாட்டுப் போட்டியும், குருஞானசம் பந்தர் மாணவர் கழக ஆண்டுவிழாவும் சென்ற 30—4—55 அன்று கொண்டாடப் பட்டன. விளையாட்டுப் போட்டிக்கு மாயூரம் கூற்றகப் பாதுகாவலர், (Sub Inspector of police) திரு. C. P. அருணாசலம் B.A. அவர்களும், மாயூரம், ஜயா ஸ்போர்ட்ஸ், திரு. எ. அரிகிருஷ்ண நயினார் (நகராண்மைக் கழக உறுப்பினர்) அவர் களும் நடுவராக (Judges) இருந்தனர்.

விழாவுக்கு மாயூரம், துணை நடுவர் (Sub Judge) திரு. சாரங்கபாணி முதலியார் B.A., B.L., அவர்கள் தலைமை வகித் தார்கள். இசைப்போட்டி, தேவாரம், திருக்குறள் ஒப்பித்தல் முதலிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அன்னார் பரி சுகள் வழங்கினார்கள். இரவு 'அசோகர் மனமாற்றம்' என்ற நாடகம், பள்ளி மாணவர்களால் நடிக்கப்பெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram). 10—5—1955.